
கோகுலம்

GOKULAM
ஜூலை '93 ரூ. 3.00



AHEAD OF ACTION



Action has always been part of my success.
Through all the excitement, through all the glory and actio
action® always keeps me ahead.



SHOES FOR THE NEW GENERATION.

action®

SHOES

கோகுலம்



1993 ஜூலை

மாத இதழ்

மலர் : 11 இதழ் : 6

அருமைச் சிறுவர் சிறுமியரே,

எல்லோருக்கும் அன்பு வணக்கம்.

இந்த இதழ் கோகுலம் உங்கள் கைகளில் இருக்கும் போது, அநேகமாக எல்லோருமே புது வகுப்பு; புதுப் பள்ளிக்கூடத்தில் இருப்பீர்கள். புதிய நண்பர்களை, புதிய ஆசிரியர்களைச் சந்திப்பதும், பழக்கம் ஏற்படுத்திக் கொள்வதும் எவ்வளவு மகிழ்ச்சியான அனுபவங்கள்! இவற்றையெல்லாம் பற்றிக் கூட நீங்கள் கோகுலத்திற்கு எழுதலாமே?

அண்மையில் எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதை எழுதியவர் கோகுலம் வாசகத் தம்பி ஒருவனின் தந்தையார். அந்தத் தம்பி, ஒழுக்கம் கெட்ட நண்பர்களுடன் சேர்ந்து ஊரைச் சுற்றி வீண் பொழுது போக்கி, இந்த ஆண்டு தேர்வில் தேறாது, பழைய வகுப்பிலேயே நிறுத்தப்பட்டு விட்டானாம். வீட்டை விட்டு ஓடிப் போக முயற்சிக்கிறானாம். அந்தத் தம்பி தீவிர கோகுல வாசகன் என்பதால், அந்தத் தம்பிக்கு அறிவுரை கூறி ஒரு கடிதம் எழுதுமாறு கேட்டிருந்தார். நானும் எழுதினேன்.

இதை நான் எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால் மாணவப் பருவம் என்பது வாய்ப்பாட்டைப் போன்றது. வாய்ப்பாட்டைத் தப்பும் தவறுமாக மனப்பாடம் பண்ணி விட்டால், போடுகின்ற கணக்குக்கு எப்படிச் சரியான விடை கிடைக் கும்? மாணவப் பருவத்தில், சில அடிப்படை நல்ல பழக்கங்களை நீங்கள் கண்டிப்பாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். உங்களுக்குப் பிடித்திருக்கிறதோ இல்லையா, ஒரு கட்டுப்பாட்டிற்காகவாவது நீங்கள் சில நல்ல பழக்கங்களைக் கைக்கொள்ள வேண்டும். இதில் கவனக் குறைவாக இருந்து விட்டால், வேண்டாத கெட்ட பழக்கங்கள் தானாகவே வந்து குடிகொண்டு விடும். விளைவு அந்தத் தம்பியின் கதைதான்! பெற்றோரும், ஆசிரியர்களும் நீங்கள் தவறு செய்யும் போது, கண்டித்து, திருத்தி நல்வழிப்படுத்தவே இருக்கிறார்கள் என்ற எண்ணத்தை மனதில் வளர்த்துக் கொள்ளுங்கள். உங்களைக் கண்டிப்பதால் அவர்களைப் பகைவர்களாக எண்ண ஆரம்பித்து விடாதீர்கள். இதனால் பாதிக்கப்படுவது நீங்களாகத்தான் இருக்கும். உங்களுக்குப் பிடிக்காததைக் கூறுகிறார்கள் என்பதற்காக வேண்டாதவர்கள் பட்டியலில் சேர்ந்து விடுவதா?



சாலையில் சைக்கிளில் போகிறோம். "இடது பக்கம் போ" Keep Left என்று சாலை விதி கூறுகிறது. இடது பக்கம் போகப் பிடிக்கவில்லை என்று வலது பக்கம் போனால், இழப்பும் அழிவும் யாருக்கு? நமக்குப் பிடிக்கிறதோ பிடிக்கவில்லையோ, சமுதாய நலனுக்காக நாம் சில விதி முறைகளுக்குக் கட்டுப்பட்டே ஆக வேண்டும். இது உங்களுக்கும், மற்றவர்களுக்கும், ஏன் நாட்டுக் கும் கூட நல்லது. பெரியவர்களானதும் நீங்களே இதன் உண்மையை உணர்வீர்கள்.

புதிய தொடர்கதை இந்த இதழில் ஆரம்பமாகி விட்டது. புதுப் பகுதிகளும் தொடங்க உள்ளன. உங்களுக்கு மகிழ்ச்சிதானே?

கோகுலத்தை நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்தி, காசு கொடுத்து வாங்கிப் படிக்க வையுங்கள். சந்தா கட்டி விட்டால் தவறாது வீட்டுக்கே தேடி வருமே?.

அன்புடன்,


(கௌரவ ஆசிரியர்)

உயிர்களிடத்தில் அன்பு வேணும்
தெய்வம் உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்.

கோகுலம்

ஜூலை 1993

இந்த இதழில்... இந்த இதழில்... இ




குருவாவது வரதாவது பக்கம் - 27

ரங்கனுக்கு உதவிய தங்கப் பறவை
பக்கம் - 45




... இந்த இதழில்... இந்த இதழில்... இந்த இதழில்... இந்த இதழில்... இந்த இதழில்




❋ ஹைடர் ஜக்கு பக்கம் - 17

❋ சில்வர் பிஷ் முட்டையிடுமா? பக்கம் - 67



ந இதழில்... இந்த இதழில்... இந்த இதழில்... இந்த இதழில்... இந்த இதழில்... இந்த



முன்னொரு காலத்தில் ஒரு மன்னன் இருந்தான். அவனுக்கு கதைகள் கேட்பதென்றால் மிகவும் சந்தோஷம். தினந்தோறும் ஒரு புதிய கதை சொல்ல ஆட்களை அழைத்து வரச் சொல்லி தன் வீரர்களை நாட்டின் நாலா பக்கங்களுக்கும் அனுப்புவான்.

கதை சொல்ல ஒரு நிபந்தனை உண்டு. ஏற்கெனவே மன்னன் கேட்டிருந்த கதையை யாராவது கூறினால், உடனே கதை சொல்பவருடைய தலை வெட்டப்படும். அதுதான் நிபந்தனை.

மன்னன் ஒரு குறிப்பிட்ட கதையைக் கேட்டிருக்கிறானா இல்லையா என்பது மற்றவர்களுக்கு எப்படித் தெரியும்? எனவே, தினந்தோறும் பல தலைகள் வெட்டப்பட்டு வந்தன.

அதனால் ஒருவருமே புதிய கதை சொல்ல மன்னரிடம் வர பயப்பட்டனர். மன்னனின் வீரர்களோ கதை சொல்பவர்களைத் தேடித் தேடி அலுத்தனர்.

இறுதியில் மன்னன் வீரர்களை மிரட்டினான். ''யாரேனும் ஒரு கதை கூறுபவனை நீங்கள் பிடித்துக் கொண்டு வராவிடில் உங்கள் தலைகளுக்கும் ஆபத்து'' என்றான்.

ஏ.ராகவேந்திரா

எதிர்பாராத விதமாக, அந்த நேரத்தில் ஒருவன் தைரியமாக முன் வந்து - மன்னனுக்குக் கதை சொல்ல ஒப்புக் கொண்டான்.

மன்னனுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அந்த இளைஞனை ஓர் இருக்கையில் உட்கார வைத்தான்.

''உம்! கதையை ஆரம்பி'' என்றான்.

இளைஞன் கதையைத் தொடங்கினான்.

''நீண்ட காலத்திற்கு முன்னர் உங்கள் தாத்தாவும், என் தாத்தாவும் சேர்ந்து ஒரு நெற்களஞ்சியத்தைக் கட்டினர். அது மிகப் பெரிய களஞ்சியமாக இருந்தது. அந்தக் களஞ்சியத்தின் ஒரு மூலையிலிருந்து ஒரு அணில் மற்றொரு மூலைக்கு ஓட ஒரு நாள் பிடிக்கும். அவ்வளவு பெரியது. அதைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருக்கிறீர்களா அரசே?'' என்றான்.

''இல்லை நான் கேள்விப்பட்டதில்லை'' என்றான் மன்னன்.

''அப்படியானால், இன்றைக்கு இவ்வளவு போதும், மீதிக் கதையை நாளை வந்து சொல்கிறேன்,'' என்று புறப்பட்டான் அந்த இளைஞன்.

அடுத்த நாள் வந்து கதையைத் தொடங்கினான்.

''உங்கள் தாத்தாவும், என் தாத்தாவும் சேர்ந்து கட்டிய நெற்களஞ்சியம் நினைவு இருக்கிறதா?'' என்றான்.

''அதில் அவர்கள் இருவரும் சேர்ந்து ஒரு பெரிய காளையை வளர்த்தனர். அதன் கொம்புகள் மிக அகலமாக இருந்தன. எவ்வளவு அகலம் என்றால் ஒரு குருவி ஒரு கொம்பிலிருந்து மற்றொரு கொம்பிற்குப் பறந்து செல்ல ஒரு நாள் பிடிக்கும். அதைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?'' என்றான்.

''இல்லை'' என்றார் மன்னர்.

''அப்படியானால் இன்றைக்கு இது போதும். நான் நாளை வருகிறேன்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டான்.

மன்னனுக்குக் கோபம் வந்தது. ''இரு இரு,நீ என்னையா ஏமாற்றப் பார்க்கிறாய்! உன்னை என்ன செய்கிறேன் பார்!'' என்று மனதிற்குள் உறுமிக் கொண்டார்.

அடுத்த நாள் காலை மன்னர் தமது சபையைக் கூட்டி எல்லோரிடமும் ''இன்று அந்த இளைஞன் கதை கூறும் பொழுது, அதை நான் ஏற்கெனவே கேட்டிருப்பதாகக் கூற வேண்டும்'' என்று உத்தரவிட்டார்.

மூன்றாம் நாள் இளைஞன் வந்து கதையைத் தொடங்கினான்.

''உங்கள் தந்தையும், என் தந்தையும் அண்டை நாட்டு மன்னர்களாக இருந்த போது உங்கள் தந்தையார், என் தந்தையிடமிருந்து நான்கு மூட்டை தங்கத்தை கடனாக வாங்கி அதை நான்கு குதிரைகளில் ஏற்றிச் சென்றார். அதை நீங்கள் கேட்டு இருக்கிறீர்களா?'' என்றான்.


சபையோர்களுக்கு மன்னரின் உத்தரவுதான் நினைவில் இருந்தது. அவர்கள் அனைவரும் ஒருமுகமாக ''ஆமாம்! ஆமாம்! நாங்களும் அதைப் பற்றிக் கேட்டிருக்கிறோம்'' என்றனர்.

''அப்படியானால், பிரபோ, நீங்கள் அந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்'' என்றான் இளைஞன்.

மன்னர் விழித்தார். சபையோர்கள் அனைவரும் மன்னர் கடனாளிதான் என உறுதிப்படுத்திவிட்டனர். வேறு வழி இல்லாமல் தனது கருவூலம் முழுவதையும் சுரண்டி எடுத்தான். அப்படியும் ஒரு மூட்டை தங்கம்தான் சேர்ந்தது! அந்த இளைஞன் ஒரு மூட்டைத் தங்கத்தையும் எடுத்துக் கொண்டு, மீதியைப் பின்னர் வந்து, வாங்கிக் கொள்வதாகச் சொல்லிப் புறப்பட்டான்!

அதற்குப்பிறகு மன்னருக்குக் கதை கேட்கும் ஆசையே போய் விட்டது!





மரியாதையாக் கொடுத்திடு!

சந்துருவும் முரளியும் விடுமுறைக்காகத் தம் மாமா வீட்டிற்கு வந்திருந்தனர். சின்னப் பிள்ளைகளான அவர்களில் சந்துரு மூத்தவன். முரளி இளையவன்.

''டேய் மாமா கொடுத்த சாக்லெட் எனக்குத்தான். மரியாதையா கொடுத்திடு'' - மிரட்டினான் சந்துரு.

''கொடுக்காவிட்டால் என்ன செய்வே?'' - எதிர்ப்பதற்குத் தயாராக முரளி நின்றான். காலையிலேயே இருவரும் சாக்லெட்டிற்காக சண்டை போட்டுக் கொண்டிருக்க, பேப்பர் படித்துக் கொண்டிருந்த மாமா தலை நிமிர்ந்தார்.

''சந்துரு, முரளி இங்க வாங்க'' என்றழைத்தார். இருவரும் வந்து,'' என்ன 'அங்கிள்'? என்றனர்.

''எதுக்காக இப்படி சண்டை போடறீங்க?''

''அது வந்து... வந்து அங்கிள் நீங்க எனக்கு கொடுத்த சாக் லெட்டை முரளி எடுத்துக் கிட்டான். அதான் அங்கிள் சத்தம் போட்டேன்!'' என்றான் சந்துரு.

''அப்பாடியா சந்துரு? இப்ப நான் ஒரு கேள்வி கேட்பேன். அதற்கு நீங்கள் பதில் சொல்லணும். சரியா?'' என்றார் மாமா. இருவரும் தலை ஆட்டினர்.

''சந்துரு, முரளி! நீங்க நாயைப் போல வாழணும்னு ஆசைப்படறீங்களா? காகத்தைப் போல் வாழ ஆசைப்படறீங்களா?''

''ஒண்ணுமே புரியலையே அங்கிள்'' என்றான் சந்துரு.

''சந்துரு, நாயை எல்லோரும் நன்றியுள்ள பிராணின்னு சொல்வாங்க. ஆனா அதுக்குக் கூடி வாழத் தெரியாது. எப்ப எச்சில் இலை போட்டாலும், கூட வர நாயை துரத்தி சண்டை போட்டு இலையைக் கிழிக்க தானும் சாப்பிடாம பிற நாயையும் சாப்பிட விடாம பண்ணும்.

ஆனா காகம் எப்ப எங்க சிறு உணவு கிடைச்சாலும் தன் இனத்தைக் கூவி அழைத்து, உணவைப் பகிர்ந்து உண்ணும்!'' என்று கூறிய மாமா, ''இப்ப சொல் லுங்க! நீங்க யாரைப் போல வாழப் போறீங்க?'' என்றார்.

''காகம் போல!'' என்று நொடியில் கூறினான் சந்துரு.


''ஆனா, நீங்க சின்ன சாக்லெட்டுக்கே சண்டை போட்டுக் கொள்கிறீர்களே!'' - வசமாய் மடக்கினார் மாமா.

மறுநிமிடம் தன்கையில் இருந்த சாக்லெட்டில் பாதியை சந்துருவிடம் தந்த முரளி, ''இப்ப சரியா அங்கிள்!'' என்றான்.

மாமா சந்தோஷமாகப் பேப்பர் படிக்க ஆரம்பித்தார்!



– எஸ். சுரேஷ்பாபு,
நத்தம்.



தூணிடம் தோற்றவன்!

ஜானகி மணாளன்

அந்தப் பையனுக்குப் பத்து வயதுதான் இருக்கும். வழக்கமாக அவன் தெருவில் உள்ள சிறுவர்களுடன் சேர்ந்துதான் விளையாடுவான்.

ஒரு சமயம் பள்ளி விடுமுறை வந்தது. தெருக் குழந்தைகள் எல்லாம் விடுமுறையை உல்லாசமாகக் கழிக்க வெளியூரில் சென்று விட்டனர். எனவே, அந்தச் சிறுவனுடன் சேர்ந்து விளையாடத் துணை யாரும் இல்லை.


பெரியவர்களுடன் பேசிப் பொழுதைக் கழித்தான். புத்தகங்கள் படித்தான், அல்லது தெருவில் போவோர் வருவோரை வேடிக்கை பார்த்தான். அப்படியும் பொழுது போகவில்லை. கூடத் துணை யாரும் இல்லாமல் அவனால் எந்த விளையாட்டையும் விளையாட முடியவில்லை.

ஒரு நாள் பொழுது போகாமல் பித்தே பிடித்து விடும் நிலைக்கு அவன் வந்து விட்டான். அதைக் கவனித்து விட்ட அவன் அத்தை ''ஏண்டா, இப்படிச் சோம்பேறியாக அமர்ந்திருக்கிறாய்? ஏதாவது விளையாடேன்'' என்றாள்.

''நான் மட்டும் தனியாக இருந்து கொண்டு, என்ன விளையாட்டை விளையாடுவது?'' என்று அவன் அலுத்துக் கொண்டாலும் தான் மட்டும் தனியாக இருந்து கொண்டு என்ன விளையாடலாம் என்று யோசித்துப் பார்த்தான். ஒவ்வொரு விளையாட்டாக மனதுக்குள் நினைத்துப் பார்த்து, ''அது சரிப்பட்டு வராது'' ''இது சரிப்பட்டு வராது'' என்று ஒவ்வொன்றாக ஒதுக்கித்

தள்ளினான். திடீரென்று அவனுக்கு ரொம்ப ரொம்பப் பிடித்த விளையாட்டு ஒன்றின் நினைவு வந்தது. தாயக் கட்ட ஆட்டம்தான் அது.

அவன் வீட்டில் தாயக்கட்டத்தை



ஒரு அட்டையில் வரைந்து வைத்திருந்தனர். அதை எடுத்து வர அவன் உள்ளே ஓடினான்.

''அத்தை... அத்தை தாயக்கட்டம் ஆடுகிறேன். அந்த அட்டையை எனக்கு எடுத்துக் கொடேன்...!'' என்றான்.

''தாயக்கட்டமா...? அதை நீ மட்டுமாக எப்படித் தனியாக விளையாடுவாய்...?'' என்றாள் அத்தை.

அத்தை சொன்ன பிறகுதான், அவனுக்கு அது நினைவுக்கு வந்தது. ''ஆமாம், தாயக்கட்டம் விளையாட இன்னொருவர் வேண்டுமே...? என்ன செய்வது...?'' - அவன் யோசித்தான்.

ஒரு யோசனை தோன்றியது. அத்தை தாயக்கட்ட அட்டையையும் தாயக் கட்டைகளையும் தந்தாள்.

அதை வாங்கிக் கொண்டு சிறுவன் தன் வீட்டுத் திண்ணையில் இருந்த தூணுக்கு அருகில் போய் அமர்ந்தான்.

அட்டையைப் பிரித்து, அந்தத் தூணுக்கும் தனக்கும் இடையில் வைத்துக் கொண்டான்.

பிறகு சொன்னான், ''ஏ தூணே... நீயும் நானும் இப்போது தாயக்கட்டம் ஆடலாம். என்னுடைய வலது கைதான் நீ... இடது கை என்னுடையது... என்ன சரிதானே...?'' என்றான்.

இப்படித் தனக்குத்தானே நிபந்தனைகளை ஏற்படுத்திக் கொண்டு, அச் சிறுவன் அந்தத் தூணுடன் தாயக்கட்டம் ஆடத் தொடங்கினான்.

''சரி... முதலில் நீ ஆடு...'' என்றவாறு, தாயக்கட்டையை வலது கையில் எடுத்துச் சுழற்றி வீசினான். அப்போது விழுந்த எண்ணிக்கை தூணினுடையது. அதற்குரிய காயை நகர்த்தினான்.

அதன் பிறகு இடது கையில் கட்டையை எடுத்துச் சுழற்றி வீசினான். அது அச் சிறுவனுடைய ஆட்டம். அப்போது விழுந்த எண்ணிக்கை அவனுடையது. தன் காயை நகர்த்திக் கொண்டான்.

இவ்வாறு தனக்கும் அந்தத் தூணுக்குமாகத் தாயக்கட்டையை மாற்றி மாற்றி வீசி விளையாட்டைத் தொடர்ந்தான்.

சற்று நேரத்திற்கெல்லாம் விளையாட்டு ஒரு முடிவுக்கு வந்து தூண்


INDIA'S LARGEST SELLING COMICS
DIAMOND COMICS
MAHABALI SHAKA & A Bloody Revolution
Sticker Free
Pran's CHACHA CHAUDHARY Treasure of King Ashoka
Cartoonist Pran's
mous Characters
hacha Chaudhary
and Sabu's
New Comic
FREE! Magnetic Sticker With this Comic
CHACHA BHATIJA & Serpent Killers
Jinn's Mask Free
LAMBU MOTU'S ENEMY
Sticker Free
DIAMOND COMICS DIGEST PHANTOM-25
Magnetic Sticker Free
AGNIPUTRA ABHAY & Onig Chick Pang
FREE! Audio Cassette With this Comic
DIAMOND COMICS DIGEST Pran's PINKI-6
Magnetic Sticker Free
Participate in the DIAMOND COMICS PRIZE COMPETITION and win Forty Thousand Rupees in the form of 1000 Prizes. Forms/ coupons will be published in the June-July 93 sets of comics. The last date of receiving entries is 15th Aug. 1993.
NEW MINI COMICS
• He Man-9 • He Man-10
• He Man-11 • He Man-12
DIAMOND COMICS (P) LTD. 2715, DARYA GANJ, NEW DELHI-110002

ஜெயித்து விட்டது! சிறுவன் அந்தத் தூணிடம் தோற்று விட்டான்!

''தூணே! நான் உன்னிடம் தோற்று விட்டேன்...'' என்று தன் தோல்வியைப் பெருந்தன்மையோடு ஒப்புக் கொண்டான் சிறுவன்.

சிறுவன் தூணுடன் தாயக்கட்டம் விளையாடுவதைக் கொஞ்ச தூரத்திலிருந்து அவன் அத்தை பார்த்துக் கொண்டே இருந்தாள். அவளுக்கு அவனுடைய ஆட்டம் சிரிப்பைக் கொடுத்தது.

''டேய்... என்னடா நீ..? போயும் போயும் அந்தத் தூணிடம் தோற்றுப் போய் விட்டாயே...!'' என்று பரிகசிப்பது போல் கேட்டாள்.

சிறுவன், ''நான் என்ன அத்தை செய்ய முடியும்? இடது கை ஆட்டம் தான் என்னுடையது. எனக்கு இடது கையால் தாயக்கட்டையை எறிந்து பழக்கம் கிடையாதே! எனவே, எனக்கு எண்கள் சரியாக விழவில்லை. தோற்று விட்டேன். வலது கையால் நான் மிக நன்றாகத் தாயக்கட்டை எறிவேன். ஆனால் அந்த வலது கை தூணினுடையது. ஆகவே, நல்ல எண்களாகப் போட்டு தூண் ஆட்டத்தில் வெற்றி பெற்று விட்டது'' என்றான்.

அத்தை கேட்டாள். ''வலதுகையால் தான் தாயக்கட்டையை நன்கு எறிந்து பழக்கம் என்றால், அந்த வலது கையை நீ உனக்கு என்று வைத்துக் கொண்டு, இடது கையைத் தூணுக்கு என்று வைத்துக் கொண்டிருந்தால், இந்தத் தூணைத் தோற்கடித்து நீ வெற்றி பெற்றிருக்கலாமே? கடைசியில் போயும் போயும் நீ இந்தத் தூணிடம் தோற்றுப் போய் விட்டாயே...! உனக்கு வெட்கமாக இல்லை...?'' என்று பரிக சித்தாள்.

அதற்காக சிறுவன் சிறிதும் வருத்தப்படவில்லை. மகிழ்ச்சியோடு சொன்னான்.



சிறு குழந்தைகளின்
பெருமை மிகு தாய்மார்களே!

உங்களுடைய செல்வச் சிறுவர், சிறுமியர்களுக்கென HMV அளிக்கும் பிரத்தியேக ஒலி நாடா

நிலா நிலா ஓடிவா!
(பாப்பா பாட்டுக்கள்)



வழங்குபவர்:
திருமதி லதா ரஜினிகாந்த்
உடன் பாடியுள்ளோர்
ஐந்து சிறுமியர்.

பாடல்களை இயற்றியவர்:
Dr. உளுந்தூர்பேட்டை
சண்முகம்.

கம்ப்யூட்டர் இசை வடிவம்:
திரு T. செல்வகுமார்.



பாடல்கள் வழியே
மகிழ்வடையும்
குழந்தைகளின்
மனதில் நல்ல
கருத்துகளையும்
புகட்டிடும் ஒலி நாடா

விலை: ரூ **29/-** மட்டுமே
(TPHVS 32750)

அனைத்து HMV ஒலி நாடா விற்பனையாளர்களிடமும் கிடைக்கும்

RPG ENTERPRISES

HMV

''அத்தை! இத்தனை நேரம் தூணுடன் விளையாடிக் கொண்டிருந்ததை, எனக்குத் தெரியாமலேயே நீ பார்த்துக் கொண்டிருந்தாயே... நான் நேர்மையற்ற முறையில் ஆட்டம் ஆடினேன் என்று என் மீது உன்னால் குற்றம் சாட்ட முடியுமா?'' என்று கேட்டான்.

''அது எப்படி? நீதான் நியாயம் தவறாமல் விளையாடினாயே! உன் நேர்மையில் யாரும் குறைகூற முடியாதே...?'' என்றாள் அத்தை.

''இப்போது என்னை நேர்மையானவன், நியாயம் தவறாதவன் என்று புகழ்கிறாய். இதற்கு நேர்மாறாகத் 'தூணுக்கு என்ன உயிரா இருக்கிறது.. .நாம் சொல்வதுதான் சட்டம்' என்று கருதி, தப்பாட்டம் ஆடினால் கேட்கவா போகிறது என்று வலது கை ஆட்டத்தை எனக்கும், இடது கை ஆட்டத்தைத் தூணுக்கும் என்று வைத்துக் கொண்டு நான் ஆடியிருந்தேன் என்று வைத்துக் கொள்... அப்போது நீ என்னை நேர்மையானவன், நியாயம் தவறாதவன் என்று புகழ்வாயா, அத்தை?'' என்று கேட்டான்.

''அது எப்படி என்னால் சொல்ல முடியும்? 'நன்றாக ஆட வரும் கையை உனக்கு என்று வைத்துக் கொண்டு, ஆட வராத கையைத் தூணினுடையது என்று வைத்துக் கொண்டு இந்தத் தூணைத் தோற்கடித்து விட்டாய்' என்றுதான் நான் கூறுவேன்'' என்றாள் அத்தை.

''நான் ஏன் வலது கையை எனக்கு வைத்துக் கொள்ளவில்லை என்று இப்போது புரிகிறதா அத்தை...? அந்தக் கை தான் நன்றாக ஆடும் என்று தெரிந்திருந்தும், இந்தத் தூணுக்குத்தான் உயிரில்லையே என்று அதை எனக்கு என்று வைத்துக் கொண்டிருந்தால் என் மனசாட்சிக்கு பதில் கூற முடியுமா அத்தை? அது அநீதி ஆகாதா...? அநீதி இழைப்பது பெரிய பாவம் இல்லையா...? நீங்களே சொல்லுங்கள்...'' என்றான் அந்த நேர்மை தவறாத சிறுவன்.

''இந்த ஆட்டம் எல்லாம் விளையாட்டுக்குத்தானேடா...?''

''விளையாட்டுக்குத்தான் என்றாலும் கூட, விளையாட்டுக்குக் கூட நேர்மை தவறுவது குற்றம்தானே அத்தை? நேர்மையை எடுத்துக் கூறத்தானே இறைவன் மனசாட்சியை வைத்திருக்கிறான்? நியாயம் தவறி - நேர்மை தவறி நடப்பது பாவம். அதை என்னால் விளையாட்டுக்குக் கூடச் செய்ய முடியாது'' என்றான் சிறுவன்.

விளையாட்டுக்குக் கூட நேர்மை தவறாது நடந்து கொண்ட சிறுவன்தான் பிற்காலத்தில் மகாராஷ்டிர மாநிலத்தின் நீதிபதியாகப் பொறுப்பு வகித்த நமது பாரதத்தின் தலைசிறந்த நீதிமான்களில் ஒருவராக விளங்கிய மகாதேவ கோவிந்த ரானடே.

''பரீட்சை ஒழுங்கா எழுதினதாச் சொன்னே, அப்புறம் ஏண்டா ஃபெயில் ஆனே?''

''பக்கத்தில் இருந்த பையனைப் பார்த்து எழுதினேண்டா.''

''அவன் ஒழுங்கா எழுதினானா?''

''எழுதினான்.''

''அப்புறம் ஏன்?''

''அவன் ஏழாவது, நான் எட்டாவது!''

- சரவணன், மணியனூர்.





''சார், இந்த நாய்க்குட்டி பொம்மை என்ன விலை?''

''25 ரூபாய் சார்.''

''கொஞ்சம் 'குறைக்க' சொல்லுங்களேன்.''

'' 'லொள்', 'லொள்' 25 ரூபாய்!''

- ஆர். சரவணன், செஞ்சி

பிசாசு முக்கோணம் உண்மையா?


பெர்முடா முக்கோணம் (Bermuda Triangle) அல்லது டெவில்ஸ் முக்கோணம் என்ற பெயரில் அழைக்கப்படும் பகுதி அட்லாண்டிக் பெருங்கடலில் முக்கோண வடிவத்தில் அமைந்துள்ளது. கடந்த 200 ஆண்டுகளில் இப்பகுதி வழியாகப் பயணம் செய்த 50 க்கும் மேற்பட்ட கப்பல்களும், 20 க்கும் மேற்பட்ட விமானங்களும் மாயமாய் மறைந்து விட்டன! இந்த முக்கோணத்தின் ஒரு பக்கம் அமெரிக்காவின் புளோரிடா மாநிலமும், இரண்டாவது பக்கம் போர்ட்டோரிகா (Puerto Rico) தீவும், மூன்றாவது பக்கம் பெர்முடாவும் அமைந்துள்ளன. மர்மம் நிறைந்ததாகக் கருதப்படும் இப்பகுதி 25 மற்றும் 40 டிகிரி அட்சரேகைக்கும், 55 மற்றும் 85 டிகிரி தீர்க்க ரேகைக்கும் இடையே அமைந்துள்ளது.

கப்பல்கள் இப்பகுதியை அடைந்ததும் அவற்றிலிருந்து வரும் சிக்னல் தானாகவே நின்று விடுகிறது. தொடர்ந்து கப்பல்களும் காரணம் எதுவும் புலப்படாமலேயே மாயமாக மூழ்கி விடுகின்றன! 1968 மே மாதம் அமெரிக்காவின் 'ஸ்கார்பியன்' என்ற நீர்மூழ்கிக் கப்பல் இப்படி மறைந்து போனது குறிப்பிடத்தக்கது. 1945 டிசம்பரில் 5 குண்டு வீசும் விமானங்கள் மாயமாய் மறைந்தன. இப்பகுதியில் இதுவரை மாண்டவர்களின் எண்ணிக்கை 1000 க்கும் அதிகம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

பெர்முடா முக்கோணப் பகுதியில் காம்பஸ் ஊசி நிலையில்லாமல் சுற்றுவதாகவும், நல்ல வானிலை இருந்த போதும் கூட வானம் திடீரென மஞ்சள் நிறமாக மாறுவதாகவும் விபத்துக்குள்ளான விமானிகள் சிலர் ரேடியோ செய்தி அனுப்பியிருந்தார்களாம்!


பெர்முடா மர்மம் குறித்து 1964 - ம் ஆண்டு முதல் பல ஆய்வுக் கட்டுரைகளும், நூல்களும் வெளியாயின. 1970 க்கு பின்பு பல நூல்கள் வெளியானாலும் சார்லஸ் பெர்லிட்ஸ் என்பவர் எழுதிய நூல் குறிப்பிடத்தக்கது. கோடிக்கணக்கில் இந்நூல் விற்பனையானது. இதைத் தொடர்ந்து பரபரப்பு அதிகரித்து உடனே பல ஆராய்ச்சிகள் தொடங்கப்பட்டன. ஆராய்ச்சி செய்தவர்கள் மர்மம் எதுவும் இல்லை என்று வாதம் புரிகின்றனர்.

விமானங்கள், கப்பல்கள் ஏன் மாயமாய் மறைந்தன என்று கூறு



— கிருஷ்ண முத்துராமலிங்கம்





வோரின் வாதங்கள் என்ன தெரியுமா?

இப்பகுதியில் செல்லும் கப்பல்களையும், விமானங்களையும் வெளி உலகவாசிகள் கடத்திக் கொண்டு சென்றிருக்கலாம் என்பது ஒரு தரப்பினரின் வாதம்.

கடலுக்கு அடியில் வாழும் ராட்சஸப் பிராணிகள் இவ்வாறு செய்திருக்கலாம் என்பது இன்னொரு தரப்பினரின் வாதம்.

நமக்குத் தெரியாத பல சக்திகள் உண் டாக்கும் நிலநடுக்கமும், அதன் விளைவாக ஏற்படும் ராட்சஸப் பேரலைகளுமே இந்த விபத்துக்களுக்குக் காரணமாக இருக்கலாம் என்பதும் ஒரு சிலரின் வாதம்.

இப்பகுதியில் மின்காந்த மண்டலம் விநோதமாக உள்ளதாகவும் அதனால் விபத்துக்கள் ஏற்படுவதாகவும் வேறு சிலர் கூறுகின்றனர்.

அட்லாண்டிக் என்னும் பண்டைய கண்டம் மறைந்து போனதே இந்த விபத்துக்களுக்குக் காரணமாக இருக்கலாம் என்று சார்லஸ் பெர்ட்லிஸ் கூறுகிறார். இக்கண்டத்திற்குச் சக்தி வழங்கி வந்த பிரம்மாண்டமான சூரிய ஒளியைப் பயன்படுத்தும் படிகக்கல் ஒன்று கடலுக்கு அடியில் இருப்பதாகவும், இந்தப் படிகக் கல்தான் காம்பஸ் போன்ற கருவிகளைத் தடுமாறச் செய்து கப்பல்களையும், விமானங்களையும் விழுங்கி விடுவதாகவும் இவர் கூறுகிறார்.

இதில் மர்மம் ஏதுமில்லை என்போர் என்ன கூறுகிறார்கள் தெரியுமா?


மனிதனின் அபாரமான கற்பனைக்கு ஓர் எடுத்துக்காட்டு பெர்முடா முக்கோணம். ஒன்றுமே இல்லாத விஷயத்தை பத்திரிகையாளர்களும், எழுத்தாளர்களும் கட்டுக் கதையாக்கி இட்டுக் கட்டி விட்டார்கள் என்றும், பரபரப்பாக எழுதி புத்தகங்களை விற்று கோடீஸ்வரராக விரும்பிய ஓரிரு எழுத்தாளர்களின் கற்பனையில் உதித்ததே இது என்றும் கூறுகிறார்கள், லாரன்ஸ் குஷே, ஜாக்ஸ் கூஸ்தோ என்னும் ஆய்வாளர்கள்.

'உலகின் பல பகுதிகளில் நடப்பதைப் போலவே இங்கும் விபத்துக்கள் நடக்கின்றன. குறிப்பாக வானிலை இங்கு அடிக்கடி மோசமாவதால் விபத்துக்கள் அதிகமாக நடக்கின்றன. அவ்வளவுதான்' என்கிறார் லாரன்ஸ். அமெரிக்ககடற்படை விமானங்கள் இப்பகுதியில் விபத்துக்குள்ளானதைப் பற்றி விசாரித்த அமெரிக்க கடற்படை தனது அறிக்கையில் 'எந்த மர்மத்தையும் காணவில்லை' என்று கூறியிருக்கிறது.

இன்றும் கூட அதே பாதையில் ஏராளமான கப்பல்கள் விமானங்கள் சென்று வருகின்றன. விபத்துகள் ஏதும் நடக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பெரும்பாலான விபத்துக்களுக்குக் காரணம் மற்ற இடங்களில் இல்லாத சில அம்சங்கள் இங்கு இருப்பதே. அதாவது கடலுக்கடியில் பல மலைக் குடைவுகள் உள்ளன. வெப்ப நீரோட்டம் செல்கிறது. அடிக்கடி மோசமான வானிலை இப்பகுதியில் ஏற்படுகிறது என்பதே அந்த அம்சங்கள்.

1976 - ம் ஆண்டில் கிரஹாம் மஸ்லி என்பவர் நடத்திய ஆய்விலும் 1977 - ம் ஆண்டில் 'நியூ சைன்டிஸ்ட்' பத்திரிகையில் வெளியான கட்டுரையிலும் பெர்முடா பகுதியில் மர்மம் ஏதுமில்லை என்று விளக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இந்தப் பகுதியில் விரும்பிப் பயணம் செய்ய எல்லா மாலுமிகளும் கப்பல்களும் ஆர்வமாக முன் வருவதில்லை.



"பாப்பா உன்னோட பெயரைச் சொன்னா உனக்கு சாக்லேட் தருவேன்."


"சரி-தா."

- பி. சிவக்குமார்,
வந்தவாசி.


"படம் பார்க்க முடியாத தியேட்டர் எது தெரியுமா?"

"இது தெரியாதா! ஆபரேஷன் தியேட்டர்!"

- எஸ். தட்சணாமூர்த்தி,
நாகலூர்.



எத்தனை விலங்குகள் உள்ளன?



விடை : பாம்பு (இரண்டு), நரி, காகம், கொக்கு, முயல், நாய், குரங்கு, கலைமான், ஆமை, காட்டு எலி.



கரும்போ கரும்பு!

கரும்பைப் போலவே கரும்பின் வரலாறும் சுவைமிக்கது.

வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே கரும்பைப் பற்றிய கதைகள் நமது புராணங்களில் உண்டு. மன்மதவின் கையில் கரும்பு வில்லொன்று இருப்பதாகவும், காமாட்சி தேவியின் கரத்தில் கரும்பு வில் இருப்பதாகவும் புராணங்கள் குறிப்பிடுகின்றன. சமஸ்கிருதத்தில் இதை இக்ஷுதண்டம் என்பார்கள். பட்டினத்தடிகள் தமது கையில் ஒரு கரும்பை வைத்திருந்தார். வெளிநாடுகளில் சர்க்கரையைப் பற்றியும் கரும்பைப் பற்றி மற்ற நாட்டு மக்கள் அறிவதற்கு முன்பே கரும்பை இந்தியாவில் மக்கள் பயன்படுத்தினர்.

கரும்பைப் பயிரிடுவது, கரும்புப் பொருள்களை உற்பத்தி செய்வது ஆகியவை இந்தியாவில்தான் முதன் முதலில் தோன்றின. பின்னர்தான் அவை பற்றிய அறிவு வெளிநாடுகளுக்குப் பரவியதாக கிறிஸ்து பிறப்பதற்கு 800 ஆண்டுகளுக்கு முன்பு சீன அறிஞர்கள் எழுதி வைத்துள்ளனர்.

கிறிஸ்து பிறப்பதற்கு 5000 ஆண்டுகளுக்கு முந்தியதெனக் கருதப்படும் அதர்வ வேதச் செய்யுள் ஒன்று கரும்பைப் பற்றிக் குறிப்பிடுவதாவது : ''என்னை நீ வெறுக்காமல் இருக்க உனக்கு நான் கரும்பு முடிசூட்டியுள்ளேன்'' - அக் காலத்திலேயே நம் நாட்டில் கரும்பு இருந்திருக்கிறது என்பதை இது எடுத்துக் காட்டுகிறதல்லவா?

கி.பி. ஆறாவது நூற்றாண்டில் சீனச் சக்கரவர்த்தியாக இருந்த லாய் ஹெங் என்பவர் இந்தியாவுக்கு நிபுணர்களை அனுப்பி கரும்பு பயிரிடும் முறை, கரும்புப் பண்டங்களைச் செய்யும் முறை ஆகியவற்றைப் பற்றி அறிந்து வரச் செய்தாராம்.

இந்தியாவில் போரிட்டபின் நாடு திரும்பிய 'மகா அலெக்ண்டர்' தம்முடன் 'தேன் நாணல்' (HONEY CANE) என்று பெயரிடப்பட்ட கரும்பை கிரேக்க நாட்டிற்கு எடுத்துச் சென்றதாக வரலாறு வலியுறுத்துகிறது. அதன் பின்னரே ஸ்பெய்ன், பாரசீகம், எகிப்து, வட ஆஃப்பிரிக்கா முதலான நாடுகளுக்குக் கரும்பு பரவியது.

கிறிஸ்டோஃபர் கொலம்பஸ் அமெரிக்காவுக்கு இரண்டாவது தடவை சென்ற போது தம்முடன் கரும்பைக் கொண்டு சென்றார். அதன் பின்னரே அமெரிக்காவில் கரும்பு பயிரிடப்பட்டது.

அமெரிக்காவை அடுத்த கியூபா தீவு கரும்பு விளைச்சலில் மிஞ்சி இருப்பதுடன், சர்க்கரைத் தொழிலிலும் சிறந்து விளங்குகிறது.

– ஆர். சி. மதிராஜ்,
கச்சிராபாளையம்.

ஹைடர் ஜக்கு:

மாமுண்டிக்குத் தண்டனை


ஹைடர் ஜக்கு சகல கலா வல்லவன். எதையும் செய்யும் சக்தி பெற்ற மாயச் சிறுவன். மாற்று கிரகத்தைச் சேர்ந்தவன். மோசடிக்காரர்களைத் தண்டித்து நல்லவர்களுக்கு உதவுபவன்.

கதை: உதயபால் படம்: ஏ.டி. தியாகராஜன்






மாமுண்டி எங்கடா?
அதிகாரிகளுக்கு நன்ன பணாச்சே? ஏதாவது பண்ணுவாங்களா? லஞ்சம் நின்னுடுமோ?
போலீஸ் நடவடிக்கை எடுக்கல. அதான் எதிர்ப்பைக் காட்டுறாம்!
டிப்! டிப்! டிப்!!!
மாமுண்டியை தெரிஞ்சுக்கணும். அதானே? நான் ஒரு நாடு.
அட, மைனர் சிங்கு! நினைச்சேன் வந்துட்டே!
இந்த இரும்புத் தூண்டுல ஏறிக்கோ! போகலாம்.
?
சந்தேகத்துடன் பாபு ஏற, சிக்கு வும் ஏறிக் கொண்டான்!
!
மாமுண்டி மரம் வெட்ற இடத்துக்குப் போ....


மெதுவா, பயமாருக்கு!
சந்தேகப் பட்டியே?
என் மனசுல இருந்தது உனக்குத் தெரிஞ்சுடுத்தா? ஸாரி.
இந்த ஜக்குவின் சக்தியைப் புரிஞ்சுக்க. உம்... உனக்குப் பசிக்குது போலிருக்கு?
அதையும் தெரிஞ்சுக்கிட்டியா?
தாழப் பறப்போம். மாம்பழம் இருக்குமே, பறிச்சுக்கோ......
பலே பலே! நன்றி ஜக்கு!


மாமுண்டியின் இடத்தை அடைந்து—
மரங்களை இஷ்டத்துக்கு வெட்றாங்களா?
மரம் வெட்டத் தடை இருக்கு. ஆனா, மாமுண்டியை யாரும் தண்டிக்க மாட்டாங்க. பெரிய அதிகாரிங்க அவன் கையில்!
நாமே அவனைத் தண்டிப்போம்.
தடுத்த கணபதி சார் கதி தெரியுமில்லே?
அதுக்கும் சேர்த்து தண்டிப்போம்.
இது ஆகக் கூடியதா ஜக்கி?
கண்டிப்பா! நீயும் நினைச்சா நடக்கும்.
இருவரும் திட்டம் போட்டனர்.
காடு அழிவைத் தடுக்கும் கணபதி சாரின் இயக்கம் வெற்றி பெறணும்.
பறக்கப் போறோம். புடிச்சுக்கோ!


யானைக் கூட்டம்! நம்ம திட்டத்துக்கு இது போதும்.
என்னதுமா சத்தம்..?
லாரிங்க.
குன்றின் மேலிருந்து பார்த்தனர்.
மாடுகண்டி லாரிங்கதான். அதுகளை ஓட்டறான். எல்லாம் சட்ட விரோதமா வெட்டின மரங்க!
திட்டமிட்டபடி தங்கு செயல்பட்டான். பறந்து போய்–
ஹுவ்வ்!
யானைகள் மிரண்டு நேர்க்கோடாய் ஓடிவர–
ஹுவ்வ்வ்!
ஹுவ்வ்.


!?
செத்தோம்! தப்பி ஓடுங்க... பிழைச்சுக்குங்க!
லாரிகளைக் கவிழ்த்து அட்ட-காசம் செய்தன.
லாரிகளும் மரங்களும் தூக்கி எறியப்பட்டன.


இதோவைக்கிறே மாமுண்டி!
கணபதி சாரை அடிக்க இல்லே.
இனிஒண்ணும் உனக்கு.
நன்றி! நன்றி! யானைகளே!
மறுநாள் செய்தித் தாளில் —
தினச் செய்தி
மாமுண்டி படுகாயம்
சட்ட விரோத செயலை யானைகள் தடுத்தன!
அரசு தராத தண்டனையை யானைகள் தந்தன!
மாமுண்டியால் நடக்கக் கூட முடியாதாம்!
கணபதி சாருக்கு வேலைமாற்றி வந்தாம்.
இனிது காடுகாக்கும் பணிக்கு நாமும்
உதவுவோம் அக்கு.



? கேளுங்கள் சொல்லப்படும் !

சேரநம்பி

★ தமிழ் நாட்டின் முதல் திரையரங்கம் எங்கே எப்பொழுது தொடங்கப்பட்டது? - வெ. கருணாகரன், வெ. புண்யநாதன், கோவை - 4.

நான் தேடிக் கண்டு பிடித்த தகவல்களின் அடிப்படையில் தமிழ் நாட்டில் முதல் திரையரங்கத்தை அமைத்த பெருமையைத் தட்டிக் கொண்டு போவது உங்கள் கோவை மாநகரம்தான்! இந்தத் திரையரங்கத்தின் பெயர் வெரைட்டி ஹால். ஆண்டு 1915. இந்த அரங்கு இப்பொழுது இல்லை. இதன் பெயரில் அமைந்த சாலைதான் இதை நினைவூட்டிக் கொண்டிருக்கிறது!

★ முதல் இந்திய சிறுவர் திரைப்பட விழா எங்கு நடை பெற்றது? - பெருங்களத்தூர் எம். கோபிநாத்.

சென்னையில் 1983 - ஆம் ஆண்டு நடை பெற்றது. இந்தப் பெருமைக்கு உரியவர்கள், இந்திய சிறுவர் திரைப் படச் சங்கத்தின் அன்றைய தலைவர் சாந்தா ராமும், தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்களும்.

★ மொழியா முக்கியம்?

★ ஒலிம்பிக்கில் இந்தியாவின் சார்பில் கலந்து கொண்ட முதல் பெண்மணி யார்? எந்த ஆண்டு? - து. நரசம்மா, நாயுடுபேட்டை.

மேரிடி செசா என்பவர்தான் இந்தியாவின் சார்பில் கலந்து கொண்ட முதல் பெண்மணி. இது 1952 - ல். இதுகூட இப்பொழுது விவாதத்தில் உள்ளது. காரணம், இவர் இந்திய அரசால் அனுப்பப்படவில்லை என்கிறார்கள்!

★ முந்திரித் தோலில் இருந்து எண்ணெய் எடுக்கிறாங்களாமே! இது என்ன எண்ணெய்? இது எதற்குப் பயன்படுகிறது? இது எங்கே கிடைக்கும்? - ஜூ. நல்லமுத்து, பெரியபாளையம்.


இதன் பெயர் முந்திரி எண்ணெய் தான். கட்டடங்கள் கட்டும் போது புதிதாக மரத்தால் ஆன நிலைப்படிகள்,



சன்னல் சட்டங்களை பொருத்துகிறார்கள் அல்லவா? இவைகளுக்கு 'பிரைமர்' என்று ஒரு பெயின்ட் பூசுவார்கள். இது முந்திரித் தோலில் இருந்து தான் தயாரிக்கப்படுகிறது. மற்றபடி முந்திரி எண்ணெய், சில நாட்டு மருந்துகளைத் தயாரிக்கவும் கூடப் பயன்படுகிறது.

★ ஏகநாதரும், இராமபிரானும் பேசிய மொழி ஏது? - ல. ரெசாக், சாத்தூர்.


ஏகநாதர் பேசிய மொழி 'ஆராமெயிக்' என்றும் இராமர் பேசியது தொடக்க கால 'சம்ஸ்கிருதம்' என்றும் கூறுகிறார்கள். ஆனால் இந்த இரண்டுமே பலமான விவாதத்தைத் தோற்றுவித்துள்ளன! இன்னும் முடிவாகவில்லை. இவர்கள் எந்த மொழியில் பேசி வாழ்ந்திருந்தால் என்ன? இதுவா முக்கியம்! இவர்கள் மக்களுக்கு விடுத்துள்ள செய்திகளும், அறிவுரைகளும் தானே முக்கியம்? இதன்படி நடந்து மற்றவர்களை நேசித்து நாமும் வாழ்ந்து உயர முயல்வோம்!



* Vintage....

★ சிறுவர் இலக்கிய முன்னோடிகளில் ஒருவர் என்று கோகுலத்தால் சிறப்பிக்கப்பட்டுள்ள காவேரிப்பாக்கம் நமச்சிவாய முதலியார் அவர்களது வரலாறு எங்கே கிடைக்கும்? - வொ. பாசசம்மாள், புதுவை - 11.

திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரால் வெளியிடப்பட்டுள்ள தமிழ்ப் புலவர் வரலாற்று வரிசையில் இவரது வாழ்க்கை வரலாறும் உள்ளது. இது தவிர சோ. கருப்புசாமி என்ற தமிழறிஞரால் எழுதப்பட்டுள்ள





* பெருமைக்கு உரியவர்கள்

''கா. நமச்சிவாயரின் நாடகங்கள் ஓர் ஆய்வு'' என்ற திறனாய்வு நூலிலும் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது. ''க. சோமசுந்தரம் - சோ. முத்தம்மாள் அறம், 126, தெற்குத் தெரு, இராமச்சந்திரபுரம், சுந்தரபாண்டியம் வழி - 626 126, காமராசர் மாவட்டம்'' என்ற முகவரிக்கு எழுதிப் பாருங்கள். கோகுலத்திற்கு அல்ல!


★ 'Vintage',Vetran' என்கிறார்களே. இவை என்ன? மு. நாராயணமூர்த்தி, திருப்பூந்துருத்தி.

இவை எதில் வருகின்றன என்று கூறியிருந்தால் எளிதாக இருந்திருக்கும் கார் தரகர்கள் அடிக்கடி பயன்படுத்தும் சொற்கள் இவை. 1919 முதல் 1930 வரை தயாரான கார்களை 'Vintage' என்றும், 1919 -க்கு முன் தயாரானவைகளை 'Vetran' என்றும் குறிப்பிடுகிறார்கள்.

★ வைஜயந்தி என்று பெயர் வைத்துக் கொள்கிறார்களே, இது என்ன பெயர்? - சா. அகஸ்டியன், திண்டிவனம்.

வைஜயந்தம் என்பதே சரி. தேவர் உலகத்தில் உள்ள நகரத்திற்குப் பெயர் இது. வருண பகவான் இலட்சுமி தேவிக் குத் தந்த மாலையின் பெயரும் இதுவே. திருமால் பள்ளி கொண்ட பாற்கடலில் இருக்கும் ஓர் மலைக்கும் இதுவே பெயர்.

★ அண்டா என்பதும், கைதி என்பதும் தமிழ்ப் பெயர்கள்தானே? - வீ. வடுகநாதன், வீ. சிவசாமி, சிதம்பரம்.



"உங்க அப்பாவின் பிஸினஸ் ரொம்ப சிக்கலானதுன்னு சொல்றியே என்ன பிஸினஸ்?

"'இடியாப்ப' வியாபாரம்தான்!"

- ஆறுபாதி புகழேந்தி

"காக்கா ஏன் கா....கா...ன்னு கத்துது?"

"கு...கூ....ன்னு கத்தினா, அதை குயில்னு சொல்லிடுவாங்களே...!"

- சீர்காழி வி. ரேவதி



"அவசர பேர்வழிகள் அதிகமுள்ள நாடு எது?

"'அர்ஜெண்ட்'டைனா."

- மொரப்பூர் ச. உமர்கான்



இல்லை. அண்டா என்பது இந்துஸ்தானி. கைதி என்பது அரபுச் சொல்.

★ காகிதத்தில் ஓட்டை போடும் Perforator மிஷினை யார் கண்டு பிடித்தார்கள்? - கு. திவ்யநாதன், சிவகாசி.

இங்கிலாந்தைச் சேர்ந்த ஹென்றி ஆர்ச்சர் என்பவரே இதை 1848 - ல் கண்டுபிடித்தார். இதற்குமுன் யாராவது முயற்சி செய்தார்களோ என்னவோ. Patent Registration என்பது இவரது பெயரிலேயே உள்ளது.


★ எக்காலஜி (Ecology) என்ற சொல்லை முதலில் பயன்படுத்தியவர் யார்? - நீ. நாராயணமூர்த்தி, வரகூர்.

முதன் முதலாக இந்தச் சொல்லைப் பயன்படுத்திய பெருமைக்கு உரியவர் உயிரியல் அறிஞர் எர்னஸ்ட் ஹெக்கல்தான். உயிரிக்கும், சுற்றுச் சூழலுக்கும் உள்ள தொடர்பை விளக்க இவர் எழுதிய கட்டுரைகளில் (1869 ல்) இவர் இதைப் பயன்படுத்தினார். இதற்கு உயிரினச் சூழலியல் என்பது பொருள்.

★இடி மின்னல் நேரங்களில் வானொலியை வைத்தால் 'கரபுரா' சத்தம் பயங்கரமாகக் கேட்கிறதே! இது ஏன்? - வ. சின்னதுரை, முண்டியம்பாக்கம்.

வானொலி நிகழ்ச்சிகளின் ஓசை (சப்த) அலைகள், மின்சார அலைகளாக மாற்றப்பட்டு காற்றில் பரவுகின்றன என்பது தெரியுமல்லவா? இவை மீண்டும் சப்த அலைகளாக மாற்றப்பட்டு நம் வீட்டு வானொலிப் பெட்டியில் கேட்கின்றன. மின்னல் தோன்றும்போது வெளியாகும் மின்சாரம், இந்த மின் அலைகளுடன் மோதுவதன் விளைவே இந்த 'கரபுர' சத்தம்.

'கேளுங்கள் சொல்லப்படும்' பகுதிக்குக் கேள்வி கேட்போர் ஒரு கடிதத்தில் ஒரு கேள்வியை மட்டுமே கேட்கலாம். அனுப்ப வேண்டிய முகவரி : ஆசிரியர் கோகுலம். 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.



குருவாவது வரதாவது?

ரா.பா. சாரதி

குரு ஊருக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான். கணபதி புத்திமதி கூறிக் கொண்டிருந்தார்.

''என்ன கணபதி ஐயா, பையன் யாரு?'' என்று கேட்டுக் கொண்டே வந்தார் ஆனந்தன்.

''வாங்கய்யா'' என்று அவரை வரவேற்ற கணபதி, ''குரு, ஆனந்தன் சார்னு சொல்வேனே... அவர்தான். இந்தக் கும்பாபிஷேகத்தின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருப்பவர் இவர்தான்'' என்று மகனிடம் கூறி முடித்தார். கூடவே, ''ஆனந்தன் சார், இவன் என் ஒரே மகன் குருமூர்த்தி என்கிற குரு. திருச்சூரில் பிளஸ் டூ படிக்கிறான்'' என்று மகனை அறிமுகம் செய்தார்.

ஆனந்தன் வசதியாக நாற்காலியில் அமர்ந்து கொண்டார்.

''பையன் எங்கே இந்தப் பக்கம்...?''

''திருவேற்காடு கருமாரியம்மன் பக்தர் ஒருவர் திருச்சூரில் இருக்கிறார். அவர் தன்னுடைய வேண்டுதலை நிறைவேற்ற மலையாளத்துக் குத்துவிளக்கு ஒன்றை வாங்கி, பையனிடம் கொடுத்து அனுப்பியிருக்கிறார். அவரால் வர முடியவில்லையாம். விளக்கைக் கோவிலில் ஒப்படைத்து விட்டான். போகும் போது என்னைப் பார்க்க வந்திருக்கிறான். நாளைக்குப் பள்ளிக்கூடம் இருக்கே?''

கணபதியின் பதில் ஆனந்தனைச் சிந்திக்க வைத்தது.

''கணபதி ஐயா. நம்ம கும்பாபிஷேகத்திற்குக்கூட மலையாளத்து விளக்காக நான்கு விளக்கு வேணும். நானே போவதாக இருந்தேன். முடியவில்லை. அனுப்பி வைக்க நம்பிக்கையானவர்களும் கிடைக்கவில்லை. உங்களுக்கு மறுப்பு இல்லை என்றால் குருவிடமே அந்தப் பொறுப்பை ஒப்படைத்துப் பணத்தைத் தந்து விடுகிறேன்'' என்றார் ஆனந்தன்.

கணபதி குருவைப் பார்த்தார்.

''சாமி காரியம். எனக்கு என்ன மறுப்பு இருக்க முடியும்?'' என்றான் குரு.

''தம்பி, கும்பாபிஷேகத்திற்கு இன்னும் நாற்பது நாள் இருக்கு. ஆவணி 20-ஆம் தேதி. ஒரு வாரம் முன்பு, 15-ஆம் தேதி யாக பூஜை ஆரம்பம். அறத்துறை அமைச்சரே வந்து காலையில் குத்து விளக்கு ஏற்றி பூஜையைத் தொடங்கி வைக்கிறார். விளக்குகள் அப்போ வந்தால் கூடப் போதும். அவசரம்

இல்லை'' என்று அவனை வழியனுப்பி வைத்தார் ஆனந்தன்.

நாட்கள் ஓடின. கும்பாபிஷேக நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. குருவிட மிருந்து எந்தத் தகவலும் இல்லை. போன புதிதில், ''ஏற்பாடு செய்து விட் டேன். விளக்குகள் குறித்த நேரத்தில் வரும். நானே எடுத்து வருவேன்'' என்று கடிதம் வந்ததோடு சரி. கணபதி தவித் தார். கும்பாபிஷேகப் பணிகளை விட்டு விட்டு அவரால் போகவும் முடிய வில்லை.

யாக பூஜைக்கு பந்தல் போட்டு விட் டார்கள். மேடை தயாராகி விட்டது. அலங்கார மேடையில் விளக்குகளை வைக்க வேண்டியதுதான் பாக்கி.

காலை எட்டு மணிக்கு நல்ல நேரம். அமைச்சர் குத்துவிளக்கை ஏற்ற வேண் டும். எல்லோருக்கும் பயம் பிடித்துக் கொண்டது. கிடைத்த ஒரு பழைய விளக்கைப் பளபளவென்று தேய்த்து அமைச்சர் வந்தால் ஏற்றி வைக்க வைத்து விட்டார்கள். வேறு வழி?

''இன்னுமா குரு வருவார்ன்னு நம்பறீங்க? குருவாவது வருவதாவது?'' என்று வெறுத்துப் போய்க் கேட்டார் ஆனந்தன்.

''இப்படிப் பொறுப்பில்லாது நடக்கக்கூடியவன் அல்ல ஐயா என் மகன்'' என்று விசும்பினார் கணபதி.

அமைச்சர் வந்து விட்டார். அவர் மேடையில் அமர்ந்ததும், வாசலில் ஏதோ சலசலப்பு. ஒரு ஆட்டோ வேக மாக வந்து நிற்க, இரண்டு இளைஞர் கள். அவசரம் அவசரமாக இறங்கினர். கூடவே நான்கு பெரிய மலையாளத்துக் குத்து விளக்குகள்! ''குரு அனுப்பி வைத் தவை'' என்று இருவரும் விளக்குகளை எடுத்து வந்தனர்.

'குருவுக்கு என்னவாயிற்று? அவன் ஏன் வரவில்லை' என்று எல்லோரும் எண்ணினாலும், யாருக்கும் கேட்க நேர மில்லை. விளக்குகளை அலம்பித் துடைத்து அலங்கரித்து எண்ணெய் திரி இட்டனர். அமைச்சரிடம் ஆனந்தன் நிலையை விளக்கியதும், அமைச்சர் அந்த இளைஞர்களை அழைத்தார். காரணம் கேட்டார்.

''நான் டேவிட். இவன் இப்ராஹீம். திருச்சூரில் குருவுடன் படித்தவர்கள். படிப்பு ஏறவில்லை. தையல் கற்று டிப்ளமா வாங்கி னோம். ரெடிமேடு உடை தைக்கும் கம் பெனியில் நல்ல வேலை கிடைத்தது. ஆனால் ஐந்தாயிரம் டெபாசிட் கேட்டார் கள். ஊரில் இருந்த சில நிலங்களை விற்க ஏற் பாடு செய்தோம். இருந் தும் உரிய நேரத்தில் பணம் கிடைக்க வில்லை. அப்போதான் குரு, விளக்கு வாங்க இருந்த பணத்தைக் கொடுத்து, நிலம் விற்ற பணம் கிடைத்ததும் திருப்பித் தரச் சொன் னான். வேலையில் சேர்ந்தோம். நிலம் விற்ற பணம் கைக்கு வர மேலும் தாமத



மாயிற்று. கடைசியில் கைக்கு வந்த போது அது காசோலையாக இருந்தது. அதை பாங்கில் போட்டு, பணமாக எடுத்து, விளக்கை வாங்கினோம். காலையிலேயே வந்திருப்போம். ஆனால் கொல்லம் மெயில், சரக்கு ரயில் தடம் புரண்ட காரணத்தால் நான்கு மணி நேரம் தாமதமாகி விட்டது. இந்தக் கும்பாபிஷேகத்தால்தான் எங்களுக்கு வேலை கிடைத்தது'' என்றான் ஒரு இளைஞன்.

''பாவம், எங்களுக்காக குரு உங்கள் அனைவரிடமும் கெட்ட பெயர் வாங்கி விட்டான். எங்களை மன்னித்து விடுங்கள்'' என்றான் இரண்டாவது இளைஞன்.

''குரு எங்கே? அவன் ஏன் வர வில்லை?''

''அவனுக்கு ஒரு சிறு விபத்து. காலில் வண்டி ஏறி மருத்துவமனையில் இருக்கிறான். ஒன்றும் பயமில்லை. இன்னும் பத்து நாட்களில் சரியாகி விடும். உங்களுக்குத் தெரிந்தால் வருத்தப்படுவீர்களே என்றுதான் எழுதவில்லை. அதனால்தான் நாங்களே வந்தோம்.''

''கணபதி ஐயா, உங்க மகன் பெரிய காரியம் பண்ணியிருக்கான். ஒரே கல்லில் அவன் இரண்டு பழம் அடித்திருக்கிறான். அம்மனுக்கு விளக்கு வாங்கக் கொடுத்த பணத்தை தன் நண்பர்களின் நல்வாழ்வுக்காகக் கொடுத்து உதவி யிருக்கிறான். பயன் பெற்றவர்கள் ஒரு முஸ்லீம், ஒரு கிருஸ் துவர். பயன் பட்டிருப்பது இந்துத் தெய் வத்தின் பணம். இதைவிட மத நல் லிணக்கத்திற்கு வேறு என்ன வேண்டும்?'' என்று பாராட்டிய அமைச்சர், ''உங்களுக்கு, மறுப்பு இல்லை என்றால் இந்த விளக்குகளை இந்த இரண்டு இளை ஞர்களுமே ஏற்றி, பூஜை தொடக்கத்தை ஆரம்பித்து வைக்க லாமே?'' என்று கேட்டார்.

''எங்களுக்கு மறுப்பு ஏதும் இல்லை'' என்றார் கணபதி.

''எங்களுக்கும் மறுப்பு இல்லை. எங்கள் வாழ்க்கையில் விளக்கேற்றி வைத்துள்ள தெய்வத்திற்கு நாங்கள் விளக்கேற்றி வைக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்'' என்று இரு இளைஞர்களும் மேடை யேறினர் பயபக்தியுடன்.

புதிய உதயம் தொடங் கியது!



ஊனமே, ஓடிப்போ!



அன்றைய தினம் - நீச்சல் வரலாற்றில் மிக முக்கியமான நாள். ஆறு பேர் கொண்ட நீச்சல் குழு ஒன்று ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்தது. அதில் ஒரு பெண் - இந்தியாவைச் சேர்ந்தவள். பெயர் : சி.என். ஜானகி. இதில் என்ன ஆச்சர்யம் என்கிறீர்களா?

சொன்னால் உருகி விடுவீர்கள். அந்தப் பெண்ணுக்குக் கால்கள் இல்லை! ஆம்! தனது இரண்டாவது வயதிலேயே இளம்பிள்ளை வாத நோய்க்குத் தன் இரண்டு கால்களையும் பறிகொடுத்து விட்டவள் அவள்! நடக்கவே முடியாத அந்தப் பெண்தான் பிரசித்தி பெற்ற நீச்சல் வீரர்களின் இலட்சியக் கனவாகிய ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்தவள்! இது பொன்னேடுகளில் பொறிக்கப்பட வேண்டிய சாதனையா இல்லையா?

மிகச் சிறிய வயதிலேயே இப்படி ஒரு சோகத்திற்கு ஆட்பட்டு விட்டதால் சிறுமி ஜானகி பட்டபாடு சொல்லி மாளாது. சக மாணவ மாணவிகளெல்லாம் ஓடியாடி விளையாடும் போது சிறுமி ஜானகி மட்டும் தன் விதியை எண்ணி வருந்தி மரத்தடியில் சோகமாக உட்கார்ந்திருப்பாள்! மற்றவர்களைப் போல் நம்மாலும் இஷ்டப்படி ஓடி விளையாட முடியவில்லையே என்கிற வருத்தம் அவளுக்கு! அந்த வருத்தமே நாமும் ஏதாவது பெரிதாகச் சாதித்து நான்கு பேர் போற்றிப் புகழும்படி பெயர் பெற வேண்டும் என்கிற வெறியாக மாறிற்று.

படிப்பு முடிந்ததும் ஜானகிக்கு சிண்டிகேட் வங்கியில் வேலை கிடைத்

தது. தன் பணியில் கண்ணும் கருத்துமாக இருந்த ஜானகிக்கு 1985 - ஆம் வருடம் ஓர் அற்புதமான வாய்ப்பு வந்து சேர்ந்தது. அமெரிக்காவிலுள்ள விஸ்கோன்சினில் ஊனமுற்றோருக்கான நீச்சல் பயிற்சி முகாம் நடப்பதாகக் கேள்விப்பட்டாள். ஒரு முயற்சியாக, நாமும் அதில் கலந்து கொண்டால் என்ன என்று எண்ணினாள். கேட்டவர்கள் எல்லாம் எள்ளி நகையாடி, ''இது நடக்கக் கூடிய காரியமா!'' என்று கிண்டலடித்தனர். ஆனால், ஜானகி மனம் தளரவில்லை. அவளுடைய கால்கள்தாம் ஊனமாக இருந்தனவே தவிர, உள்ளம் உறுதியாக இருந்தது. அவள் விஸ்கோன்ஸின் சென்றாள். பயிற்சி பெறவும் தேர்ந்தெடுக்கப்பட்டாள்!

எத்தனையோ ஊனமுற்ற இளைஞர்களும், யுவதிகளும் உற்சாகத்துடன் நீந்துவதைப் பார்த்தாள் ஜானகி. அவளுக்குப் புதிய உற்சாகம் பிறந்தது! தன் பயிற்சியை கவனமாகவும், தீவிரமாகவும் கற்றுத் தேர்ந்தாள்.

நீச்சலுக்கு கால்கள்தான் மிக அவசியம். ஆனால் ஜானகி என்ன பண்ணுவாள்? மன உறுதி மிக்க அவள் தன் இரு கைகளையே கால்களாகவும் எண்ணி, தசைகளுக்கு வலுவேற்றி மும்முரமாக நீச்சல் கற்றாள்.

விரைவிலேயே கால் உள்ளவர்களுக்கு இணையாக அவளால் நீந்த முடிந்தது.

ஜானகி தொடர்ந்து, இடை விடாமல், தன் பயிற்சியைத் தொடர்ந்தாள். 20 கி.மீ. வரை அவளால் தொடர்ந்து நீந்த முடிந்தது. மேலும், மேலும் முயன்றாள். சாதனை புரியும் மன உறுதி அவளுக்கு மிக அதிகமாக இருந்தது. அவரது பயிற்சியாளர் தினேஷ் ஸ்வர்ணா, ஜானகியின் பயிற்சிக்கும் வெற்றிக்கும் பக்க பலமாய் நின்று உதவினார்!

இங்கிலாந்தில் உள்ள இங்கிலீஷ் கால்வாய் நீச்சல் வீரர்களின் இலட்சிய சொர்க்கம். வாழ்நாளில் ஒரு முறையாவது அதை நீந்திக் கடக்க வேண்டும் என்பது அவர்களுடைய இலட்சியமாக இருக்கும். ஜானகியால் சும்மா இருக்க



முடியுமா? இங்கிலாந்திலுள்ள கால்வாய் நீச்சல் அமைப்புக்குத் தன் விண்ணப்பத்தையும், தகுதிச்சான்றுகளையும் அனுப்பி வைத்தாள்.

இங்கிலாந்து 'கால்வாயை நீந்திக் கடப்பது, உலக நீச்சல் வீரர்களுக்குப் பெருமையான சாதனை ஆயிற்றே! ஜானகியின் விருப்பத்தை அந்த அசோஸியேஷன் ஏற்றது! அவளது சாதனைக்கான நாள் குறிக்கப்பட்டது!

ஜானகி ஆயத்தமானாள். அவளது பயணத்திற்கான செலவுகளை கர்நாடக அரசும், சில தனியார் நிறுவனங்களும் ஏற்றன.

இப்படிக் கால் ஊனமுள்ள ஒருவர், அதுவும் பெண் - எப்படி இங்கிலாந்து கால்வாயைக் கடக்க முடியும் என்று பலரும் சந்தேகம் எழுப்பினர். அவர்கள் எழுப்பிய மறுப்புகள் எதையுமே ஜானகி சட்டை செய்யவில்லை.

குறித்த நாள் வந்தது. 36 கி.மீ. தூரமுள்ள இங்கிலாந்து கால்வாயை ஜானகி 14 மணி, 5 நிமிடத்தில் கடந்து சாதனை புரிந்தாள்! உலகமே அவளைப் பாராட்டி, பெருமிதம் கொண்டது.

உயர்ந்த லட்சியமும், விடா முயற்சியும், தளராத மனமும் மட்டும் இருந்தால் ஊனம் ஒரு குறையே அல்ல என்பதற்கு ஜானகி ஒரு மாபெரும் எடுத்துக்காட்டு!

– எஸ். காந்திமதிபாய்.

கோடை விடுமுறைப் போட்டி - I முடிவு

மாதந்தோறும் வைக்கும் போட்டியோடு கூட, விடுமுறை மாதங்களான மே, ஜூன் மாத இதழ்களிலும் இரண்டு விடுமுறைப் போட்டிகளை கோகுலம் தொடர்ந்து அறிவித்து வருகிறது. இந்த முறை மூவாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொண்டு, தபால் துறையையும், ஆசிரியரையும் ஒரு கலக்கு கலக்கியிருக்கிறார்கள்! பெரும்பாலானவை (2,500க்கு மேல்) சரியான விடை! வழக்கப்படி குலுக்கல் முறைதான் பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்கக் கை கொடுத்தது.

சரியான விடை :

தலை (1), தவலை (23)
குவி(11), குருவி (2)
குலை (3), குடலை (20)
வில் (18), விரல் (4)
குரை (5), குதிரை (13)
குடை (16), குட்டை (6)
சடை (7), சட்டை (24)
கூடு (8), கூண்டு (15)
கால் (9), காவல் (17)
கோடு (10), கோட்டு (22)
கோல் (12), கோவில் (19)
மலை (14), மதலை (21)

ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :

1. ஆர். திவ்யா, பட்டிவீரன்பட்டி.
2. தே. அந்தோணி ஜோசப், சென்னை - 63.
3. P. செந்தில், திருத்தணி.
4. சாகுல் ஹமீது, நாகப்பட்டினம்.
5. ஆர். வாசுதேவன், ஸ்ரீரங்கம்.
6. ஏ. ஜார்ஜ் ஹாரிஸ் ராஜா, சேலம் - 7.
7. ஆர். மகேஸ்வரி, மேட்டுப்பாளையம்.
8. எஸ். ஏ. முகமது மைதீன், கடையநல்லூர்.
9. வித்யா சங்கரன், பத்ராவதி, கர்நாடகா.
10. ஆர். ஜசிந்த், திருநெல்வேலி.
11. ஆர். ஸ்ரீவத்சன், சென்னை - 91.
12. கே. தஸ்தகீர், தஞ்சை.
13. சி. வைத்தியநாதன், விழுப்புரம்.
14. ஆர். அகஸ்றா, சாயர்புரம்.
15. மா. பெரியசாமி, முகவூர்.
16. கே. அப்துல் வாஜித், வேலூர் - 3.
17. யசோதா, உதகை - 6.
18. P. ஜோசபைன், தூத்துக்குடி - 8.
19. பா. சிவகுருநாதன், நெய்வேலி - 3.
20. பர்வீன் இரஹ்மான்சே, திருச்சி - 17.

பரிசு பெற்றவர்களுக்கு கோகுலம் வாசகர் சார்பில் பாராட்டுகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

பெருமை

ஒரு சிற்றெறும்பு தன் வளையை விட்டு வெளியே வந்து அழகான உலகத்தைப் பார்த்தது. அதைச் சுற்றிலும் பெரிய பெரிய மரங்கள், விலங்குகள், செடிகள், பறவைகள், மனிதர்கள் ஆகியோரைக் கண்டது.

பின்னர் தன்னை ஒரு முறை பார்த்துக் கொண்டு வருந்தியது. 'ப்பூ' என்று ஊதினாலே பறந்து விடக் கூடிய அற்ப உயிரினமாக நான் ஏன் பிறந்தேன்? இதை விட சாவதே மேல். ஆண்டவன் ஏன் நம்மை இவ்வாறு படைத்தான்?'' என்று மனம் நொந்து வருந்தியது.



அப்போது அங்கு ஒருவர் ''சோம்பேறிப் பயலே அந்தச் சின்ன எறும்பைப் பார்! எவ்வளவு சுறுசுறுப்பாக இருக்குது? நீயும் இருக்கியே சோம்பேறிப் பயலே'' என்று ஒரு சிறுவனைத் திட்டிக் கொண்டிருந்தார்.

எறும்பு தன்மேல் சற்று நம்பிக்கை கொண்டு மேலும் நகர்ந்தது. அப்போது ஒரு பெரியவர் தன் பேரனிடம், ''பார்த்தா சின்னதா இருக்கிற எறும்பு, யானையோட காதுல புகுந்துட்டா, யானை செத்து விடும்'' என்று கூறிக் கொண்டிருந்தார்.


அதைக் கேட்ட எறும்பு மனம் தெளிந்தது. 'உலகில் உள்ள ஒவ்வொரு உயிருக்கும் தனிப் பெருமை உண்டு! சிறப்பு உண்டு' என்பதை உணர்ந்து கொண்ட எறும்பு மனமகிழ்ச்சியுடன் இரை தேடச் சென்றது.

– எஸ். சுரேஷ்பாபு, நத்தம்.



என் மனம் கவர்ந்த நண்பர்கள் இவர்களே.
என்றென்றும் நான் பாதுகாப்பேன் இவர்களை.
கோரஸ் வழங்கும் பளிச்சென்ற அழகிய வண்ணங்
களைக் கொண்டு கண்ணைக் கவரும் படம் ஒன்றை
பெயிண்ட் செய்யுங்கள். பொக்கிஷம் போன்று என்றென்றும் அதை
பாதுகாத்திடுங்கள். போஸ்ட்டர் கலர்கள், வாட்டர் கலர்கள், வேக்ஸ்,
ஃப்ளோரஸண்ட், ப்ளாஸ்டிக் க்ரேயன்கள் என களஞ்சியமாகக் குவிந்துள்ள ஆர்ட்
மெட்டீரியல்களிலிருந்து வேண்டியவற்றை தேர்ந்தெடுங்கள். போஸ்ட்டர்கள்,
பர்த்டே கார்டுகள், க்ரீட்டிங் கார்டுகள் மற்றும் ஸ்கூல் ப்ராஜக்டுகளை தயாரியுங்கள்.
kores
WAX CRAYONS
WITH ERASER
NON TOXIC
kores
WATER COLOURS
kores
FLUORESCENT CRAYONS
10
kores
Cobalt Blue
POSTER COLOUR
kores
Poster Red
POSTER COLOUR
கோரஸ்
kores
STUDENTS'
CAKES
இலவசம்!
வண்ணம் தீட்டுவதற்கென கண்கவர் வரை படம்
உங்கள் பெயர் மற்றும் முகவரி தெளிவாக
எழுதப்பட்ட (ஆங்கிலத்தில் எழுதினால் உசிதம்)
1 ரூபாய் தபால் உறையை இம் முகவரிக்கு
அனுப்பவும்: கோரஸ் (இந்தியா)லிட்.,
தபால் பெட்டி 6558, பம்பாய் 400 018.
கோரஸ் ஸ்டூடன்ட்ஸ் ஆர்ட் மெட்டீரியல் கொண்டு வண்ண மயமான உலகைப் படைத்திடுங்கள்
AKA/593-TA

பிருந்தாவனக் கதையரங்கம்



செடியும் மரமும்

ஒரு பெரிய பணக்காரர் தன் மகனுடைய கெட்ட குணங்களை மாற்றி நல்ல பழக்கமுள்ள ஒருவனாக மாற்றிட வேண்டும் என்று ஒரு அறிவாளியை அணுகிக் கேட்டுக் கொண்டார். அறிவாளி தனவானுடைய மகனை அழைத்துக் கொண்டு ஒரு தோட்டத்திற்குள் சென்றார். அங்கு ஓரிடத்தில் அவனை நிறுத்தி ஒரு சிறிய செடியை வேருடன் எடுக்கச் சொன்னார். சுலபமாக அவன் செடியை எடுத்து விட்டான். அதன் பிறகு ஒரு பெரிய செடியை அவர் எடுத்து விடச் சொன்னார். பையனும் கொஞ்சம் கஷ்டத்துடன் அந்தப் பெரிய செடியைப் பிடுங்கினான்.

பிறகு அடர்த்தியாயிருந்த செடி ஒன்றை பிடுங்கி விடக் கூறினார். பையன் தன் பலத்தையெல்லாம் உபயோகித்து அந்தச் செடியையும் எடுத்து விட்டான். பிறகு அறிவாளி அவனிடம் ஒரு கொய்யா மரத்தைக் காட்டி அதை எடுத்து விடுமாறு கூறினார். தனவானின் பையன் மரத்தின் அடிப்பாகத்தைப் பிடித்துப் பல முறை முயன்றும் முடியாததால், 'இது மிகக் கடினமான காரியம். என்னால் முடியவில்லை என்றான். அதற்கு அறிவாளி இதே போல்தான் கெட்ட பழக்க வழக்கங்களும். அவைகள் சிறிதாக இருக்கும் போது அவற்றை நீக்கிவிடுவது சுலபம். ஆனால் அவற்றை மரம் போல் வளர விட்டால் அவற்றை நீக்குவது மிகக் கடினமான செயலாகும்' என்றார். அன்றிலிருந்து அந்த தனவானின் பையன் மாறி விட்டான்.

- இந்திரா கோபாலன்,
திருச்சி - 14.



பேராசை

நந்தியூர் என்ற கிராமத்தில் கண்ணன் என்பவன் வாழ்ந்து வந்தான். அவன் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவன்தான் என்றாலும் பேராசை அதிகம்.

ஒரு நாள் அவன் வெளியூருக்குச் சென்று விட்டு பேருந்தில் திரும்பிக் கொண்டிருந்தான். அப்பொழுது அவன் அருகில் ஒரு காகிதப் பொட்டலம் கிடந்தது. அதை எடுத்து பிரித்துப் பார்த்தான்.



அதனுள் பத்துபவுன் மதிப்புள்ள ஒரு தங்கச் சங்கிலி தகதகவென மின் வியது. உடனே அவன் தன்னை யாராவது கவனிக்கிறார்களா என்று சுற்றும் முற்றும் பார்த்தான். யாரும் கவனிக்கவில்லை. அவனுக்கு அருகில் அமர்ந்திருந்தவனும் ஏதோ சிந்தனையில் இருந்தான். உடனே கண்ணன் அந்த சங்கிலியைத் தன் கைப்பைக்குள் பத்திரப்படுத்திக் கொண்டான்.

அவன் இறங்க வேண்டிய இடம் வந்ததும் இறங்கி, செல்ல வேண்டிய இடத்திற்கு நடந்து சென்று கொண்டு இருந்தான். அவனை யாரோ பின்னால் கைத் தட்டி அழைப்பது போல் இருக்கவே திரும்பிப் பார்த்தவன் அதிர்ந்தான். பேருந்தில் அவனுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தவன் அருகில் நின்றிருந்தான்.

''சார் நீங்க பஸ்ல இருந்து 10 பவுன் தங்கச் சங்கிலியை எடுத்தது எனக்குத் தெரியும். அதனால அதுல பாதியை எனக்குக் கொடுத்துருங்க!'' என்று கூறினான். கண்ணன் மௌனமாக இருக்கவே, ''சரி, நீங்க பாதியை எனக்குக் கொடுக்க வேணாம். கழுத்துல போட்டிருக்கிற செயினையும், மோதிரத்தையும் எனக்குக் கொடுத்துருங்க. நான் இந்த விசயத்தைப் பத்தி வெளியில சொல்ல மாட்டேன்'' என்று கூறினான். கண்ணனும் நமக்குப் பத்து பவுன் கிடைக்கிறதே என்ற ஆசையில் அனைத்தையும் கழற்றிக் கொடுத்துவிட்டான். அவனும் அதை வாங்கிக் கொண்டு சென்றுவிட்டான்.

வீட்டிற்குச் சென்றதும் முதல் வேலையாக பொற்கொல்லரிடம் அதை கொடுத்து சோதனை செய்து பார்க்கச் சொன்னான். அப்பொழுது கண்ணனுக்கு ஒரு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது. ஆம்! அந்தத் தங்கச் சங்கிலி போலி (கவரிங்). பத்து பவுனுக்கு ஆசைப்பட்டு தன்னுடைய ரெண்டு பவுன் தங்கத்தையும் இழந்து விட்டான். பேராசை பெருநஷ்டமாக முடிந்தது.

- எஸ்.ஆர். பாபுராஜ்,
சோழன்மாளிகை.

எனக்குத் தெரியும்!

நான்கு நண்பர்கள், ஒரு சமயம் 'பிக்னிக்' போகக் கிளம்பினர். ஊருக்கு வெளியே சிறிது தூரத்தில் இருந்த காட்டுக்குச் செல்வது அவர்கள் திட்டம். அதனால், விதவிதமான உணவுப் பொருட்கள், பானங்கள் எல்லாம் மூட்டை மூட்டையாகக் கட்டிக் கொண்டு காட்டுக்குப் போய்ச் சேர்ந்தனர். பசிக்க ஆரம்பித்தது. சரி, சாப்பிடலாம் என்று, துண்டை விரித்து உட்கார்ந்து, உணவுப் பொட்டலங்களைப் பிரித்தனர். அப்போதுதான் அவர்களுக்கு, தண்ணீர் கொண்டு வர மறந்து போனது நினைவுக்கு வந்தது.



''நீ போய் தண்ணீர் கொண்டு வா'' என்று முதலாமவன், அடுத்தவனைப் பார்த்துச் சொன்னான். அதற்கு அவன், ''நான் மாட்டேன்! நான் இல்லாத போது நீங்கள் பட்சணங்களைத் தின்று விடுவீர்கள்!'' என்றான். இப்படியே ஒவ்வொருவராகப் போக மறுத்தனர்.

கடைசியாக ஒருவன் ஒப்புக் கொண்டான். தான் போய்த் திரும்பி வருகிற வரை யாரும் உணவுப் பொட்டலங்களைத் தொடுவதில்லை என்று அவர்களிடம் உறுதி வாங்கிக் கொண்டு அவன் புறப்பட்டான்.

அவன் போய் ஒருமணி நேரமாயிற்று. வரவில்லை. இரண்டு மணி நேரமாயிற்று. இன்னும் வரவில்லை. பிற்பகல் ஆயிற்று. மாலை ஆயிற்று. வரவே இல்லை! நண்பர்கள் எல்லோருக்கும் பயங்கரப் பசி.

'சரி, போனவனுக்கு என்னவாயிற்றோ, ஏனோ திரும்பி வரவில்லை. நமக்கோ பசிக்கிறது. ஆளுக்கு ஒரு பணியாரம் மட்டும் சாப்பிடுவோம். மற்றதை அவன் திரும்பி வந்தபின் பார்த்துக் கொள்ளலாம்' என்று முடிவு செய்து பொட்டலத்தைப் பிரித்தனர்.

உடனே பக்கத்து மரத்திலிருந்து பொத்தென்று ஒரு உருவம் குதித்தது! அது தண்ணீர் கொண்டுவரப் போன நாலாமவனேதான்!

''பார்த்தீர்களா? நான் நினைத்தது சரியாகப் போயிற்று! நான் இல்லாத போது நீங்கள் சாப்பிட்டு விடுவீர்கள் என்று எனக்குத் தெரியும்! அதனால்தான் இதுவரைக்கும் தண்ணீர் கொண்டுவரப் போகாமல் இங்கேயே மரத்தில் இருந்து ஒளிந்து கொண்டு, உங்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறேன்!'' என்றான் அந்த அதிபுத்திசாலி!

- சி. மணி, புத்தனாம்பட்டி.



பொன்னும் மணியும் வேண்டாம்!

"எவ்வளவோ ஆண்டுகளுக்கு முன் காபுல் நகரத்தில் ஒரு பணக்கார வியாபாரி இருந்தான். பெயர் ஜெலந்தர்கான். பணக்காரனே தவிர கடைந்தெடுத்த படு கருமி! அவனுக்கு இருந்த சொத்துக்கும், வியாபாரத்திற்கும் அவன் நவாபைப் போல் வசதியாக வாழலாம். கருமியாயிற்றே! வாழ மனம் ஒப்புமா? ஒரு பழைய கிழிந்த குடிசையிலே மனைவி, பன்னிரண்டு வயது மகன், எட்டு வயது மகளுடன் மிகவும் தொல்லைகள் நிறைந்த பகுதியில் வாழ்ந்து வந்தான்.

வீடுதான் இப்படி என்றால், உணவாவது நல்லதாக இருக்கக் கூடாதா? எல்லோராலும் கழித்து விடப்பட்ட காய்ந்து வரண்ட ரொட்டிதான். அதுவும் பேரம் பேசி வாங்கி வருவான் ஜெலந்தர்கான்.

ஜெலந்தர்கான் அப்படி ஒன்றும் கெட்டவனில்லை. வம்பு தும்புக்குப் போக மாட்டான். ஆனால் வெறும் பணப் பைத்தியம். இத்தனைக்கும் வியாபாரத்தில் நன்கு சம்பாதித்தான். இருந்தாலும் எவ்வளவு சம்பாதித்தாலும் மனநிறைவு கிடையாது. இன்னும் காசு சேர்க்கலாமே என்று எண்ணுவான். சம்பாதிக்கும் பணத்தில் தனக்கோ குடும்பத்துக்கோ தேவையான அளவு செலவு செய்து மகிழ்ச்சியாக வாழ அவன் எண்ணியதே கிடையாது! அவனிடம் உள்ள ஒரே ஒரு கெட்ட பழக்கம் கருமித்தனம் தான். மற்றபடி அவன் நல்ல மனிதன் தான்!

ஆப்கானிய கதை

தமிழில் : தம்பி சீனிவாசன்

பாவம் தந்தை!



சின்னப் பையன் சீராமன்
சிலநாள் நோயால் நலிந்தனனே
மன்னார் என்றொரு டாக்டரும்
மருந்து மாத்திரை கொடுத்தாரே.

மாத்திரை கசப்பால் விழுங்கிடவே
மாய்மாலம் அவன் செய்தனனே
ஆத்திரம் கொண்ட அப்பாவும்
அடித்துப் பார்த்தார் பயனில்லை.

மாத்திரை சாப்பிட வைத்திடவே
முயன்று தந்தை வழிசெய்தார்
தித்திப்பு வாழைப் பழத்தினிலே
திணித்து மாத்திரை தந்தாரே!

சீராம் பழத்தைத் தின்றனனே
சிந்தை குளிர்ந்தார் தந்தையுமே
அருமை மகனே ஏமாந்தாய்
என்றே அவரும் இறுமாந்தார்!

தின்றேன் பழத்தை ஆனாலும்
சின்னக் கொட்டை கண்டேனே.
மென்று அதனைத் துப்பியபின்
மிச்சப் பழத்தைத் தின்றேனே

என்றே சிரித்த சீராமன்
எழுந்து, ஓடிச் சென்றனனே!
நின்றார் தந்தை சிலையாக
நாமும் சொல்வோம் அனுதாபம்!

- அமுதன்

ஒரு வெள்ளிக்கிழமை தொழுகையை முடித்து விட்டு, குறுக்கு வழியாக வியாபாரம் செய்யும் இடத்திற்கு வந்து கொண்டிருந்தான் ஜெலந்தர்கான். அந்த வழியில் ஒரு இடுகாடு குறுக்கிட்டது.


போய்க் கொண்டே இருந்த ஜெலந்தர்கான் திடீரென்று நின்றான். அங்கே ஒரு கருநாகம் சீறிக் கொண்டு பயங்கரமாக நின்றது. அதற்கு எதிரே ஒரு அழகிய குட்டி நாகம், தலையில் விசித்திரமான கிரீடத்துடன் பதுங்கி விட முனைந்தது.

பெரிய கருநாகம், குட்டிப் பாம்பை கொத்தித் தீர்த்து விட குறிபார்த்துச் சீறியது. பாவம் குட்டிப் பாம்பு, தப்பி ஒளிய இடமின்றி உயிருக்குப் போராடியது. தன்னைப் பெரிய பாம்பு கவனித்து விட்டால், தன் பாடும் அவ்வளவுதான் என்பதை நன்கு புரிந்து கொண்ட ஜெலந்தர்கான், பெரிய கல் ஒன்றை எடுத்து பெரிய நாகத்தை நோக்கி வீசினான். பெரிய பாம்பு கல்லடி தாங்காது நசுங்கி இறந்தது! உயிர் தப்பிய குட்டிப் பாம்பு நன்றியுடன் ஒரு பார்வையை ஜெலந்தர் மேல் வீசி விட்டு ஒரு புதருக்குள் ஓடி மறைந்து விட்டது.

கடவுளுக்கு நன்றி தெரிவித்து விட்டு ஜெலந்தர்கான் வீடு திரும்பினான். வழியில், மனைவி மக்களுக்காக காய்ந்து வரண்ட ரொட்டி நாலைந்தையும், கொஞ்சம் கனிந்து போன காரெட், வாடிய கீரையையும் வாங்கிக் கொண்டு வீடு சேர்ந்தான்.

பசியோடு இருந்த மனைவி குழந்தைகள், ''என்ன இது?'' இன்றைக்கு வெள்ளிக் கிழமையாச்சே! இன்றைக்குக் கூடவா நல்ல சாப்பாடு இல்லை? போன வாரம் கேட்ட போது, அடுத்த வாரம் குருமா பண்ணலாம் என்று கூறினீர்களே! இன்றைக்குமா காய்ந்த ரொட்டியும், வரண்ட கேரட் கீரையும்!'' என்று முகத்தைச் சுளித்தார்கள்.

அவர்களுடைய முகவாட்டத்தைக் கண்டு ஜெலந்தர்கான் கலங்கவில்லை. மனைவியிடம், ''பணத்தருமை தெரியாத பைத்தியக்காரியாக இருக்கிறாயே! குருமா என்றால் சும்மாவா? ஆட்டு



இறைச்சி வேண்டும். அது தவிர மசாலா சாமான் வேண்டும். இதற்கெல்லாம் எத்தனை செலவாகும்? கேட்டதும் மாட்டேன் என்று சொன்னால் உங்களுக்கெல்லாம் எத்தனை ஏமாற்றமாக இருந்திருக்கும்? சரி, ஒரு வாரம் வரை, கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பிலாவது மகிழ்ச்சியாக இருங்கள் என்றுதான் 'ஆகட்டும் அடுத்த வாரம்' என்று சொன்னேன்'' என்று விளக்கினான்.

''உடுத்திக் கொள்ள நல்ல துணி கூட வேண்டாம். வயிறு நிறைய நல்ல சாப்பாடாவது சாப்பிட வேண்டாமா? எதற்காகச் சம்பாதிப்பது? ஏன் இந்த ஆசை உங்களுக்கு மட்டும் வரவில்லை?'' என்று கண் கலங்கினாள் மனைவி.

''பணம் சேர்க்கும் ஆசை வந்து விட்டால் மற்ற எல்லா ஆசைகளும் போய் விடும்'' என்றான் ஜெலந்தர்கான்.

''இறைவன்தான் உங்களுக்குப் பணம் சேர்க்கும் ஆசையிலிருந்து விடுதலை வழங்கி, முழு மனிதராக்க வேண்டும்'' என்று விசும்பினாள் மனைவி.

அன்று நள்ளிரவில் ஜெலந்தர்கான் தூக்கம் கலைந்து எழுந்தான். யாரோ வாசல் கதவைத் தட்டினார்கள்.

''கதவைத் திறவுங்கள். நல்ல சமாசாரம்தான். ஜெலந்தர்கான் உங்களுக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடிய செய்தியே கொண்டு வந்திருக்கிறேன்'' என்று பதில் வந்தது.

வெளியே வந்து பார்த்தால் நன்கு உடுத்திய இரண்டு உயர் குடும்பப் பிரபுக்கள், கம்பீரமாக நின்று கொண்டிருந்தனர்.

''ஜெலந்தர்கான் அவர்களே, நீங்கள் நேற்று ஒரு நற்பணி செய்திருக்கிறீர்கள். அதற்காக எங்கள் நன்றியைக் காட்ட எங்களுக்கு ஒரு வாய்ப்புத் தாருங்கள். எங்களுடன் வாருங்கள்'' என்று பணிவோடு வணங்கி அழைத்தனர் இருவரும். அவர்கள் பேசிய மொழி

பழங்காலத்து 'தாரி' மொழி போல இருந்தது.

ஜெலந்தர்கான் குழப்பத்துடன் அவர்கள் கூட நடந்தான்.

ஜெலந்தர்கானின் குழப்பத்தைக் கண்டதும் இரண்டு பேரில் முதியவராக இருந்தவர் ''பயப்பட வேண்டாம் ஜெலந்தர்கான். ஒரு ஆபத்தும் இல்லை. எனது யோசனையைக் கேட்டால் நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் நன்மை அடைவீர்கள்'' என்றார்.

இன்னொருவர், ''இப்போது நாம் போகும் இடத்தில் உங்களுக்கு நகையும் பொன்னும் மணியும் கொட்டித் தருவார்கள். கனவிலும் நினைத்துப் பாராத அளவுக்கு அவை இருக்கும். ஆனால் நீங்கள் மயங்கி விடாதீர்கள். ஆசைக்கு அடிமையாகி விடாதீர்கள். அதைக் கையால் கூடத் தொடாதீர்கள். ''வேறு என்ன வேண்டும்?'' என்று அவர்கள் கேட்பார்கள். '' 'என்னை எனக்குத் தாருங்கள் போதும்' என்று திரும்பத் திரும்பச் சொல்லுங்கள். உங்களுக்கு நன்மை உண்டாகும். உங்கள் குடும்பம் மகிழ்ச்சி அடையும்'' என்று சொல்லிக் கொடுத்தார்.

ஊரின் மருதியை ஒட்டிய இருண்ட வழியே அந்தப் புதியவர்களுடன் போன போது ஜெலந்தர்கானுக்கு அச்சம் ஏற்பட்டது. திடீரென்று, ''கண்ணை மூடிக் கொள்ளுங்கள் ஜெலந்தர்கான். நாங்கள் சொல்லும் வரை திறக்காதீர்கள். திறந்தால் ஆபத்து'' என்று எச்சரித்து விட்டு இரண்டு பிரபுக்களும் ஜெலந்தரின் கைகளைப் பின்புறம் கட்டி இழுத்துச் சென்றனர். ஒருசில விநாடிகள் வரை எங்கோ காற்றில் வானில் பயணம் போவது போல உணர்ந்தான் ஜெலந்தர்கான். சுற்றிலும் வீசிய காற்றின் மணம் மாறியது. நல்ல மலர்களின் வாசனை மனதைக் கொள்ளை கொண்டது.

''கண்ணைத் திற!''


திறந்து பார்த்தால் ஜெலந்தர்கான் அழகிய நந்தவனத்தில், பறவைகள் இசையமைக்கும் சூழலில், பளிங்குத் தரையில் தான் நிற்க எதிரே நடைபாதை முடியும் இடத்தில் ஒளி சிந்திய பெரிய சிம்மாசனத்தைக் கண்டான். அதிலே அமர்ந்திருந்த பெரியவரைக் கண்ட உடனேயே குனிந்து சலாமிட்டு வணங்க வேண்டும் போன்ற ஓர் உணர்வு ஏற்பட்டது. அவரது தோற்றம் அத்தனை கனிவாகவும், ஒளிமயமாகவும், கம்பீரமாகவும் இருந்தது.

ஜெலந்தரை அங்கு அழைத்து வந்த இருவரும் அவனை சிம்மாசனத்துக்கு முன்பு இழுத்துப் போனார்கள்.

முதியவர் சொன்னார் :

''அரசே! தாங்கள் கட்டளையிட்டபடி நமது அரசகுமாரியை ஆபத்திலிருந்து காப்பாற்றியவரை இதோ அழைத்து வந்திருக்கிறோம்'' என்றார்.

சிம்மாசனத்திலிருந்த மன்னர் புன்னைகைத்து ஜெலந்தர்கானை அன்பு பொங்க அருகே அழைத்தார். ஏனோ ஜெலந்தர்




கானுக்கு பயம் வந்து விட்டது. முகம் வெளிறி விட்டது.

இதற்குள் மன்னர் தாமே கீழே இறங்கி வந்து ஜெலந்தரைத் தழுவிக் கொண்டார். ''எத்தகைய பெரிய ஆபத்தில் இருந்து அரசகுமாரியை நீங்கள் காப்பாற்றியிருக்கிறீர்கள்! எங்கள் நன்றியை எப்படி வெளிப்படுத்துவது என்று தெரியாது நானும் ராணியும் தவிக்கிறோம்.''

ஜெலந்தர்கானுக்கு ஒன்றும் புரியவில்லை. இவர்கள் குறிப்பிடும் அரசகுமாரி யார்? 'அவளை எப்பொழுது எப்படிக் காப்பாற்றினோம்?' என்று குழப்பிக் கொண்டான்.

அவன் குழப்பத்தை உணர்ந்த அரசர் இப்போது இந்த உருவத்தில் இருப்பது போல் நாங்கள் எப்போதுமே இருக்க மாட்டோம். நாங்கள் மாயாவி அரசர்கள். எங்கள் அரசகுமாரியை பாதாள ராஜகுமாரன் மணக்க விரும்பினான். ஆனால் அவள் அவனை விரும்ப





"தாத்தா, பகலில் பாம்புக்குக் கண் தெரியுமா?"

"எனக்குத் தெரியாதுப்பா."

"நான் உங்களைக் கேட்கலை, பாம்புக்குத் தெரியுமான்னுதான் கேட்டேன்!"

- மு. திருநாவுக்கரசு

"இளையராஜாவுக்கும் அதோ ஏர்கலப்பையைத் தூக்கிட்டுப் போறாரே, அந்த விவசாயிக்கும் உள்ள ஒற்றுமை தெரியுமா?"

"தெரியலியே!"

"இரண்டு பேருமே வயலினைப் பற்றி நன்கு அறிந்தவர்கள்!"

- வலங்கைமான் நூர்தீன்

வில்லை. அதனால் அவன் அனுப்பிய பரிசுகளை ஏற்காது மறுத்து விட்டாள். அதனால் பாதாள ராஜகுமாரனுக்கு ஒரே கோபம். நேற்று இவள் ஒரு பாம்பு உருவில் காட்டுக்கு வந்திருக்கிறாள். பாதாள ராஜகுமாரன் தானும் ஒரு கரு நாகப் பாம்பாக உருமாறி அவளைக் கொன்று விடத் துரத்தி வந்தான். ராஜகுமாரி அவனிடம் வகையாகச் சிக்கிக் கொண்டாள். நீ மட்டும் வந்து, பாதாள ராஜகுமாரனைக் கொல்ல வில்லை என்றால் என் பெண் இறந்தி ருப்பாள்."

கூறி முடித்த மன்னர் ஒரு பெரிய தட்டு நிறைய நகையும் பொன்னும் மணி யும் வைத்து, "எங்கள் நன்றியின் அடை யாளமாக இதைத் தாங்கள் ஏற்க வேண்டும்" என்று கெஞ்சினார்.

கருமி ஜெலந்தர்கான் கண்ணிலே பேராசை. ஆனால் பக்கத்தில் நின்ற பெரியவர் கண்களைப் பார்த்ததும் அவர் விடுத்த எச்சரிக்கையும், உபதேசமும் நினைவு வந்தது.

"ஐயா, எனக்கு இதெல்லாம் வேண்டாம்" என்று பணிவாகச் சொன்னான் ஜெலந்தர்.

"குறைவாக இருக்கிறது என்று எண்ணுகிறீர்களா?" என்று சிரித்த மன்னர் மற்றொரு பெரிய தட்டை வர வழைத்து நீட்டினார். உலகத்தின் எல்லா வகை நவரத்னங்களும் அதில் மின்னின.

அரிய நவரத்தினங்கள் நிறைந்த அந்தத் தட்டைக் கண்டதும் ஜெலந்தர் கான் மனதில் சபலம். வாங்கிக் கொண்டு விடுவோமா என்று ஆசை பொங்க எண்ணினான். ஆனால் அடுத்த கணமே பெரியவரின் பார்வை அவனை எச்சரித்தது. "வேண்டாம் ஐயா. எனக்கு இந்த பொன்னும் மணியும் வேண்டவே வேண்டாம். இவை எதுவுமே தேவை யில்லை. என்னையே எனக்குத் தாருங் கள். இது போதும்" என்றான்.

அரசர் மகிழ்ந்து கரத்தைத் தட்டி னார். செல்வக் குவியல்கள் மறைய, அங்கே ஒரு ஏவலாள், கையில் ஒரு நீலப் பெட்டியுடன் வந்தான். மன்னர் அப் பெட்டியைத் திறந்து உள்ளேயிருந்து சிறிய ஓர் ஒளிவீசும் பட்டுப் பொட்ட லத்தை எடுத்தார். மஞ்சள் பட்டு நூலில் கட்டப்பட்ட அதனை மன்னர் எடுத்து ஜெலந்தரின் கழுத்திலே அணிவித்தார். "கடவுள் உன்னைக் காப்பாற்றட்டும்" என்று கையெடுத்து ஆசி வழங்கவும் அங்கே இசைவெள்ளம் எழுந்தது. என்ன நிகழ்கிறது என்று தெரிவதற்கு முன்னரே ஜெலந்தர்கான் நினைவிழந் தான்.

கண்விழித்துப் பார்த்தால் பொழுது விடிந்து வெளிச்சம் பரவியிருந்தது. ஜெலந்தர்கான் குடிசையில் கிழிந்த பாயில் கிடந்தான். இரவில் எங்கே எப் படிப் போய் விட்டு இங்கே இப்படித் திரும்பினோம் என்பது ஒன்றும் புரியா மல் விழித்தான் ஜெலந்தர்கான்.

ஆனால் தன் மனதில் ஏதோ புதிய மாறுதல் ஏற்பட்டுள்ளதை அவனால் உணர முடிந்தது!

"டீ தயார்" என்று கூறிக் கொண்டே வந்தாள் மனைவி.

ஜெலந்தர்கான் மனைவியைப் புது மையாகப் பார்த்தான்.

'பாவம். என்ன கஷ்டப்படுகிறாள் இவள்! இவளுக்கும் குழந்தைகளுக்கும் உடுக்கக்கூட நல்ல ஆடை இல்லை. வீட்டில் தேயிலை, சர்க்கரை கூட போதும் அளவு இல்லை. நேற்றிரவு எல்லோருக்கும் கால் வயிற்றுச் சாப்பாடு. நான் ஏன் இப்படிக் கருமியாக இருக்கிறேன்! எனக்கு என்ன குறை? காபூல் தவிர எனக்கு எத்தனை கடைகள் இருக்கின்றன! எத்தனை வருமானம் வருகிறது! இருந்தும் நான் ஏன் குடும்பத்துக்கு ஒன்றும் செய்யவில்லை?' என்று முதல் முதலாக அவன் மனதில் புதிய கேள்விக் குறி பிறந்தது. இதுவரை இப்படி அவன் எண்ணியதே கிடையாது!

கைகால் கழுவி கடவுளைத் தொழுதான். உள்ளே வந்து குடும்பத்தினரைப் பார்த்தான். அவன் முகத்திலே ஒரு வித்தியாசமான களை தெரிந்தது.

மகனை அழைத்தான். ''இந்தா பத்துத் தங்கக் காசு. போ. கடைத் தெருவுக்குப் போய் நம் எல்லாருக்கும் நல்ல ரொட்டியும் வெண்ணெயும் இனிப்பும் பலகாரமும் வாங்கி வா. நமது கடையிலே சிப்பந்தியை அழைத்துத் துணிக்கடைக்குப் போய் அம்மாவுக்கும் உனக்கும் தங்கைக்கும் உயர்ந்த உடுப்பு வாங்கி வரச் சொல்லு. அம்மாவுக்கு வேண்டிய வீட்டுச் சாமான்களை எல்லாம் வாங்கி வரச் சொல்லு'' என்று மடமடவென்று உத்தரவு கொடுத்தான் ஜெலந்தர்கான்!

மகனுக்கு ஒரே திகைப்பு. அப்பா இப்படிப் பேசியதை அவன் பார்த்ததே இல்லை! பணத்தை வாங்கிக் கொண்டு மகிழ்ச்சியுடன் வெளியே ஓடினான்.

''இன்றைக்குத்தான் நீங்கள் நீங்களாகியிருக்கிறீர்கள்'' என்று மகிழ்ச்சிக் கண்ணீர் பெருக்கினாள் மனைவி.

மகளும் ஆனந்தக் கண்ணீர் விட்டு நின்றாள்.

''இது தானாக வரவில்லை. அந்த தெய்வ சக்திமிக்க மன்னர் வழங்கிய வரம். இதை மட்டும் கேட்காமல் அவர் பரிசாக அளித்த செல்வங்களை நான் வாங்கி வந்திருந்தால் நான் இன்னமும் பழைய கருமியாகத்தான் இருந்திருப்பேன். நன்றியெல்லாம் இறைவனுக்கு'' என்றான் ஜெலந்தர்கான்.

என்ன நாடுகள்? - போட்டி


அட்லாஸ் என்ற உலக நாடுகளின் வரை படங்களைப் பார்த்தாலே முகம் மலர்பவர்களுக்கும், உலக வரைபடத்தில் எந்த நாடு எங்கிருக்கிறது என்பதை மறந்து விட்டவர்களுக்கும், அருமையான வாய்ப்பு. சில நாடுகளின் வரை படங்கள் தரப்பட்டுள்ளன. எல்லாமே அட்லாஸில் உள்ளவைதான். அவற்றிற்கு எண்களும் தரப்பட்டுள்ளன, அவற்றைக் கட்டங்களில் எழுதி கூப்பனையும் பூர்த்தி செய்து ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டியதுதான். பரிசு இல்லாமல் போட்டியா? ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

என்ன நாடுகள்? - போட்டி

பெயர் :.. வயது :....................


முகவரி :.. பின்கோடு : ....

முடிவு தேதி 15. 7. 93





கதை: ஆனந்தி
ரங்கனுக்கு உதவிய தங்கப் பறவை!
படம்: ஜோயல்
மூன்று சகோதரர்களுக்கும் தச்சுவேலை குடும்பத் தொழில்... மூத்த அண்ணன் கணேசன்...
டேய் ரங்கா! பட்டறையைப் பெருக்கு!
சரி... சரி... சரி...
இரண்டாவது முருகேசன்...
டேய் திக்குவாயா! சிராய்த் தூளை யெல்லாம் திரட்டிக் கணக்குப் பிள்ளை வீட்டில் கொடுத்துக் காசு வாங்கி வா!
மூன்றாவது ரங்கன்...
திக்குவாயன்னு கேலி பண்றாங்க! பச்சை மரத்தை வெட்டச் சொல்றாங்க!... நம்மால முடியாதுப்பா... காடே அழிஞ்சிடும்!
மூவரின் தாய்...
கணேசா! காட்டுக்குப் போறியா? சாப்பாடு கட்டி வைச்சிருக்கேன்!
பின்னே? நான் தான் போயாகணும்!
... அந்தத் திக்குவாயன் மரம் வெட்ட மாட்டானாம். நல்ல தம்பி வாய்ச்சான் எனக்கு.
தச்சு வேலை பண்ற குடும்பத்தில் பிறந்துட்டு மரம் வெட்ட மாட்டேன்னா எப்படி?


சரி சரி... ரங்கனை மத்தியானமா அனுப்பு. வெட்டிய மரத்தைத் தூக்கி வரவாவது உதவட்டும்!
சரி!
காட்டில் கணேசன் நடக்க...
ஆ! இது நல்ல முதிர்ந்த மரம்...
அப்போது...
தம்பி! ரொம்பப் பசி!
போப்பா, கொண்டு வந்த சாப்பாடு எனக்கே காணாது!
கணேசன் கோடாலி வீச... சுழன்று...
ஆ!
ஐயோ! கால் போச்சே!




வெட்டிய மரத்தைச் சுமந்து போக வந்த தம்பி...
அண்ணா, என... என... என்னாச்சு?
வாய்தான் கோளாறு... கண்ணுமா? பார்த்தா தெரியலை?
தம்பி உதவ, வீடு சேர்ந்தான் கணேசன்...
பொ... பொ... பொறுத்துக்கோ! மருந்து போ... போ... போட்டிருக்கேன்...
மறுநாள்...
முருகேசு! நான் பார்த்து வைச்சிருக்கும் மரத்தை இன்னிக்கு நீ வெட்டிடு! தெத்துவாயன் அடையாளம் காட்டுவான்!
அதன்படி...
இ... இ... இதோ... ம... ம... மதியானம் சு... சு... சுமந்துபோக வரேன்.
சரி, சரி, சாப்பாட்டு மூட்டையை அப்படி வை!
முருகேசன் கோடாலியை ஓங்க...
அப்பனே! ரொம்பப் பசி...
காட்டிலே கூட பிச்சைக்காரன் தொல்லையா... போய்யா போ!



கோடாலி நழுவி...
ஆ!
மரத்தில் மோதித் திரும்பி...
ஐயோ! செத்தேன்!
மத்தியானம் தம்பி வந்து..!
மரம் வெ..வெ.. வெட்டலையா?
கால் போச்சுடா, பாவி!
ம...ம... மரம் சும... சுமக்க வந்தேன்! உன்னைச் சுமந்து போ...போ...போறேன்!
வீட்டுல பச்சிலை வைத்துக் கட்டுப் போட்டா, தீருவாயா...
மறுநாள் காலை...
ரங்கா! இவங்களுக்குக் கால் குணமாக ஒரு வாரமாகும். நீ அந்த மரத்தை வெட்டி வா! தொழில் செய்யாட்டா உலை பொங்காது...
ச...ச.... சரிம்மா...



மூட்டையில் இட்லியும் இதிலே தாகத்துக்கு மோரும் இருக்கு!
சரி... வெயிலுக்கு இதமா இருக்கும்.
காடு நோக்கி நடந்தான் ரங்கன்.
சே! மரம் வெட்டறது பாவம் இல்லியா?... உம்... ஆனாலும் வீட்டிலே சோறு பொங்கணுமே!
காட்டில்...
ஐயா! ரொம்பப் பசிக்குது...
வா... வா... வாங்க... ஓ... ஓ... ஓடைக் கரையில் சாப்பிடலாம்!
இட்லி பிரமாதம்... நீ நல்லா இருக்கணும்.
இ... இந்தாங்க... மோ... மோ... மோர்!
சாப்பிட்டு முடிந்ததும்...
நானும் மரம் வெட்ட உதவி செய்யறேன்!
ந... ந... நன்றி!




கிழவர் மரத்தின் மறைவிலிருந்து ஒரு ரம்பத்தை எடுத்தார்...
கோடாலி வேணாம். இதைப் பிடி. வேலை சீக்கிரம் முடியும்!
ச... சரி!
ரங்கனுக்கு அறுக்க மனம் இல்லை...
சோனியா நீ? பலமா இழு. வேகமா!
பாவம்... ந...ந... நல்ல... ம...ம... மரம்!..
உனக்கு நல்ல மனசு. மரங்களிடம் கூட பரிவு. ஆனா, தயங்காதே! இதுக்கடியில் ஒரு அதிசயம் காத்திருக்கும்... தம் கட்டி இழு...
மரம் சாய்ந்தது...
ஆ! தங்கப் பறவை!
நான் போய்ட்டு வரேன்!
கிழவர் மறைய...
எல்லாம் ஒரே ஆச்சரியமா இருக்கு. கிழவர் ஆசியால் எனக்குச் சரியாகப் பேசவும் முடிகிறது... ஆனா உன் வீட்டைத்தான் நான் இடிச்சுட்டேன். மன்னிச்சுக்க.


கவலைப்படாதே! என்னை அரண்மனைக்குக் கொண்டு போ! ராஜா உனக்கு நிறையப் பரிசுகள் தருவார்!
தங்கப் பறவையே! உன்னைச் சிறையிலடைத்து நான் பரிசு பெறுவதா? வேண்டாம்!
என்னைக் கவனிச்சுக்க எனக்குத் தெரியும்!
பறவை ஒரு தங்க இறகை உதிர்த்தது...
இதை விற்று காசாக்கிக் கொள்! ஒரு கூண்டு வாங்கிய பிறகு, உனக்கு நல்ல உடைகள் தைத்துக் கொள்!
ரங்கன் அப்படியே செய்தான்.
ராஜகுமாரன் மாதிரி இருக்கே!
பாக்கிப் பணத்தை அம்மாவிடம் செலவுக்குக் கொடுத்திருக்கேன்!
பறவை கூண்டில் குடியேற, பயணப்பட்டு மாலையில்...
இரவு இந்த சத்திரத்தில் தங்கி, நாளை மறுபடி தலைநகர் நோக்கிச் செல்வோம்!



சத்திரத்து முதலாளிக்கு மூன்று பெண்கள்...
கவனிச்சியா, தூங்கப் பறவை!
அதை மதிக்கவே முடியாது!
சொக்குது!
அதிகாலையில்...
அசந்து தூங்கறான்!
ஆளுக்கு ஒரு இறகு எடுத்துக்கிட்டா தெரியவா போகுது!
பறவையை மூத்தவள் தொட்டதும்...
ஐயோ! ஒட்டிக்கிச்சே! கையை எடுக்க முடியலையே!
என்னடி உளறல்!
அவளைப் பிடிச்சு இழு!
ஐயோ! என் கையும் ஒட்டிக்கிச்சே!
எனக்கும் அதே கதிதான்! காப்பாத்துங்க! காப்பாத்துங்க!
சத்தம் கேட்டு விழித்தான் ரங்கன்...
சரியாப் போச்சு! நீங்களும் என்னோட தலை நகருக்கு வர வேண்டியது தான்!


எங்கள் பயணம் தொடர, சத்திரத்தின் முதலாளி...
யாருடா அவன்! என் பெண்களை இழுத்துக் கொண்டு போறவன்?
திருடப் போய் மாட்டிக் கொண் டோம் அப்பா!
சத்திரத்தின் முதலாளி தன் பெண்களை விடுவிக்கப் போய்-
ஐயோ! என் கைகளும் ஒட்டிக்கிச்சே!
இப்படியும் ஒரு தண்டனையா?
ஊரில் எல்லோரும் வேடிக்கை பார்த்தார்கள்...
நல்ல தமாஷ்!
ஹி..ஹி.. ஹி...
நகர்க்காவல் தலைவன் கோபமாக...
இதென்ன நாடகம்! நில்லு...
பெண்களின் தகப்பனாரை விடுவிக்கப் போய்...
வாங்க! நீங்களும் ஒட்டிக்கிட்டீங்களா? இன்னும் யார்தான் பாக்கி?


நகர்க் காவல் தலைவனுக்கு உதவப்போன சேனாபதி...
ஐயோ! கையை விடுவித்துக் கொள்ள முடியவில்லையே! யாராவது காப்பாத்தக் கூடாதா?
தலைநகர் அரண்மனை உப்பரிகையில் ராஜகுமாரி சிரித்து...
இதென்ன வேடிக்கை ஊர்வலம்? பாம்பு மாதிரி...!
ராஜகுமாரி நீலமணி அன்று வரை சிரித்ததேயில்லை. இன்றோ...
ஹ..ஹ.. ஹா! நல்ல தமாஷ்!
ராஜகுமாரி சிரிச்சுட்டாங்க!
சிரிச்சுட்டாங்க!
ராஜாவுக்கு விஷயம் எட்ட...
என் மகளின் மனநோய் நீங்கக் காரணமான அவர்களை அழைத்து வாருங்கள்!
சற்று நேரத்தில்...
ரங்கா! இவர்களை விட்டு விடு, பாவம்!
என்னிடம் அந்தச் சக்தி இல்லை! இந்தத் தங்கப் பறவையிடம் கேளுங்கள்!



மன்னர் கேட்டுக்கொள்ள
தங்கப் பறவை மனமிரங்கியது..
அரசே! நீங்கள் ஏற்கெனவே அறிவித்துள்ளது போல், ராஜகுமாரியின் மன நோய் தீர்த்த ரங்கனுக்கு அவளைக் கல்யாணம் செய்து கொடுங்கள்!
ஒரு தச்சனுக்குத் தன் மகளைத் தர விரும்பாத அரசன் தந்திரமாக...
அதுசரி! ஆனால் ரங்கன் தன் தகுதியை நிரூபிக்கணுமே!
என்ன செய்யணும்?
இந்த அரண்மனையின் பின்னால் உள்ள ஏரி தண்ணீர் முழுவதையும் ஒரே இரவில் குடிச்சுத் தீர்க்கணும்!
ரங்கன் கவலையுடன் காட்டுக்குப் போனான். கிழவன் தோன்றி...
ரங்கா எனக்கு எல்லாம் தெரியும். நான் கவனிச்சுக்கிறேன். நீ திரும்பிப் போ!
மாலை ஏரிக் கரையில் ரங்கன்...
அட! காட்டு மரங்களின் வேர்கள் நீண்டு, ஏரி நீரை உறிஞ்சுகின்றன!


காலையில் வேர்கள் சுருங்கி விட்டன... மன்னர் வந்து...
ஏரி வற்றிவிட்டதே! ஆச்சரியம்தான், சரி, என் களஞ்சியத்தில் உள்ள அத்தனை அரிசியையும் சமைக்கச் சொல்றேன்!
இதை இரவோடு இரவாகச் சாப்பிட்டு விட்டால் நீலமணி உன் மனைவி!
முயற்சி செய்யறேன்!
அன்றிரவு...
ரங்கா கவலைப்படாதே! என் பறவைப் பட்டாளம் பருக்கை விடாமல் கொத்தித் தின்று விடும்!
தங்கப் பறவையே! நன்றி!
காலையில்...
ரங்கா! நீ ஜெயித்து விட்டாய்!.... நீலமணி மாலையுடன் வருகிறாள் பார்! இந்த நாடே இனி உன்னுடையது!
தடபுடலான கல்யாணத்துக்குப் பிறகு...
அரசே! எனக்கு நாடு வேண்டாம்! நீங்களே ஆட்சி செய்யுங்கள்! ஆனால் "மரங்களை வெட்டக் கூடாது" என்று உத்தர விடுங்கள்!
தங்கப் பறவை விடைபெற்றது.
வன போஜனத்துக்கு வரும் போது சந்திக்கிறோம்!

அபிராமியின் அட்டிகை



1. அபிராமி வந்தாள்

பிரார்த்தனை முடிந்தது.

மாணவ மாணவியர் வரிசை கலையாது தங்கள் வகுப்புகளுக்குத் திரும்ப ஆரம்பித்து விட்டனர்.

''குயில்'' என்று அழைத்தார் சக்ரவர்த்தி.

''ஐயா'' என்று ஓடி வந்தாள் பன்னிரண்டு வயதுச் சிறுமி ஒருத்தி. அவளுடைய முழுப் பெயர் சரோஜினி. கவிக் குயில் சரோஜினி தேவியின் பெயரும் அதுவாக இருந்ததால் எல்லோரும் அவளை செல்லமாகவும் சுருக்கமாகவும் குயில் என்றே அழைத் தார்கள்.



''அரவிந்தனையும் வரச் சொல்லும்மா. மற்றவர்களை வகுப்புக்குப் போகச் சொல்.''

குயில் சைகை காட்டவும் அரவிந்தனும் வந்து பணிவோடு வணங்கினான். அரவிந்தனுக்குப் பதினோரு வயதிருக்கும்.

''உலக உருண்டையைத் தயார் செய்து வையுங்கள்'' என்றார் சக்ரவர்த்தி.

உலக உருண்டை என்பது இந்திய நாட்டின் பல்வேறு மதங்களைச் சேர்ந்த மகான்கள், தியாகிகள் பிறந்து வாழ்ந்து மறைந்த ஊர்களில் இருந்து திரட்டப் பட்ட புனித மண் அடங்கிய பிளாஸ்டிக் உருளை. அதை உலக கோள வடிவில் அமைத்திருந்தார்கள். சாதி, மத, இன, மொழி வேறுபாடு இன்றி, அனாதைகளாகி விட்ட குழந்தைகளுக்கு அந்த அன்பு இல்லம் என்ற விடுதி சரணாலயம். அதன் குறிக்கோள் அன்பு, ஒழுக்கம், தியாகம் என்பதை அறிவுறுத்த, அங்கு சேர வரும் குழந்தைகள் கையில் அந்த உலக உருண்டையைக் கொடுத்து, சந்தன பீடம் என்ற நாற்காலியில் அமர்த்தி ஒரு உறுதி மொழியை எடுத்துக் கொள்ளச் சொல்வார்கள். சந்தன பீடம் என்ற அந்த நாற்காலி கூட ஒரு விசித்திரமான புதுமை அமைப்பை உடையது. எல்லா நாற்காலிகளுக்கும் இருப்பது போலத் தான் நான்கு கால்கள், இரண்டு கைகள். ஆனால், அதன் முதுகு மட்டும் உயர்ந்து நீண்டிருக்கும். அதன் தலைப் பகுதியில் புத்தரின் போதனைகளான தீயவைகளைக் காண மாட்டேன், தீயவைகளைப் பேச மாட்டேன், தீயவைகளைக் கேட்க மாட்டேன் என்பதை வலியுறுத்

கூத்தபிரான்



''உங்க பையனுக்கு இன்னும் ஒரு மாசத்துல பெரிய கண்டம் இருக்கு...''

''முழுப் பரீட்சையைத்தானே சொல்றீங்க...?''

- சீர்காழி வி. ரேவதி

தும் மூன்று அழகான குரங்கு பொம்மைகள் அமைக்கப்பட்டிருக்கும். அவை சந்தன மரத்தால் ஆனவை. ஒரு ஜப்பானியரால் ஆசிரமத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டவை.

புதிதாக விடுதியில் சேரவரும் குழந்தைகள் பிரார்த்தனை முடிந்ததும் சந்தன பீடத்தில் உட்கார்ந்து அந்த உலக உருண்டையைக் கையில் வைத்துக் கொண்டு ஒரு உறுதிமொழியை எடுப்பார்கள். சாதாரண நாட்களில் சந்தனப் பீடமும் உலக உருண்டையும் வரவேற்பு அறை பீரோவுக்குள் இருக்கும். யாராவது புதிதாகச் சேர வந்தால் வெளியே எடுத்து வருவார்கள்.

குயிலும் அரவிந்தனும் சக்ரவர்த்தியின் அடுத்த கட்டளைக்காகப் பணிவோடு காத்திருந்தார்கள்.

''இன்னும் இரண்டொரு நாளில் நம்ப அன்பு இல்லத்திற்கு வடக்கேயிருந்து ஒரு சிறுமி வரப் போகிறாள்.''

''ஐயா, விருந்தாளியா வரப் போறாளா இல்லே...?'' என்று இழுத்தாள் குயில். ''விருந்தாளியா இல்லே. இங்கேயே இருந்து, உங்களில் ஒருத்தியாக இருக்க இந்த அன்பு இல்லத்தில் அடைக்கலம் தேடி டெல்லியில் இருந்து வரப் போறாள்.''

''டெல்லியில் இருந்தா! தனியாகவா வரப் போறா?''

''தனியாகத்தான் வருவாள்னு நினைக்கறேன். ஏன்னா உங்க எல்லோரையும் போல அவளும் ஓர் அனாதை. நம்ம அன்பு இல்லத்தின் சிறப்பைப் பத்திரிகைகளில் படித்து விட்டு, நிர்வாகத்திற்கு ஒரு கடிதம் எழுதி, விவரங்களோடு விண்ணப்பித்தாள். நானும் தங்க மாமாவும் அதைப் பரிசீலித்தோம்.''

தங்க மாமா என்பது 'அன்பு இல்லம்' அனாதை விடுதியை நடத்தப் பேருதவி புரிந்து வரும் பொன்னுசாமிக்கு குழந்தைகள் வைத்திருக்கும் செல்லப் பெயர்!

சக்ரவர்த்தி தொடர்ந்தார்.

''அவள் போட்ட விண்ணப்பமும், மற்ற விவரங்களும் எங்கள் மனதை உருக்கி விட்டன. அந்தச் சிறுமியைச் சேர்த்துக் கொள்ள முடிவு செய்து தெரிவித்தோம். இன்னும் இரண்டொரு நாளில் இங்கு வந்து சேருவதாகக் கடிதம் எழுதியிருக்கிறாள். இன்னும் இரண்டு நாட்களில் அவள் எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம்.''

'நல்லது ஐயா. அப்போ அவள் வந்த உடனே அடுத்த நாள் காலையில் முறைப்படி அந்தப் பெண்ணுக்காக, நம்ம பிரார்த்தனைக் கூடத்திலே அறிமுக நிகழ்ச்சி ஏற்பாடு செய்யணும் இல்லையா?' என்றான் அரவிந்தன்.

'ஆமாம் அதைச் சொல்லத்தான் உங்களைக் கூப்பிட்டேன். இதை விவேகானந்தன், குமரன், கணபதி, ராஜா எல்லோருக்கும் சொல்லிடுங்க' என்றார் சக்ரவர்த்தி. இதைச் சொல்லி முடிக்கும் போதே அவர் பார்வை வீதியின் பக்கம் ஆவலுடன் திரும்பியது. குழந்தைகளும் அந்தப் பக்கமே கவனித்தார்கள்.

''ஆமாம்! அட, அந்தப் பெண்ணே வந்துட்டாப் போல இருக்கே' என்றார் சக்ரவர்த்தி மிகவும் பரபரப்புடன்.

'ஆமாம் ஐயா. கையிலே ஒரு பெட்டி, தோளிலே ஒரு ஜோல்னா பை. அந்தச் சிறுமி இங்கேதான் வர்றா.''

''வாங்க போய் வரவேற்போம்.''

மூவரும் வரவேற்கக் கிளம்பினார்கள். அன்பு இல்ல முகப்பு இரும்புக்

கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்து, மறுபடியும் கதவைச் சரியாக மூடி விட்டு, கதவை மூடக் கீழே வைத்த தன் பெட்டியைத் திரும்பவும் கையில் எடுத்துக் கொண்டு நடந்து வந்தாள் அந்தச் சிறுமி. சிரித்த முகம். அதற்கேற்ற அழகு. ஒல்லியான உருவம். நெற்றியில் பிரகாசமான குங்குமப் பொட்டு.

'ஐயா வணக்கம். நான்தான் அபிராமி' என்று தன் பெட்டியைக் கீழே வைத்து விட்டுக் கைகூப்பித் தன்னை அறிமுகம் செய்து கொண்ட பாங்கே தனி அழகு.

'அப்படியா! வாம்மா. உன்னைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தோம்.''

''இப்பத்தான் உன்னைப் பற்றி ஐயா சொல்லிக்கிட்டு இருந்தார்'' என்று சொல்லி விட்டு, ''நான் குயில், இவன் அரவிந்தன்'' என்றாள் குயில்.


'உள்ளே போகலாம் வாம்மா' என்றார் சக்ரவர்த்தி. அபிராமி கீழே வைத்திருந்த பெட்டியைக் குயில் எடுக்கப் போனாள்.

''வேண்டாம், வேண்டாம், நானே எடுத்துக்கிட்டு வர்றேன். அதுதான் முறை. என் வேலையை நானேதான் செய்து பழக்கம்'' என்று பளிச்சென்று அவள் சொன்னாள்.

''சரி! நீயே எடுத்துக்கிட்டு வா'' என்று சக்ரவர்த்தி சொல்லி முன் செல்ல, அபிராமியுடன் மற்ற சிறுவர்களும் விடுதியின் உள்ளே நடந்தார்கள்.

''அபிராமியை விடுதிக்கு அழைத்துச் செல்லும்மா'' என்ற சக்ரவர்த்தி, ''முதல்ல குளிச்சிட்டு சாப்பிடும்மா. அப்புறம் மற்றதை எல்லாம் பேசிக்கலாம்'' என்று கூறி விட்டுத் தன் வேலைகளைக் கவனிக்கச் சென்றார்.

அபிராமி குழந்தைகளுடன் விடுதிக்குள் போனாள். போகும் வழியில் கைத் தொழில் வகுப்பை முடித்து



விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த குழந்தைகளும் சேர்ந்து கொண்டார்கள். அபிராமியிடம் தங்களை அறிமுகம் செய்து கொண்டார்கள். கூடவே அபிராமியிடம் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்க ஆரம்பித்தார்கள்.

''வடக்கே எங்கேயிருந்து வர்றே?''

''தனியா வரப் பயமில்லையா?''

''அம்மா, அப்பா?''

''தமிழ் நல்லா பேச வருமா?''

''எதுவரையிலும் படிச்சிருக்கே?''

''ஏன் இங்கே தங்கிப் படிக்க வந்தே?''

இப்படிக் கேள்விக்கணைகள் ஒன்றன்பின் ஒன்றாகக் கிளம்பியதும், அபிராமி ஒருகணம் கண்களை நன்கு இறுக மூடிக் கொண்டாள். பிறகு நிதானமாகத் திறந்து எல்லோரையும் ஒருமுறை பார்த்தாள். அப்போது இரண்டு, மூன்று நீர்த் துளிகள் அபிராமியின் கண்களிலிருந்து விழுந்தன. ஒவ்வொரு துளிக்கும் பேசும் சக்தியிருந்தால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில்களைத் தந்திருக்கும்.

'அபிராமி, நாங்க ஏதாவது தப்பாக் கேட்டு விட்டோமா?' என்று கேட்டவாறு கண்களைத் துடைத்தாள் குயிலி.

'எல்லாக் கேள்விகளுக்கும் இப்பவே பதில் சொல்லித்தான் ஆகணுமா? இல்லை... அப்புறம் மெதுவா சொல்லலாமா?' என்றாள் அபிராமி.

''உன் விருப்பம். இப்பவே சொல்லணும்னு அவசரமில்லை. எப்படியானாலும் நாளை நடக்கப் போகும் அறிமுக நிகழ்ச்சியிலே நீதானே முக்கியமா இருப்பே?''

''அறிமுக நிகழ்ச்சியா? அப்படீன்னா?''

''பள்ளிக்கூடத்திலே சேர்ந்து, விடுதியில் தங்க யார் வந்தாலும் அவங்க பிரார்த்தனை நேரத்தில், பிரார்த்தனைக் கூடத்தில் இருக்கும் சந்தன பீடத்திலே உட்கார்ந்து உலக உருண்டையைக் கையில் வைத்துக் கொண்டு உறுதிமொழி எடுத்துக்கணும். இது ரொம்ப நாளா நடக்குது. அப்புறம் வழக்கம் போல் வருப்புகள். மதியம் பாயசத்தோடு



எல்லோருக்கும் சாப்பாடு - உன்னை வரவேற்கத்தான் ஸ்வீட்!''

'நல்லாயிருக்கே...' என்ற அபிராமி நண்பர்களுடன் வகுப்புகள், விடுதி, சமையற்கூடம், விளையாட்டு மைதானம் எல்லாவற்றையும் சுற்றிப் பார்க்கக் கிளம்பினாள். அன்றையப் பொழுது ஓடி விட்டது.

அடுத்த நாள். விடியற்காலையிலே எழுந்து குழந்தைகள் பிரார்த்தனைக் கூடத்தைச் சுத்தப்படுத்தி, கோலமிட்டு, அறிமுக நிகழ்ச்சிக்கு வேண்டிய ஏற்பாடுகளை உற்சாகத்துடன் செய்யத் தொடங்கினார்கள். நிகழ்ச்சி நேரம் நெருங்கி விட்டது.

சக்ரவர்த்தி முன்னே வர, அவர் பின் அபிராமி, கைகூப்பி எல்லோருக்கும் வணக்கம் செலுத்தியவாறு நடந்தாள். குழந்தைகள் எழுப்பிய கரவொலி இரண்டொரு நிமிடங்கள் வரை விண்ணைத் தொடும் வண்ணம் ஒலித்துக் கொண்டே இருந்தது. சக்ரவர்த்தி சைகை செய்த பின் கைதட்டல் டக்கென்று நின்றது.

'அன்புக் குழந்தைகளே உங்களுடன் ஒருத்தியாக இருக்க இந்த அன்பு இல்லத்



திற்கு வந்துள்ள அபிராமியை அறிமுகப் படுத்துவதில் மிகவும் மகிழ்ச்சி கொள்கிறேன்'' என்று கூறிய சக்ரவர்த்தி, திரும்பி அபிராமியைப் பார்த்து, ''இப்படி வந்து இந்தச் சந்தன பீடத்திலே உட்காரும்மா'' என்றார்.

அபிராமி வந்து உட்கார்ந்தாள். உலக உருண்டையை கவனமாக எடுத்து வந்த அரவிந்தன் அதைச் சக்ரவர்த்தியிடம் தர, அவர் அதை அபிராமியிடம் அளித்தார்.

''ஐயா, நின்று கொண்டே உறுதி மொழி எடுத்துக் கொள்ள என்னை அனுமதிக்க வேண்டும்'' என்று பணிவுடன் வேண்டினாள் அபிராமி.

''சரி'' என்றார் சக்ரவர்த்தி. பிறகு தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''அபிராமி, நான் சொல்றதை அப்படியே திருப்பிச் சொல்லும்மா'' என்று கேட்டுக் கொண்டு ஆரம்பித்தார் :

''தீயவைகளைப் பேச மாட்டேன்
தீயவைகளைப் பார்க்க மாட்டேன்
தீயவைகளைக் கேட்க மாட்டேன்''

அவர் ஒவ்வொன்றாகச் சொல்ல, 'கணீர் கணீர்...' என்று அபிராமி திருப்பிச் சொன்னாள். தொடர்ந்து 'அன்பே தெய்வம்', 'நாடே என் வீடு', 'உலக மக்கள் அனைவரும் என் சகோதரர்கள்', 'ஒற்றுமையே என் வழி' என்ற தொடர்களைச் சக்ரவர்த்தி சொல்ல, அவற்றையும் உணர்ச்சி பொங்க அபிராமி அப்படியே திரும்பச் சொல்லி விட்டு, ''ஐயா! உறுதிமொழியெடுப்பிலே மேலும் சில வார்த்தைகளைச் சேர்த்துக் கொள்ள அனுமதி உண்டா?'' என்று கேட்டாள்.

''என்னம்மா சொல்லப் போறே?''

அபிராமி உணர்ச்சி பொங்க, ''அநீதியை ஒருநாளும் அனுமதியோம்'' ''பிரிவினை உணர்வுக்கும், வன்முறை எண்ணங்களுக்கும் இடம்கொடுக்க மாட்டோம்'', ''அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே'' என்று கூற, சக்ரவர்த்தி மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தார்.

''பிரமாதம்! பேஷ்! பேஷ்!... குழந்தைகளே! அபிராமி சொன்னதை அப்படியே நீங்களும் திருப்பிச் சொல்லுங்கள்'' என்று அவர் கேட்கவும் குழந்தைகள், அபிராமி சொன்னவற்றைத் தாங்களும் கூறிப் பரவசப்பட்டார்கள்.

தொடர்ந்து, தேசபக்திப் பாடல்கள், பிரார்த்தனைக் கூடத்தில் ஒலித்தன. செவிக்கும் அறிவுக்கும் விருந்து கிடைத்த பிறகு, வயிற்றுக்கும் விருந்து வடை பாயசத்துடன் காத்துக் கொண்டு இருந்தது!

சக்ரவர்த்தி மட்டும் ஏனோ கவலையாக இருந்தார். அபிராமி, தன் வயதுக்கு மீறிய அனுபவங்கள் ஏதோ பெற்றிருப்பதாக அவருக்குத் தோன்றியது. இல்லாமலா அவ்வளவு ஆவேசத்தோடு அவள் புதிய புதிய உறுதிமொழிகளை அறிமுக நிகழ்ச்சியின் போது புகுத்திருப்பாள்?

(தொடரும்)

எலியாரே! எலியாரே!




எலியாரே! எலியாரே!
என்ன அங்கே தேடுறீர்?
வளையினிலே பதுக்குதற்கோ
வகையாகத் தேடுறீர்?

கொட்டி வைத்த நெல் மணியை
கொள்ளையிட்டு ஓடுவ தேன்?
பட்டுத் துணி, பண்டங்கள்
பாழ்படுத்திப் போவது மேன்?

வீட்டிலுள்ள பண்டங்களை
வீண் விரயம் செய்யாமல்
காட்டுவழி சென்றிடு வீர்!
கையெடுத்துக் கும்பிடுகிறேன்!

- ஏ.எஸ். உமாமகேஸ்வரி



"இஞ்சின் வெடித்தால்... என்ன ஆகும்?"
"சுக்கு நூறாகும்!"
மீனா ராசிக்காரன்
"கோகுலத்துக்கு எதிர்ப்பதம் சொல்லு?"
"கம்' குலம் தான்!!"
ப.கணேஷ்
"பசையுள்ள மிருகம் எது?"
"ஒட்டகம் தான்!"
ப.கணேஷ்
மிளகாய்ப் பொடி எப்படி கிடைக்கிறது?
மிளகாயை அரைத்து...
பல்பொடி....?
பற்களை அரைத்து!
கே.சோமசேகர்
சிரிப்...
ராஜாவே பட்டணம் போறேன். உனக்கு என்ன வாங்கி வரணும்?
லயன்ஸ் கிளப் (LIONS CLUB)-பில் சேர ஒரு அப்ளிகேஷன் வாங்கிட்டு வா!
கே.சோமசேகர்



என்னால் ஆனது!

எங்கள் ஊரில் ஒரு மளிகைக்கடை வாசலில் தினமும் ஏதாவது ஒரு பொன் மொழி எழுதிவைப்பார்கள். அந்தக் கடைக்காரர் இதை ஒரு பொதுத் தொண்டைப் போலவே கருதி, செய்து வந்தார். தினமும் அந்தப் பக்கமாகப் பள்ளிக்குச் செல்லும் ஜெயக்குமார் என்ற சிறுவன், தினமும் நாள் தவறாமல், அந்தக் கடை வாசலில் நின்று, அன்றைய பொன்மொழியைப் படித்து விட்டுச் செல்வான்.

ஒரு நாள், ஜெயக்குமார் அந்தக் கடைக்காரரிடம், ''நீங்கள் தினமும் போர்டில் புதுசு புதுசாக, அற்புதமான பொன்மொழிகளை எழுதுகிறீர்கள்! போர்டை தினம் எதனால் அழிப்பீர்கள்?'' என்று கேட்டான்.

''ஏன், வெறும் துணியால்தான்!'' என்றார் கடைக்காரர்.

ஜெயக்குமார் பேசாமல் போய்விட்டான்.

மறுநாள் அங்கு வந்த ஜெயக்குமார் கடைக்காரரிடம், 'டஸ்டர்' ஒன்றைக் கொடுத்து, ''துணியால் அழித்து சிரமப் படுவதற்குப் பதில், இந்த டஸ்டரை உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள்!'' என்றான். கடைக்காரர் வியப்புடன் அவனைப் பார்த்தார்.

ஜெயக்குமார் சொன்னான், ''ஐயா! தினமும் இப்படி ஒரு பொன்மொழி எழுதி நீங்கள் நல்லகாரியம் பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் நற்செயலுக்கு இந்த 'டஸ்டர்' என்னால் ஆன சிறு உதவி - பாராட்டு என்று வைத்துக் கொள்ளுங்கள்!''

கடைக்காரர் ஜெயக்குமாரைத் தட்டிக் கொடுத்தார்.

ரெட்டைவால் பையன்களுக்கிடையில், ஜெயக்குமார் மாதிரி நல்ல பையன்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்!

- ம. இராமநாராயணன்,
சென்னை - 82.



ஊசி கேஸ்!

என் அப்பா ஒரு பள்ளி ஆசிரியர். ஒரு சமயம் அவர், வகுப்பு மாணவர்களுக்கு டெஸ்ட் வைத்திருந்தார். அன்று காலை எதிர்பாராத விதமாக அவருக்கு உடல் நலம் சரியில்லாமல் போய் விட்டது. எனவே, பக்கத்திலுள்ள அரசு மருத்துவமனைக்குச் சென்றார். டாக்டர், அவருக்குத் தேவையான மாத்திரை

களைக் கொடுத்துவிட்டு, ஊசி போட்டுக் கொள்ள சீட்டில் எழுதிக் கொடுத்தார். ஊசி போட்டுக் கொள்ளும் இடத்தில் பயங்கர கும்பல்! என் அப்பாவுக்கு பள்ளிக்குச் சீக்கிரம் போக வேண்டிய அவசியம். எனவே, அவர் நர்சிடம், ''சிஸ்டர்! எனக்கு டெஸ்ட் இருக்கு!'' என்றார். உடனே நர்ஸ், என் அப்பாவின் சீட்டை வாங்கிப் பார்த்து விட்டு, ''இல்லையே! இது டெஸ்ட் ஊசி இல்லையே!'' என்றார். என் அப்பா சங்கடமாக, ''அது இல்லை சிஸ்டர், இன்னைக்கு எனக்கு ஸ்கூல்ல டெஸ்ட் இருக்குன்னு சொல்றேன்!'' என்றார்.

மறுபடியும் அந்த நர்ஸ் விடாமல், ''அதானே பார்த்தேன். இது ஒன்னும் டெஸ்ட் ஊசி கேஸ் இல்லை!'' என்றது தான் தாமதம், ஊசி போட்டுக் கொள்ள



வந்த அத்தனை பேரும் கொல்லென்று சிரித்து விட்டார்கள்.

- கா. சசிகலா சரோஜினி,
காரைக்கால்.

வணக்கம் டி.வி!

கிராமத்திலிருந்து எங்கள் பாட்டி வந்திருந்தார்கள். கிராமம் என்றால், குக்கிராமம். டீ.வி. கூடக் கிடையாது. பாட்டி, முதன் முறையாக எங்கள் வீட்டில் டீ.வி. பெட்டியைப் பார்த்த போது ரொம்ப ஆச்சர்யப்பட்டார்கள். அதை விட்டு எழுந்திருக்கவே இல்லை. அதுவும் கிராமத்துப் பெண்மணி அல்லவா?



'வயலும், வாழ்வும்' நிகழ்ச்சியை ரொம்ப ரசித்தார்கள். 7.30 க்கு வயலும் வாழ்வும் முடிந்து செய்திகள் ஆரம்பித்ததும், அதுவரை உட்கார்ந்திருந்த பாட்டி, திடீரென எழுந்திருந்து கை கூப்பினார்கள். எங்களுக்கெல்லாம் வியப்பு! ''ஏன் பாட்டி, டீ.விக்குப் போய் வணக்கம் சொல்றீங்க''ன்னு கேட்டோம். உடனே பாட்டி, ''அந்தப் பொண்ணு எனக்கு வணக்கம் சொன்னா. நானும் எழுந்து வணக்கம் சொல்வதுதானே முறை?'' என்றாரே பார்க்கலாம். எங்கள் சிரிப்பு, செய்தி வாசித்தவருக்கே கூடக் கேட்டிருக்கும்!

- ஜெயஸ்ரீ ராஜகுமார், மதுரை - 20.

இது தப்பா?

என் தம்பி சாப்பிடும் போதெல்லாம் இலையில் சிறிது மீதம் வைத்துத்தான் சாப்பிடுவான். நான் அவனைக் கண்டிப்பது உண்டு.

''ஏன்டா... இப்படி சாதத்தை வீணாக்குறே? சாதத்தை வீணாக்கறது பாவம்டா'' என்பேன்.



அதற்கு அவன், ''இல்லேக்கா... நாம சாப்பிட்டு முடிச்சதும் இலையை வெளியே போட்டுடறோம். ஆனா இலையைப் பார்த்து நாய், காகம் ஓடி வருது. இலையிலே ஒண்ணும் இல்லேன்னா அதுக்கு ஏமாத்தமா போயிடுமே! அதனாலேதான் இலையிலே கொஞ்சம் மீதி வச்சிட்டு வர்றேன். இது தப்பா?'' என்று கேட்டதும் எனக்கே வியப்பாக இருந்தது.

பிற உயிரினங்களுக்காக அவன் காட்டும் பரிவு என்னைப் பெருமை கொள்ள வைத்தது.

- லோகாவதி, மதுரை - 14.

விடறதாவது!

எங்கள் தாத்தா காசிக்குப் போய் வந்திருந்தார். காசிக்குப் போனால் எதையாவது விட்டு வர வேண்டுமல்லவா! எனது குறும்புக்காரத் தம்பி தாத்தாவிடம் சென்று, ''தாத்தா! காசிக்குப் போனியே, என்ன விட்டுட்டு வந்தே?'' என்று கேட்டான்.

தாத்தாவும் மகிழ்ந்து, 'என்னோட கோபத்தை விட்டுட்டு வந்தேன்டா பேரா!' என்றார்.

தம்பி மறுபடியும், 'காசிக்குப் போயி எதை விட்டுட்டு வந்தே?' என்றான்.

தாத்தாவும் 'கோபத்தை விட்டுட்டேன்' என்றார்.

மீண்டும் தம்பி சீரியஸாகக் கேட்டான் : 'காசிக்குப் போனியே தாத்தா... எதை விட்டுட்டு வந்தே?'

தாத்தா முகம் மாறி கடுமையாக, 'கோபத்தை விட்டேன்டா!' என்றார்.

மறுபடியும் தம்பி, 'காசிக்குப் போனியே 'என்று வாய் திறந்ததும் தாத்தா கோபமாய், 'ஏண்டா முட்டாள், கேட்டதையே திருப்பி, திருப்பி கேட்டுட்டு, கிண்டலா பண்றே?'' என்றவாறே எழுந்து அவனைப் பிடிக்கப் போனார்.

'நீயாவது... கோபத்தை விடறதாவது!' என்று சொல்லிக் கொண்டே தம்பி ஓட வீடு முழுவதும் சிரித்தது.

- லோகாவதி, மதுரை - 14.




எத்தனை மெட்ராஸ்?

எங்கள் மாமா, ஊரிலிருந்து கடிதம் போட்டிருந்தார். நாங்களெல்லாம் படித்து முடித்த பின்னர் என் கடைசித் தம்பி (மூன்றாம் வகுப்பு) அதைப் படித்தான். படித்து முடித்ததும் என் அப்பாவிடம், ''அப்பா, மாமாவின் அட்ரஸில், மெட்ராஸ் - 25 என்று இருக்கிறதே. மொத்தம் 25 மெட்ராஸா இருக்கிறது? என்றதுதான் தாமதம், ஒரே 'குபீர்'தான்!

- எம்.எஸ். கிருஷ்ணன்,
கொண்டரசம்பாளையம்.

சில்வர் :ஃபிஷ் முட்டையிடுமோ?



ரேவதி

தண்ணீர் எடுக்கும் போர்வெல் மோட்டார் பழுதாகி விட்டது. சுவிட்சைப் போட்டதும் முன்போல் நீர் எடுக்கவில்லை. என்னதான் இருக்கிறது பார்க்கலாம் என்று பாபு வந்தான். மோட்டார் மாடிப்படி வளைவில் இருந்த சிறிய மாடம் போன்ற இடத்தில் பொருத்தப் பட்டிருந்தது.

பாபு, மாடத்தின் சிறிய கதவைத் திறந்து பார்த்தான். கதவைத் திறந்தது தான் தாமதம், சில்வர் ஃபிஷ் என்ற இராமபாணப் பூச்சிகள் மொலு மொலுவென்று ஏராளமாக ஓடி மூலைக்கு ஒன்றாக ஒளிந்தன. ஒரு நொடியில் எல்லாம் எங்கேயோ ஒளிந்து கொண்டு விட்டன! ஒன்றையும் காணவில்லை. ஓடி ஒளிந்த வேகத்தில் பாபுவின் கையில் இரண்டு பூச்சிகள் வந்து விழுந்தன. அவன் கையை உதற, கீழே விழுந்து மூச்சை நிறுத்திச் சுருண்டன.

கையில் பூச்சிகள் விழுந்த இடத்தில் வெள்ளிப் பொடியைப் பூசியது போல் ஒரு தகதகப்பு இருந்ததைக் கண்டு பாபு வியந்தான். கம்பி மத்தாப்புக் குச்சியைத் தேய்த்துக் கொண்டது போல் அந்த இடம் பளபளத்தது.

பாபு மோட்டாரைத் தன் வலது கையால் ஒரு தட்டுத் தட்டினான் பலமாக. ஓடி ஒளிந்திருந்த இராமபாணப் பூச்சிகள், அதிர்வைத் தாங்காது, வெளியே வந்து மொலு மொலுவென்று மின்னல் வேகத்தில் அங்குமிங்கும் ஓடி ஒளிந்தன.

வெள்ளியால் செய்யப்பட்டவை போல் கண்களைப் பறித்த அவற்றில் ஒன்றையாவது பிடித்து விட விரும்பிய பாபு, மெதுவாக மோட்டாரை ஒரு கையால் தட்டியபடி, இன்னொரு கையால் பிடிக்க முயன்றான். எத்தனை முயன்றும் முடியவில்லை. விரல்களுக்கு இடையே சிக்கிக் கொள்ளாது அங்குமிங்கும் விரைந்து ஓடின. சிக்கிக் கொண்ட ஒன்றிரண்டும் வழுக்கிக் கொண்டு தப்பின. பாபு பொறுமை இழந்து விரல்களை அழுத்தி ஒரு பூச்சியைப் பிடித்தான். கூழைத் தொட்டது போன்ற உணர்வு! பூச்சி செத்துக் கீழே விழுந்தது. விரல்களில், பூச்சியைப் பிடித்த இடத்தில் பௌடரைப் பூசிக் கொண்டது போல் வெள்ளிப் பூச்சு!

''என்னடா பண்றே பாபு?'' என்று கேட்டுக் கொண்டே அங்கே வந்த அம்மா, அவன் விரல்களில் மின்னிய வெள்ளிப் பூச்சையும், கீழே செத்துக் கிடந்த பூச்சியையும் பார்த்து அதிர்ந்தாள்.

''என்னடா பாபு! இப்படி ராம பாணப் பூச்சியைக் கொன்னுட்டே? இது எத்தனை புனிதமானது தெரியுமா? ராமர் சீதையைத் தேடிக் கொண்டு கிளம்பிய போது இந்த ராமபாணப் பூச்சிதான் அவருக்கு வழிகாட்டித்தாம். அப்படிப் பட்ட உத்தமமான பூச்சியைக்

கொன்னுட்டியே!'' என்று கவலை யோடு கேட்டாள்.

''இராமருக்கு உதவிய பூச்சியையா நான் கொன்னுட்டேன்!'' என்று பாபு வும் கலங்கினான் ஒரு நிமிஷம்.

''ஆமாம் பாபு. ராமருக்கு உதவிய தால்தான் இதற்கு ராமபாணப் பூச்சின்னு பேரே வந்தது. யாருக்கும் தீங்கு விளைவிக்காத ஜீவன்'' என்று உருகி னாள் அம்மா.

பின்னாலேயே வந்த அப்பா, ''இதபார். புது ராமாயணம் எழுதாதே. இதற்குப் பெயர் இராமபாணப் பூச்சிகள் என்றாலும், இதற்கும் இராமருக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. இது காரணப் பெயர். இராமருடைய பாணம் என்கிற அம்பு, விட்ட மாத்திரத்தில் காற் றைவிட வேகமாகப் பறக்குமாம். அதே போன்ற வேகத்தில் இந்தப் பூச்சியும், வெளிச்சத்தைக் கண்டால் மின்னலாக



ஓடி ஒளியும். அது மட்டும் அல்ல, இந்த ராமபாணப் பூச்சி என்கிற சில்வர் ஃபிஷ் என்கிற மெல்லுடலி, இராமாயண காலத்திற்கு முன்னாலேயே தோன்றிய பூச்சி இனம். கரப்பைப் போலவே இதுவும் எந்த விதமான பரிணாம வளர்ச்சி மாற்றம் இன்றி, தோன்றிய வடிவிலேயே இருக்கிறது'' என்றார்.

அம்மாவும் பாபுவும் அவரை வியப்புடன் பார்த்தனர்.

''சில்வர் ஃபிஷ் என்கிற இராமபாணப் பூச்சி, மற்றவர்களுக்குத் தீங்கு விளைவிக்காது என்பது உண்மைதான். இதனால் யாருக்கும் கெடுதல் இல்லை. ஆனால் புத்தகங்களையும் ஓவியங்களையும் அழிப்பதில் இதற்குப் பெரிய பங்கு உண்டு.''

அப்பா கூறுவதை அம்மாவும் பாபுவும் கேட்டபடி இருந்தனர்.

''இதற்கு மிகவும் பிடித்தமான இடம் இருட்டு நிறைந்த, காற்றுப் புகாத மூலைகள்.''

''அதனால்தான், புத்தகங்களுக்கு இடையே இது வந்து தங்கி ஓட்டை போடுகிறதா?'' என்று கேட்டபடி வந்தாள் பாரதி.

''புத்தகங்களில் இது இடம் பிடித்து வாழ்வதற்கு காற்றுப் புகாத இடம், இருட்டு என்பது மட்டும் காரணம் அல்ல. புத்தகங்களில் பைண்டு செய்யவும், அட்டை ஒட்டவும் பயன்படுத்தப்பட்டுள்ள மாவுப் பசை; மாவுப் பண்டம் என்றால் இதற்கு மிகவும் உயிர். அதனால்தான் புத்தக அடுக்குகளிலும், கஞ்சிபோட்ட துணி மடிப்புகளிலும் இது விரும்பி வாழ்கிறது!''

''இது முட்டையிடுமா அப்பா?''



> ## அறிவியல் உண்மைகள்:
>
> ★ பண்டைக்காலப் பூச்சி வகைகளில், முதலில் தோன்றிய வரிசையில் இடம் பெறுவது இராம பாணப் பூச்சி. அறிவியல் பெயர் Saccharina Lepisma.
>
> ★ முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கும்.
>
> ★ புத்தகம், மரம், ஓவியம், துணிகளில் உள்ள மாவுப் பொருளை நாடி வந்து அரிக்கும்.
>
> ★ இருட்டில் ஆதிக்கம். வெளிச்சம் இதன் பகைவன்.
>
> ★ வெள்ளிப் பூச்சு இதற்குப் பாதுகாப்புக் கவசம்.
>
> ★ பரிணாம வளர்ச்சி இன்றி, தோன்றியபடியே நின்றுவிட்ட உயிரினம் இது.
>
> ★ மீனுக்கும், ராமருக்கும் சில்வர் ஃபிஷ்ஷுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை!
>
> ★ அதிக அளவு ஆயுள் இரண்டு ஆண்டுகள்.
>
> ★ கரப்போ மற்ற பெரிய பூச்சிகளோ இதை அவ்வளவு எளிதாக நெருங்க முடியாது!
>
> ★ இது காகிதத்தை அரித்த இடத்தை மிக எளிதாக பார்க்கலாம். புத்தகங்களில் வட்டமாக ஓட்டைப் போட்டு அடுருவதும் இதன் திருவிளையாடலே!
>
> ★ புத்தகங்களை பைண்டு செய்யும் போது உபயோகிக்கும் மாவுப் பசையில் மயில்துத்தத்தைப் பொடி செய்து போடும் பசையால் புத்தகங்களை இவை அரிக்காது காப்பாற்ற முடியும்!

''இது முட்டையிட்டுக் குஞ்சு பொரித்துத்தான் இனவிருத்தி செய்யும்.''

''அப்படியானால் இதன் முட்டையை நான் பார்த்தே கிடையாதே!''

''பார்த்திருப்பாய். ஆனால் அவை சில்வர் ஃபிஷ்ஷின் முட்டை என்பது உனக்குத் தெரிந்திருக்காது. ஏனென்றால் இவற்றின் முட்டை ''கசகச'' மாதிரி கடுகில் பாதியளவு கூட இல்லாது சின்னதாக இருக்கும்.''

''அப்படியா! நான் பார்த்திருக்கேன் அப்பா. பீரோவில் புதுத் துணி மடிப்பில் இந்த மாதிரி 'கசகச' அளவு முட்டைகளை நான் ஏராளமா பார்த்திருக்கேன். ஏதோ மணல்தான் பட்டிருக்குன்னு தட்டி வைச்சிருக்கேன்'' என்றாள் பாரதி.

''புதுத் துணிகளில் உள்ள கஞ்சிப் பொருளுக்காகத்தான் இது தேடி அலையும். துணி மடிப்புகளில் ஏராளமா முட்டையிடும்.''

''இந்த முட்டைகளை நமக்குத்தான் அடையாளம் கண்டு பிடிக்கத் தெரியாது. பல்லி, தேள் போன்றவைகளுக்குக் கூடவா தெரியாது!'' என்று அதிசயித்தாள் அம்மா.

''இராமபாணப் பூச்சியின் சிறப்பே இதுதான். இதையும் சரி, இதன் முட்டைகளையும் சரி, மனிதன் ஒருவனால் மட்டுமே கண்டு பிடித்து அழிக்க முடியும். துணிமடிப்புக்குள், புத்தக இடுக்குக்குள் எந்தப் பல்லி, தேளால் புகுந்து தேடி அடிக்க முடியும் அதோட, இந்த இராமபாணப் பூச்சியை பல்லி, தேள்கள் கூட, கண்டாலும் பிடிப்பதில்லை.''

''அதிசயமா இருக்கே! என்ன காரணம்?''

''எல்லாம் அதன் உடம்பில் மினுக்கும் வெள்ளிப் பூச்சுதான். இதன் உடம்பை கவனித்துப் பார்த்தால், வளையம் போன்ற வெள்ளி வண்ண செதில்கள் இருப்பதைக் காணலாம். இது வேகமாக ஓடும்போது, இந்த செதில்கள் பளபளக்கின்றன. இது, இதைத் தின்ன வரும் பல்லி, தேள்களுக்கு ஒரு வித்தியாசத்தையும், தயக்

கத்தையும் கொடுக்கிறது. சில்வர் ஃபிஷ் தப்பிவிடுகிறது!''

''பகைவர்களிடமிருந்து தப்பிக்க இப்படி ஒரு தந்திரமான உடம்பா!'' என்று வியந்தாள் பாரதி.


''இந்த வெள்ளிப் பூச்சு, இயற்கை அன்னை சில்வர் ஃபிஷ்ஷுக்கு அளித்துள்ள பரிசு. உயிர் தப்புவதற்கு மட்டும் அல்ல, உடலை ஒரே வெப்ப நிலையில் வைத்திருக்கவும் இது பயன்படுகிறது. இது பாதிக்கப்பட்டால், உடனே இதற்கு முடிவு கிடைத்து விடும். வெளிச்சத்திற்கும், வெயிலுக்கும்தான் இதைப் பாதிக்கும் சக்தி உண்டு. நல்ல வெயில் படும் தரையில், இதை உதிர்த்தால் உடனே இறந்து விடும். எல்லாவற்றையும் விட வேடிக்கை, இவற்றின் பெருக்கம் ஓர் இடத்தில் அதிகரித்து நெரிசல் ஏற்பட்டால், இவை இன்னொரு இடத்திற்குக் குடிபெயர்ந்து புதுக் காலனி அமைத்துக் கொள்ளும்'' என்றார் அப்பா.

''கூடத்தில் மாட்டியுள்ள தாத்தாவின் புகைப்படத்தைக் கூட இவைதான் அரித்திருக்கா?''

''ஆமாம். எப்படியாவது உள்ளே நுழைய இடைவெளி கிடைத்தால் போதும். இதன் அரிப்புத் தொண்டு எல்லாம் இரவில்தான்! தஞ்சைப் பெரிய கோவில், சித்தன்னவாசல் போன்ற இடங்களில் உள்ள வரலாற்றுப் புகழ் மிக்க சுவர் ஓவியங்களை அரித்து அழித்த பெருமைக்கு உரியவை இந்த சில்வர் ஃபிஷ் என்ற இராமபாணப் பூச்சிகளே!'' என்றார் அப்பா.

''என் புத்தக ஷெல்பை முதலில் கவனிக்கிறேன்.'' என்று உள்ளே ஓடினான் பாபு.

''புத்தக ஷெல்பில் இரண்டு பாச்சை உருண்டைகளைப் போட்டுவை. புத்தகம் நமுப்பாக இருந்தால் அட்டையைப் பிரித்து வெயிலில் காய வை! இராமபாணப் பூச்சி இருக்கும் இடம் தெரியாது ஓடிவிடும்'' என்றார் அப்பா. ■



"நம்ம வரிக்குதிரை அண்ணாச்சியைப் பார்த்தப்புறம்தான் வீட்டுக்கு ஒரு வரியாவது கடிதம் எழுதிப் போடணும்னு ஞாபகம் வருது!"

காலந்தவறாமை

இந்தியர்களா, எதையும் நேரத்தோடு செய்யவே மாட்டாங்க' என்ற எண்ணம் அயல்நாட்டவர்களிடம் நம்மைப் பற்றி ஏற்பட்டிருக்கு. தாமதமாக வருவதையும், காலங்கடந்து செல்வதையும் பெரிய கொலை செய்து விட்ட குற்ற உணர்வோடு பார்த்து, இவற்றைத் தவிர்க்க வேண்டும் என்று கூறினார் நேருஜி. காந்தியடிகளும் மற்ற தலைவர்களும் நேரம் தவறாமையை உறுதியாக மதித்து நடந்து வந்திருக்கிறார்கள். சில நேரங்களில் தாமதங்களுக்கு நாம் காரணமாக இல்லாவிட்டாலும், வேறு சில சூழ்நிலைகளால் நாம் பாதிக்கப்பட்டு வருகிறோம். இவற்றை அறிந்து கொண்டால் நமக்கு வழிகாட்டியாக இருக்குமல்லவா? தங்கள் அனுபவங்கள் சிலவற்றை உங்களுடன் சில தம்பி தங்கைகள் பகிர்ந்து கொள்கிறார்கள்.



* எல்லோரும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் கூடி, இத்தனை மணி வரை காத்திருந்து கிளம்புவதுன்னு ஏற்பாடு பண்ணிக்கலாம்
- ஆட்றிஜேனட் ஜோசப்



* வேண்டிய நேரம் இருக்கே, நாள் இருக்கேன்னு தள்ளிப் போடாதீங்க. உடனுக்குடன் செய்யுங்கள்!
- ஸ்ரீதேவி, செங்கல்பட்டு.

ஆட்றிஜேனட் ஜோசப், மறைமலைநகர்.

தாமதம் என்ற சொல்லே நம்மாலதான் உருவாக்கப்பட்டதோ என்று நினைக்கிறேன். பத்து மணிக்கு மீட்டிங்குன்னா, பத்தரை மணிக்குத்தான் ஆரம்பிக்கிறாங்க. கல்யாண முகூர்த்தங்கள், தேர்வுகள், ரயில், பஸ்கள், சினிமா காட்சிகள் இவை மட்டும்தான் காலம் தவறாம நடக்குதுன்னு எனக்குத் தோணுது.

என் பிறந்த நாளன்று அதிகாலை எட்டு மணிக்கு என் பள்ளி நண்பர்களை விருந்துக்கு அழைத்திருந்தேன். அன்று தான் காலையில் எங்கப்பாவும் ஊரில் இருந்து வருவதாக இருந்தது. பத்து மணி வரை நண்பர்கள் யாரும் வரவில்லை. எங்க அப்பாவும் வரவில்லை! எனக்கு எப்படி இருக்கும்? ஒருவழியா பதினோரு மணிக்கு நண்பர்கள் வந்தாங்க. ''ஏன் இத்தனை லேட்டு'ன்னு கேட்டதற்கு அவங்க சொன்ன பதில் ரொம்ப வேடிக்கையா இருந்தது. அவங்க மொத்தம் பதினைஞ்சு பேர். ஒவ்வொருவரா சேர்ந்து அடுத்தவங்க வீட்டுக்குப் போய், எல்லோரும் ஒன்னா கிளம்பி வரதா ஏற்பாடு! முதலில் கிளம்ப வேண்டியவன் அரைமணி லேட். மத்தவங்க பத்துப் பதினைஞ்சு நிமிஷம்! ஏன் மணிக்கணக்கா லேட்டாகாது? இதை விட, எல்லோரும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இத்தனை மணி வரை காத்திருந்து மத்தவங்க வந்தாலும் வராவிட்டாலும் சரியாகக் கிளம்புவோம்னு ஒரு



ஏற்பாடு பண்ணியிருந்தால் யாருக்குமே லேட்டாயிருக்காது. எங்க அப்பா சமாச்சாரம் என்ன ஆச்சு தெரியுமா? ரயில் பத்து மணி நேரம் தாமதமா வந்திருக்கு!

* உலகச் செய்திகளை அறிந்து கொள்வதோடு, ஊர்வலம் இருக்கான்னு தெரிஞ்சுக்கறதும் மிக அவசியம்
- ராஜ் கணேஷ்.

ஸ்ரீதேவி,
செங்கல்பட்டு.

பெயர் கொடுப்பதில் நான் செய்த தாமதத்தால் ஒரு சுற்றுலாவிலேயே கலந்து கொள்ள முடியாமல் போய் விட்டது. எங்கள் பள்ளியில் ஊட்டி, கொடைக்கானல் போவதற்கு சுற்றுலா ஏற்பாடு செய்து இருந்தாங்க. அப்பாவிடம் அனுமதி வாங்கிக் கொண்டு சுற்றுலா செல்பவர்களின் பட்டியலில் என் பெயரையும் சேர்க்க எண்ணி இருந்தேன். அன்று மாலையே அப்பாவிடம் சுற்றுலா செல்ல அனுமதி வாங்கி விட்டேன். மறுநாள் வகுப்பாசிரியரிடம் போய்ச் சொல்ல வேண்டியது தான். ஆனால் மறுநாள் அவர் வரவில்லை. பெயர் கொடுக்கத்தான் ஒரு வாரம் அவகாசம் இருக்கே, நாளை கொடுக்கலாம் என்று அலட்சியமா இருந்து விட்டேன். மறுநாள் ஆசிரியர் வந்து விட்டார். ஆனால் நான்தான் இன்னும் ஐந்து நாட்கள் இருக்கிறதே, யார் யார் வருகிறார்கள் என்று பார்த்து விட்டுப் பிறகு என் பெயரைக் கொடுக்கலாம் என்று காலம் தாழ்த்தினேன்.

சுற்றுலாவுக்கு எந்தெந்த உடைகளை எடுத்துப் போவது, பேருந்தில் எந்த சீட்டில் உட்காருவது, யார் பக்கத்தில் உட்காருவது என்றெல்லாம் ஒவ்வொரு நாளும் ஆசையோடு யோசித்து யோசித்துக் கற்பனையில் மிதந்தேன்.

நான்காவது நாள் ஆசிரியரிடம் சென்று என் பெயரையும் பதிவு செய்து கொள்ள வேண்டினேன். அவர் சொன்ன பதில் எனக்கு அதிர்ச்சியைத் தந்தது. ''உன்னை அழைத்துச் செல்ல முடியாத நிலையில் இருக்கிறேன். இரண்டு பேருந்துகளுக்குத் தேவையான அளவு மாணவர்கள் ஏற்கெனவே சேர்ந்து விட்டனர்'' என்றார் அவர்.

தாமதத்தால் ஓர் அருமையான வாய்ப்பை நான் தவற விட்டேன். ஆனா, எனக்கு இது ஒரு நல்ல பாடமாக இருந்தது. அது முதல் எந்த வேலையையும் நேரம் இருக்கே, நான் இருக்கேன்னு தள்ளிப் போடுவதில்லை. உடனுக்குடன் செய்து விடுகிறேன்.

வி. ஏ. ராஜ்கணேஷ், கணபதிபுரம்.


நான் காலந்தவறாமையை தீவிரமா கடைப்பிடித்து வருபவன். எங்கே கிளம்பறதானா ஓரம் முன்னாடியே கிளம்பிடுவேன். அதனால் எனக்குப் பிரச்னை ஏதும் ஏற்படலே. என்னை மாதிரி தான் எங்க வீட்டுல இருக்கிற எல்லோருமே. அதனால லேட்டாக் கிளம்பறதுங்கறது எங்க குடும்பத்துல யாருக்குமே இல்லே. இப்படி இருந்தும் எங்க அக்கா ஒரு தடவை இந்தப் பிரச்னையில் வகையா சிக்கிக் கிட்டாங்க.

அக்காவுக்கு புட்டபர்த்தியில் உள்ள ஸ்ரீசத்ய



* கல்வியையோ, பயிற்சியையோ காலத்தோட உடனுக்குடன் செய்து கொள்ளணும். இல்லேன்னா இழப்பு நமக்குத்தான்!
- தனஸ்ரீ

சாயிபாபா கல்லூரியில் நுழைவுத் தேர்வு. அப்பா அக்காவை அழைத்துக் கொண்டு போக இருந்தார். இருவரும் திருவள்ளுவர் விரைவு பஸ்ல போறதா இருந்தாங்க. அன்னிக்கின்னு பார்த்து அப்பா ஆபீஸ்லேருந்து தாமதமா வந்தார். போற வழியில ஏதோ ஊர்வலம். பிராட்வே பஸ் நிலையத்திற்கு இவங்க இருபது நிமிஷம் தாமதமா போகும்படி ஆச்சு. அதுக்குள்ளே அந்த பஸ் போய்டுத்து. அப்புறமா வேற இரண்டு மூணு பஸ்ஸைப் பிடிச்சு, படாதபாடு பட்டு, ஒருவழியா தேர்வு ஆரம்பிக்கிற நேரத்துல அக்கா போய்ச் சேர்ந்திருக்கா. தேர்வை எப்படி எந்த டென்ஷன்ல எழுதியிருப்பாள்னு நீங்களே ஊகிக்கக்கலாம். இதுலேருந்து நான் உங்களுக்குச் சொல்ற அறிவுரை என்னன்னா, தினமும் உலக நடப்புகளைத் தெரிஞ்சுக்கறதுக்காக மட்டும் செய்திப் பத்திரிகைகளைப் பார்க்காதீங்க. உங்க பகுதியில் ஏதாவது ஊர்வலம் இருக்கான்னும் பார்த்துக்கிட்டே இருங்க. இது ரொம்ப அவசியம். உங்க முன்னேற்றத்துக்காக நீங்கள் கலந்துக்கப் போகிற தேர்வு போன்ற நிகழ்ச்சிகளுக்கு அதன் பாதிப்பு இருக்குமான்னு பார்த்துக்கிட்டே இருந்து முன்னதாகவே கிளம்பிடுங்க. தேர்வுக்குப் படிப்பது, தயார் பண்ணுவதை விட இதுதான் ரொம்ப முக்கியம்.



> * தேர்வு அன்று மூந்தின பஸ்ஸைப் பிடியுங்க!
> - கண்ணன்

வி. தனஸ்ரீ, மறைமலைநகர்.

எதையும் நேரத்தோட செய்யணும்னு நினைக்கிற எனக்கு எப்பவும் எதிலும் தாமதமே பிடிக்காது. ஐந்தாம் வகுப்பில் இருந்து இன்னி வரைக்கும் ஒரு நாள் கூட வகுப்பிற்கு தாமதமாப் போனதில்லேன்னா பார்த்துக்குங்களேன்.

காலையிலிருந்து இராத்திரி தூங்கப் போகிற வரை எந்தெந்த வேலைகளைச் செய்யணும், எதை முதலில் செய்யணும்னு நினைத்துப் பார்த்து, வரிசைப் படுத்திக்கிட்டுத்தான் அதைச் செய்யணும்னு அடிக்கடி எங்க அண்ணன் சொல்லிக்கிட்டே இருப்பார். அதை நினைவில் கொண்டு முறைப்படுத்திக்கிட்டு என் வேலைகளைச் செய்வேன்.

பள்ளி இறுதி நிலை வகுப்புல படிக்கப் போற எங்களுக்கு விடுமுறையில் தனி பயிற்சி வகுப்பு எங்க பள்ளியில் நடந்தது. ஆரம்ப நாளிலிருந்து மூணு நாள் வரை நான் போகல்லே. என்ன அவசரம், நிதானமா போனா என்னன்னு, எங்க குடும்பத்தாரோட ஜாலியா சுற்றுலா போனேன். சுற்றுலாக்குப் போய் வந்த பிறகு பள்ளிக்கூடம் போனால், முக்கியமான பாடங்களில் நிறைய நடத்திட்டாங்க. ஒரே அதிர்ச்சி! எனக்கு என்ன செய்யறதுன்னு தெரியலே. அன்னிக்கு பாடம் நடத்தின தலைமையாசிரியை என்னைப் போன்றவங்க மனசுல பதியற மாதிரி தாமதமாக வருவது பற்றியும் உடனுக்குடன் எதையும் செய்ய முயலாமை குறித்தும் அறிவுரை சொன்னார். அது என் காதுல இன்னமும் எதிரொலிச்சுக்கிட்டே இருக்கு.

அதோட, நடந்த பாடங்களை நான் நண்பர்களிடம் கேட்டுக் கெஞ்சிக் கூத்தாடி எழுதிக் கொண்டதையும் நான் மறக்கலே. எதையுமே அலட்சியமாக எண்ணாதீங்க. பயிற்சியோ, கல்வியையோ காலத்தோட உடனுக்குடன் செய்து கொள்ளவில்லைன்னா இழப்பு நமக்குத்தான்.

எஸ். கண்ணன், புதுப்பாளையம்கிராமம்


காலம் தவறாமைங்கறது மனிதர்களுக்கு அதிலும் குறிப்பாக மாணவர்களுக்கு இன்றியமையாதது. 'எந்நன்றி கொன்றோர்க்கும் உய்வுண்டு. உய்வில்லை செய்நன்றி கொன்ற மகர்க்கு'

என்று திருவள்ளுவர் சொன்னார். திருவள்ளுவர் இப்ப இருந்தால் 'எத் தவறு செய்தோர்க்கும் உய்வுண்டு - உய்வில்லை காலந்தவறிய மகர்க்குன்னு தான்' எழுதியிருப்பார். காலந்தவறிச் செய்யும் எதுவுமே உருப்படியாகாது. காலந்தவறுவது என்பது நம்ம இந்தியர்களுக்குத்தான். இல்லைன்னா, 'இண்டியன் பங்சுவாலிடின்னு' ஒரு தலைகுனிவுச் சொல், நம்மைப் பற்றி உருவாயிருக்குமா?

நான் காலந்தவறாமைக்கு முதல் முன்னுரிமை எப்பவும் தருபவன். சாப்பாட்டுக்கு லேட்டாச்சுன்னா சாதம் வேண்டாம்னு பள்ளிக்குக் கிளம்பிடுவேனே தவிர, லேட்டாப் போகவே மாட்டேன். அப்படிப்பட்ட நானும் ஒரு தடவை காலந்தவறும்படியா ஆயிருக்கு. அன்னிக்கு அரையாண்டுத் தேர்வு வேற. நான் சரியாத்தான் கிளம்பினேன். ஆனால், சரியான நேரத்திற்கு வர வேண்டிய பஸ் பிரேக் டௌன். அடுத்த பஸ்ஸைப் பிடிக்கப் போகும்படி ஆச்சு. விளைவு, இருபது நிமிஷம் தாமதமா தேர்வுக்குப் போகும்படி ஆயிடுச்சு. ஆசிரியர் மகா கண்டிப்புக்காரர். 'பதினைஞ்சு ரூபாய் அபராதம் கட்டிட்டு தேர்வு எழுதுன்னு' ஒரே உறுதியா சொல்லிட்டார். காரணங்களைக் கேட்க அவர் தயாரா இல்லை. வேறு வழியில்லாம நண்பர்கள் ஆளுக்கு ஒன்று ரெண்டுன்னு பணம் கொடுத்து உதவினாங்க. கட்டிட்டு தேர்வு எழுதினேன். இருந்தாலும் அப்ப ஏற்பட்ட மன உளைச்சல்ல தேர்வை சரியா எழுத முடியலை. நான் உங்களுக்கு சொல்றது எல்லாம், தேர்வு அன்னிக்கு, கொஞ்சம் முன்னாடியே கிளம்பிடுங்கறதைத் தான். சரியான பஸ்ஸை நம்பிப் போகாதீங்க. அது காலை வாரிடலாம். அதற்கு முந்தின பஸ்ஸைப் பிடிக்கப் போகப் பாருங்க.

ஆர். ராமகிருஷ்ணன், பேரமனூர்

நானும் சரி, எங்க வீட்ல மத்தவங்களும் சரி, எதுக்குமே லேட்டா புறப்பட மாட்டோம். சாப்பாடு, குளியல், தூக்கம் எல்லாம் இரண்டாம்பட்சம்தான். ஒரு தடவை நாங்க எல்லோரும் வெளியூர் போறதா ஏற்பாடு. எங்களுக்கு ரொம்ப சந்தோஷம். ராத்திரி ஏழரை மணிக்கு ரயில். மத்தியானம் நண்பர்கள் வீட்டில் டெக்கில் நல்ல படம் போட்டாங்க. சாயங்காலம் ஏழரை மணிக் குத்தானே ரயில், ஆட்டோவில் பத்து நிமிஷத்தில் ஸ்டேஷனுக்குப் போயிடலாம்னு வீடியோ பார்க்கப் போனோம். ஆறு மணிக்கு வீட்டுக்கு வந்து கிளம்ப ஏற்பாடு செய்தோம். ஏழு மணிக்குத்தான் தெரிஞ்சது, அன்னிக்கு ஆட்டோக்கள் எல்லாம் ஸ்டிரைக்காம்! எப்படியோ கெஞ்சிக் கூத்தாடி, ஒரு சைக்கிள் ரிக்ஷாவைப் புடிச்சு, ஒருவழியா ஸ்டேஷனுக்கு வந்து ரயிலைப் புடிக்கிறதுக்குள்ளே போதும் போதும்னு ஆச்சு. இதிலிருந்து என்ன தெரியுது? அக்கம் பக்கத்தில் என்ன நடக்கிறதுன்னு நாம்ப பார்த்துக்கிட்டே இருக்கணும். இல்லே இழப்பு நமக்குத்தான்!




* அக்கம் பக்கத்துல என்ன நடக்கிறதுன்னு பார்த்துக்கிட்டே இருக்கணும்!
- ராமகிருஷ்ணன்

புகைப்படம் - பேட்டி :
பாலகிருஷ்ணன், மறைமலைநகர்
சிறுவர் சங்கம்

பாம்பு 1 : உன் பையன் ஏன் சோகமாக இருக்கான்?

பாம்பு 2 : அவன் எடுத்த படத்திற்கு அவார்டு கிடைக்கலையாம்!

- எஸ். விஜயகுமார்





ஸ்விஸ் ராபின்சன் குடும்பம் - ஆங்கில மூலம் : ஜோஹன் டேவிட் வைஸ். தமிழில் : பி. எஸ். சுப்ரமண்யன், பக் 194, ரூ 25/- அலைகள் வெளியீட்டகம், 36, தெற்கு சிவன் கோயில் தெரு, கோடம் பாக்கம், சென்னை - 24.

புகழ்பெற்ற ஆங்கில நாவலான SWISS FAMILY ROBINSON ஐ அறியாத ஆங் கிலக் குழந்தைகள் இருக்க மாட்டார்கள். ராபின்சன் குரூசோவைப் போன்ற கதைக் களம். ஒரு குடும்பமே நாகரீகமற்ற தீவில் அடர்ந்த காட்டில், காட்டு விலங்குகளுக் கிடையே இருந்து தடைகளை வென்று சாதனை படைக்கிறது. இயற்கையை நேசிப் பவர்களுக்கு நல்ல விருந்து. சலிப்பே இல் லாது கதை விறுவிறுப்பாக ஓடுகிறது. தமிழாக்கம் தந்தவரைப் பாராட்ட வேண் டும். ஒரு மொழிபெயர்ப்பாகவே தோன்ற வில்லை.

சத்தியசோதனை தரும் நித்திய பாடங் கள், புலவர்சிங்காரவேலு, பக் 112, ரூ 16/- ராஜகுமாரி பப்ளிகேஷன்ஸ், 20, நியூசெஞ் சுரி காலனி, அம்பத்தூர், சென்னை - 58.

காந்தியடிகளின் புகழ்பெற்ற "EXPERI-MENTS WITH TRUTH" நூலின் அருமை யான தமிழ்ச் சுருக்கம். மனக்கலக்கம் அடை யும் போதும், பிரச்னைகளை சந்திக்கும் போதும் சிந்தனை தெளிவுபெற வழி காட்டும் நூல். தெளிவான நடை.

புள்ளிமான், டாக்டர் பூவண்ணன், பக் 80, ரூ 10/- வானதி பதிப்பகம், 13, தீன தயாளு தெரு, தி.நகர், சென்னை - 600 017.

சிறுவர் உலகுக்கு நன்கு அறிமுகமான ஆசிரியரின் அருமையான சிறுகதைகளின் தொகுப்பு இது. ஒவ்வொன்றும் ஒரு புதிய கதைக்களம். எந்த ஒரு நிகழ்ச்சியையும் கற் பனையால் ஊதிக் கதைபடைக்கும் வித்தை இவரிடம் குடிகொண்டுள்ள அதிசயத்தை இதில் உள்ள கதைகள் நன்கு விளக்கும். 'ஆலமரத்துக் கிளி' நெடுங்கதை எவ்வளவு காலமானாலும் சுவைக்கக்கூடியது.

அன்புள்ள மகனுக்கு - டி. என். சுப்பிர மணியன், பக் 104, ரூ 13/- அமிழ்தம் பதிப் பகம், 15, முத்துப்பிள்ளை தெரு, வ.உ.சி. நகர், வேலூர் - 1.

பெரியவர்களுக்காக மட்டு மின்றி சிறுவர்களுக்காகவும் எழுதிப் புகழ்பெற்ற அமரர் கவி. சுப்ரமண்யம். குழந்தைகளை மனதில் வைத்துக் கொண்டு, கடிதவாயிலாக இந்த நூலில் நல்ல நெறிகளை அறிவுறுத்தியுள்ளார். அன்றாடம் சிறுவர் வாழ்வில் ஏற் படும் பல பிரச்னைகள், குழப்பங் களுக்கு இதில் ஆசிரியர் தீர்வு தந்துள்ளார். நல்ல, பயனுள்ள சிறுவர் கட்டுரை நூல்.

மழலைப் பூக்கள் - குழ. கதிரேசன், பக். 12, ரூ 6.75, ஐந்திணைப் பதிப்பகம், 279, பாரதி சாலை, திருவல்லிக்கேணி, சென்னை - 5.

எல்.கே.ஜி. யூ.கே.ஜி. படிக்கும் குழந் தைகளுக்கு ஆங்கிலத்தில் உள்ளது போல் சொல்நயம் மிக்க எளிய பாடல்கள் தமிழில் அதிகம் இல்லை என்று அமரர் குழந்தைக் கவிஞர் அவர்கள் அடிக்கடி குறைப்பட்டுக் கொள்ளுவார். அந்தக் குறையைப் போக்க முயன்று வெற்றிகண்ட கவிஞர்கள் குழ. கதி ரேசன் குறிப்பிடத்தக்கவர். பெரிய பெரிய எழுத்துக்களில் ஏராளமான வண்ணப் படங் களுடன் சொல்நயம்மிக்க பாடல்களை மிக அருமையாகத் தந்துள்ளார். மாதிரிக்கு இதோ :

டிக்டிக் டிக்டிக் கெடிகாரம்;
டிங்டாங் டிங்டாங் கெடிகாரம்!
சின்ன முள்ளு அம்மாவாம்;
பெரிய முள்ளு அப்பாவாம்!
அம்மா, அப்பா இருவரையும்
அன்பாய்ச் சுற்றும் நொடிமுள்தான்
இந்தக் குட்டிப் பாப்பாவாம்!

குழந்தைகள் உரக்கக் கூவி எழுத்துக் கூட்டிப் படித்தாலே போதும். தன்னால் இராகம் உருவாகி, தாளம் போட வைக்கும்! குழந்தைகள் உலகம் தனியானது. அவர் களுடைய கற்பனையும் தனியானது. கடி காரத்தில் உள்ள மூன்று முட்களும் அம்மா, அப்பா, குட்டிப் பாப்பா என்று குழந்தைகள் மனநோக்கிலேயே எண்ணிப் பார்ப்பது எத் தனை நயம்! கதிரேசன் படைத்துள்ள மழ லைப் பூக்களில் எல்லாப் பூக்களுமே தனி மணம்; அழகு கொண்டவை! பரிசளிக்க ஏற்ற நூல்.

எவ்வளவோ முறை அறிவித்தும் பெரியவர் களுக்கான புத்தகங்களையும் இந்தப் பகு திக்குப் பலரும் அனுப்புகிறார்கள். உங்கள் நூலகம் பகுதியில் சிறுவர்களுக்கான புத்த கங்களும், பொது அறிவு நூல்களும் மட் டுமே மதிப்புரை செய்யப்படும். இரண்டு பிரதிகளை ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, சென்னை - 600 097 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

கிண்டி வந்தாச்சா?



அமுதா பரீட்சை அட்டையையும், பேனாவையையும் எடுத்துக் கொண்டாள். நேரத்தைப் பார்த்தாள். காலை மணி எட்டே கால்.

'அம்மா போயிட்டு வரேன்' என்று குரல் கொடுத்தவாறு கிளம்பினாள்.

''நேரமாகி விட்டது. பரீட்சைக்கு தாமதமாகப் போகாதே. ஆண்டுத் தேர்வு. கவனம். கலா வீட்டுக்குப் போய் அவளை அழைத்துக் கொண்டு போக நிற்காதே. உனக்குத் தாமதமாகி விடும். நேரே ஸ்டேஷனுக்குப் போ'' என்று அம்மா 'கடகட'வென்று சொல்ல 'சரியம்மா' என்று தலையாட்டிக் கொண்டே விரைந்தாள் அமுதா.

அமுதா எட்டாம் வகுப்பு மாணவி. பள்ளிக்கூடம் தியாகராய நகரில். வீடு தாம்பரத்தில். தினமும் மின்சார ரயிலில் ஏறி மாம்பலத்தில் இறங்கி ரங்கநாதன் தெரு நெரிசலில் திணறி, பள்ளிக்குப் போய் வருகிறாள்.

போகும் போது வழக்கமாக கலா வீட்டுக்கு எட்டு மணிக்குள் போவாள். இன்று லேட். அதனால் அநேகமாக கலா ஸ்டேஷனுக்குப் போயிருப்பாள்.

அமுதா நினைத்தது சரிதான். கலா ரயிலில் இருந்தாள். படியேறி வரும் போதே அமுதா கவனித்து விட்டாள். வண்டி கிளம்புவதற்கு மணியடித்தது. அமுதா படிக்கட்டுகளில் தாவி இறங்கி பெண்கள் பெட்டிக்குள் ஏறினாள்.

அவளைப் பார்த்ததும் கலாவுக்கு ஆறுதலாக இருந்தது. ''நாம இன்னிக்கு லேட்டுடீ...'' என்றாள்.

''கவலைப்படாதே. பரீட்சைக்கு சரியாகப் போய் விட முடியும்'' என்று நம்பிக்கையுடன் பதிலளித்தாள் அமுதா.

பிறகு தோழிகள் பரீட்சைக்குரிய பாடத்தைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள்.

''பட்டு என்று முடியும் திருக்குறள் தெரியுமா?'' கேட்டாள் கலா.

'யாகவராயினும் நாகாக்க காவாக்கால்

சோகாப்பர் சொல்லிழுக்கு பட்டு.'

என்று பட்டென்று சொன்னாள் அமுதா.

அவர்கள் பக்கத்தில் ஒரு வயதான அம்மாள் அமர்ந்திருந்தாள். ஏழ்மையான தோற்றம், கண்களில் ஒருவித பயம் இருந்தது.

அமுதாவைப் பார்த்து அந்த வயதான அம்மாள், ''கண்ணு, எனக்கு மெட்ராஸ் புதுசு. கிண்டி வந்ததும் சொல்லுமா, இறங்கணும்... எனக்குத் தெரியாது'' என்று வேண்டினாள்.

''பாட்டி பயப்படாதீங்க. கிண்டி வந்ததும் நான் சொல்றேன்'' என்று ஆதரவாகக் கூறினாள் அமுதா.

பாட்டிக்கு நிம்மதியாக இருந்தது.

மின்சார ரயில் குரோம்பேட்டையில் நின்ற போது, ''கிண்டி வந்திடுச்சா?'' என்று பாட்டி கேட்டாள்.

''இல்லை பாட்டி. இது குரோம்பேட்டை. இதுக்கு அடுத்தது பல்லாவரம். அப்புறம் திரிசூலம். அதுக்கு அடுத்தது மீனம்பாக்கம். அப்புறம் பழவந்தாங்கால். பழவந்தாங்கலையும் தாண்டினதுக்கு அப்புறம் பரங்கிமலை. அதுக்கப்பறம்தான் கிண்டி வரும்'' என்றாள் அமுதா.

''இதெல்லாம் எனக்கு எப்படிம்மா தெரியும்? நான் மெட்றாஸுக்கு புதுசு'' என்று பரிதாபமாகக் குழம்பினாள் பாட்டி.


சுகுமாரன்

அப்படின்னா மாம்பலம் வந்ததும், நானே உங்களுக்குச் சொல்றேன். அவசரப்படாதீங்க என்று கூறி புன்னகை செய்தாள் அமுதா.

கலா கேட்ட அடுத்த ஒரு கேள்விக்கு அமுதாவுக்கு விடை தெரியவில்லை. அதை யோசிக்கும் மும்முரத்தில் கிண்டி வந்த போது பாட்டிக்குச் சொல்ல மறந்து போனாள் அமுதா.

ரயில் மாம்பலம் வந்து விட்டது. அமுதாவும் கலாவும் இறங்குவதற்கு எழுந்தனர்.

''கிண்டி வந்திடிச்சா?'' - பாட்டி கேட்டாள். அமுதா திடுக்கிட்டாள். பிறகு சமாளித்துக் கொண்டு, ''பாட்டி எங்க கூட இறங்குங்க. சொல்றேன்'' என்றாள். பாட்டியின் பையை வாங்கிக் கொண்டாள்.



''நேரமாகி விட்டது வாடீ'' என்று நிற்க முடியாமல் தவித்தாள் கலா. பிளாட்பாரத்தில் கூட்டம் இடித்தும் புடைத்தும் நகர்ந்து கொண்டிருந்தது.

''கிண்டி இதானா? நா போறேன்'' என்று அமுதாவிடமிருந்து பையை வாங்க கைநீட்டினாள் பாட்டி.

பரிதாபமாக விழித்த அமுதா, ''பாட்டி, இது கிண்டி இல்லை. அதைத் தாண்டி வந்துட்டோம். நான் சொல்ல மறந்துட்டேன்.''

''அட, புள்ள... கெடுத்தியே. ஒன்ன நம்பி இருந்தேனே... எனக்குப் போகத் தெரியாதே. என்ன செய்வேன்?'' -பாட்டி பதறினாள்.

''பாட்டி கவலைப்படாதீங்க. நானே உங்களை கிண்டியில் கொண்டுபோய் விடுகிறேன்'' அமுதாவின் வார்த்தைகள் உறுதியாக இருந்தன.

கலா விழித்தாள். 'அமுதா பரீட்சைக்கு நேரமாச்சு. விளையாடாதே. பாட்டிகிட்ட ஒரு மன்னிப்பு கேட்டுடு. வா போகலாம்' என்று கையைப் பிடித்து இழுத்தாள் கலா.

'கலா, இது என் தப்பு. பாட்டியை இப்படியே விட்டுட்டுப் போக எனக்கு மனசு வரலே. நீ போ. நான் எப்படியும் பரீட்சைக்கு வந்திடுவேன்' என்று கூறி விட்டு பாட்டிக்கு கிண்டி செல்ல ஒரு டிக்கெட் வாங்க ஓடினாள் அமுதா. அவளுக்கு மாதாந்திர சீசன் டிக்கெட்.

கலாவால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. பாட்டியிடமும் தப்பில்லை

தான். இருந் தாலும் பரீட்சை நேரத்தில் அதை யெல்லாம் யோசித்துக் கொண் டிருக்க முடியுமா?

அமுதா டிக்கெட்டுடன் வந்தாள். பாட்டியை எதிர் பிளாட்பாரத்திற்கு விரைந்து அழைத்துச் சென்றாள்.


நல்லவேளை உடனடியாக வண்டி வந்தது. கலா தவிப்புடன் அமுதாவுக் குக் கையசைத்து விடைபெற்றாள்.

அமுதா பாட்டியை பத்திரமாகக் கிண்டியில் இறக்கி விட்டாள்.

அமுதாவின் கன்னத்தைத் தடவிய பாட்டி, 'ஒன் நல்ல மனசுக்கு குறை வில்லாம இருப்பம்மா' என்று வாழ்த் தினாள்.

அன்று பத்து நிமிடங்கள் தாமத மாக கேள்வித்தாள் பெற்றுப் பரீட்சை எழுதினாலும், அமுதாவின் விடைத் தாள் முழுமை பெற்றிருந்தது. மனம் அதை விட நிறைவாக இருந்தது.





சுயமாக ஒளிரும் தங்க நட்சத்திரம்

இரவு நேரத்தில் வானில் கண் சிமிட்டும் ஆயிரக்கணக்கான நட்சத்திரங்களைப் பார்த்து ரசித்திருப்பீர்கள். அவையாவும் சுயமாகப் பிரகாசிக்காமல் சூரியனிடமிருந்து ஒளியைக் கடனாக வாங்கி வெள்ளி நிறத்தில் ஜொலிக்கின்றன என்பதும் உங்களுக்குத் தெரியும்.

ஆனால் இவை எல்லாவற்றிலுமிருந்தும் மாறுபட்டதாக பொன் நிறத்தில், சுயமாக ஒளிரும் 'தங்க நட்சத்திரம்' ஒன்று விண்வெளியில் உள்ளதாம்! இதை சில ஆண்டுகளுக்கு முன்புதான் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். மற்ற நட்சத்திரங்களைப் போல் அல்லாது இது மட்டும் எப்படி சுயமாக ஒளி வீசிக் கண்சிமிட்டுகிறது? இதன் மேற்பரப்பில் இலட்சக்கணக்கான டன் எடையுள்ள தங்கம் பரவிக் கிடப்பதால் தான் பொன் நிற ஒளியை வெளிப்படுத்துகிறதாம்!

இந்த நட்சத்திரத்தை நாம் சென்றடைய ஒளி வேகத்தில் அதாவது மணிக்கு 1,86,000 மைல் வேகத்தில் செல்லும் ராக்கெட்டில் பயணம் செய்தாலே, கிட்டத்தட்ட 350 ஆண்டுகளில் அதை அடையலாமாம்! அது எவ்வளவு தொலைவில் அமைந்திருக்கிறது என்பதை நீங்கள் கணக்குப் போட்டுக் கொள்ளுங்களேன்!

விஞ்ஞானிகள் குழு இந்த அபூர்வ நட்சத்திரத்தை, விஷேட ஆராய்ச்சிக்கலமான இன்டர்நேஷனல் அல்ட்ரா வயலட் எக்ஸ்போ ரர் என்பதன் உதவியால் கண்டுபிடித்தார்கள். இந்த விண்வெளிக் கலம் அமெரிக்கா, ஸ்பெயின், இங்கிலாந்து ஆகிய மூன்று நாடுகளின் கூட்டுத் தயாரிப்பாகும்!

தங்க நட்சத்திரமானது சூரியனை விட மூன்று பங்கு அதிக எடையுள்ளதாக இருக்கிறதாம்! இதில் தங்கத்தை அடுத்து அதிகமான மாங்கனீசும் இருப்பதாகத் தெரிகிறது.

எல்லாம் சரி! மற்ற நட்சத்திரங்களுக்கு இல்லாத இந்தச் சிறப்பு அம்சங்கள் இந்த விண்மீனுக்கு மட்டும் எப்படிக் கிடைத்தது? இந்த இரகசியத்தைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சியாளர்கள் மண்டையைப் பிய்த்துக் கொள்கிறார்கள். இவர்களுடைய நடவடிக்கைகளைப் பார்த்தால் விரைவில் இந்த இரகசியத்தை அவர்கள் கண்டுபிடித்து விடுவார்கள் என்றுதான் தோன்றுகிறது. விஞ்ஞானிகளா கொக்கா?

- ஏ. ஜே. ஜப்பார்.

சகலகலா வல்லவர்

ஒருவர் ஒரு துறையில் அறிஞராக இருக்கலாம். ஒருவரே பல துறைகளிலும் நிபுணராக இருப்பது அபூர்வம். அத்தகைய அபூர்வ மனிதர்களுள் இத்தாலிய அறிஞர் லியோனார்டோ டாவின்சியும் ஒருவர். அவர் சிறந்த ஓவியர்; சிறந்த சிற்பி; சிறந்த கட்டடக் கலைஞர். அவர் மனித உடற்கூற்றை ஆராய்ந்தார். வானவியல் நிபுணர். இயற்கையை ஆராய்ந்தார். சிறந்த உலகப் புகழ்பெற்ற மோனாலிசா ஓவியத்தைத் தீட்டியவர். 'சகலகலா வல்லவர் லியோனார்டோ டாவின்சி'.



- எஸ். விஜயா சீனிவாசன்



பாப்பா!

சின்ன சின்ன பாப்பா
சிரிக்கும் நல்ல பாப்பா
கொள்ளை அழகு பாப்பா
கொள்ளை கொள்ளும் பாப்பா

மழலை பேசும் பாப்பா
மகிழ வைக்கும் பாப்பா
மலரைப் போன்ற பாப்பா
மனதைக் கவரும் பாப்பா

- பா. சரவணகுமரன்,
திருக்கண்ணங்குடி.


பாட்டி!

பாட்டி எங்கள் பாட்டி!
பல்லில் லாத பாட்டி!
பாக்கை இடிக்கும் பாட்டி!
பாட்டுப் பாடும் பாட்டி!

பள்ளிக் கூடம் சென்றால்
பார்த்து மகிழும் பாட்டி!
கொள்ளை ஆசையாலே
கொஞ்சி மகிழும் பாட்டி!

கழுத்தை ஆட்டி, ஆட்டி
கதைகள் சொல்லும் பாட்டி!
முழிக்க புதிர்கள் போட்டு
முட்டாள் ஆக்கும் பாட்டி!

- ஏ. ஹரிகிருஷ்ணன்,
எலவனாசூர்.





பிருந்தாவனக் கவியரங்கம்

ஆறு!

ஆறு நல்ல ஆறுதான்;
அருகில் ஓடும் ஆறுதான்
ஓடி வரும் நீரு தான்;
ஊருக் குதவும் ஆறுதான்.

வளைந்து நெளிந்து ஓடுதாம்
வண்டல் மண்ணைச் சேர்க்குதாம்
அலையும் கட்டிப் பையன் போல்
அங்கு மிங்கும் ஓடுதாம்!

மண்ணில் தேங்கும் ஈரந்தான்;
மலையில் இருந்து பிறக்குதாம்;
சின்னதாகத் தோன்றுதாம்;
கடலில் போயிச் சேருதாம்!

ஆறு நல்ல ஆறுதான்
அழகு சேர்க்கும் ஆறுதான்;
ஊருக் கழகு ஆறுதான்
உதவும் குணத்தைக் காட்டுதாம்!

- ஹரிஹரன், மதுரை - 14.

அழகுமிகு பிள்ளையார்

யானை முகப் பிள்ளையார்
யாரும் வணங்கும் பிள்ளையார்
பானை வயிறுப் பிள்ளையார்
பக்தர் போற்றும் பிள்ளையார்

நன்மை தரும் பிள்ளையார்
நாம் விரும்பும் பிள்ளையார்
கல்வி தரும் பிள்ளையார்
கவலை நீக்கும் பிள்ளையார்

அரச மரத்துப் பிள்ளையார்
அன்பர் துதிக்கும் பிள்ளையார்
அருளைத் தரும் பிள்ளையார்
அழகுமிக்க பிள்ளையார்!

- கே. எஸ். கோகுலன்,
சென்னை - 91.

அம்மா!


அன்பு காட்டும் அம்மா
ஆசை உள்ள அம்மா
ஆனை, பூனை காட்டி
அரவணைக்கும் அம்மா

நிலவு காட்டி ஊட்டும்
நேசமுள்ள அம்மா
பலவும் சொல்லிக் கொடுக்கும்
பாசமுள்ள அம்மா

படுக்க வைத்துப் பாடி
பாங்காய் தூங்க வைத்தே
படித்து மேதையாக்கி
பார்த்து மகிழும் அம்மா!

- ஏ. பாபு, ஈரோடு - 4.





பிருந்தாவனக் கவியரங்கம்

தர்பூசணி!

குளுகுளுன்னு ஒரு பழம்!
குண்டு குண்டா ஒரு பழம்!
தளதளன்னு ஒரு பழம்!
தர்பூசணி எனும் பழம்!

கிளியின் மூக்கு வண்ணத்தில்!
கிண்ணம் போல இருக்குது!
பளபளன்னு கருப்பு கொட்டை!
புதைஞ்சு மறைஞ்சு கிடக்குது!

கடையில் குவிச்சு விக்கறான்!
கடை நிறைய கூட்டம்தான்!
கூடை கொண்டு போகலாம்!
கொள்ளைப் பழம் வாங்கலாம்!

- த. கு. பா. பட்டுதுரை,
சிதம்பரம்.

முதல் செலவு

நாளும் காசை சேமிப்பீர்
நன்மை விளையவே சேமிப்பீர்
நாடு வளம்பெற சேமிப்பீர்
நாமும் உயர்ந்திட சேமிப்பீர்!

அவசியம் இல்லாச் செலவுகளை
ஒழிப்பீர் உடனே சேமிப்பீர்!
எவரும் இதனைச் செய்திடலாம்
அன்னை நாட்டை உயர்த்திடலாம்!

சேமிப்பே நம் முதல் செலவு!
சிக்கனமே ஒரு புதுவரவு!
நாமெல் லோரும் சேமிப்போம்
நலமாய் உயர்ந்து காண்பிப்போம்!

- இரா. பிரபாகரன்,
பட்டுக்கோட்டை.



பிருந்தாவனக் கவியரங்கம்

மின்விசிறி!

சுற்றுது சுற்றுது மின்விசிறி
சில்லெனக் காற்று தரும் விசிறி
உத்தரம் அதனில் தொங்கிடுது
உயரே வட்டமாய்ச் சுற்றிடுது

வெப்பம் வியர்வை நீக்கிடுது
வேகம் குறைத்தும் சுற்றிடுது
ஆப்பம் போன்ற முகத்திலே
அழகுக் கைகள் முளைத்திருக்கு

அறிவியல் தந்த பரிசிதுவாம்
அதனை என்றும் எண்ணிடுவோம்
பெரிதாய் சிறிதாய் பலவகையாய்
பொலியப் போட்டு மகிழ்ந்திடலாம்!

- எம். ஷேக் உசேன், வடகரை.

வாலாட்டம்!

புலி வாலை ஆட்டினால் - அது
பாயப் போகும் அறிகுறி.
நாயும் வாலை ஆட்டினால் - அது
நன்றியை உணர்த்தும் ஒரு செயல்.

குரங்கும் வாலை ஆட்டினால் - அது
குதிக்கப் போகும் அடையாளம்
மாடு வாலை ஆட்டினால் - அது
மொய்க்கும் ஈக்களை விரட்டுமாம்

குறும்புத் தம்பி வாலாட்ட - உடன்
கூடத்தில் நடந்ததை அறிவீரோ?
விரைந்து பிரம்பை எடுத்தனளே - அம்மா
வேகமாய் நான்கு சாத்தினளே!

- இரணியல்ராஜா, தஞ்சை.

உண்டாகும்

அன்பும் பண்பும் சேர்ந்தாலே
அடக்கம் அங்கே உண்டாகும்

சமுத்திரத் துடனே நதிசேர்ந்தால்
சங்கமம் அங்கே உண்டாகும்

மலரொடு மலரும் சேர்ந்தாலே
மாலை அங்கே உருவாகும்


கையுடன் கையும் சேர்ந்தாலே
கனிவுடன் வணக்கம் உருவாகும்


பகலும் இரவும் சேர்ந்தாலே
புதிய நாளும் உருவாகும்

பாசமும் அன்பும் இணைந்தாலே
போற்றிடும் பக்தி தோன்றிடுமே

பொருளும் புகழும் இணைந்தாலே
பாரில் பெருமை நிலையாகும்

- ஏ. வி. இளங்கோ,
ஆட்டியனூர்புதூர்.






ஒட்டக வண்டியில் ஓர் நூலகம்!

ராஜஸ்தான் மாநிலத்தின் தலை நகரான ஜெய்ப்பூரிலிருந்து 27 கி.மீ. தொலைவில் உள்ளது தஹ்சில். இங்குள்ள 'பாலர் மேம்பாட்டு மையத்தை'ச் சேர்ந்தவர்கள் இதுவரை யாருமே செய்யாத ஓர் அரிய முயற்சியைச் செய்துள்ளனர். இவர்களுடைய இலட்சியமே பாலைவன மக்களை எழுத்தறிவு பெறச் செய்து, அறிவு பெருக்கும் புத்தகங்களைப் படிக்கப் பழக்க வைக்க வேண்டும் என்பதுதான். பாலைவனத்தில் ஆங்காங்கே அமைந்துள்ள கிராமங்களில் நூலகத்தின் பலனை மக்கள் அடையும்படி செய்ய வேண்டும் என்றால் ஒவ்வொரு ஊரிலும் பெரும் செலவு செய்து நூலகங்களை அமைத்தாக வேண்டும். கண்டிப்பாக இதைச் செய்ய முடியாது. அவர்களிடம் அத்தனை நிதி வசதி இல்லை. நிதி வசதி இல்லை என்று அவர்கள் பேசாமல் இருந்து விடவில்லை. ஒட்டக வண்டி ஒன்றை விலைக்கு வாங்கி அதில் உறுதியான நான்கு ஸ்டீல் பீரோக்களை இணைத்து அறிவியல், சமூகம், அரசியல், பொது அறிவு என எல்லாத் துறைகளிலும் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட நூல்களை வைத்துக் கொண்டு சுற்று வட்டாரத்திலுள்ள பாலைவன ஊர்களான கோக்லா, பால்வாலா, ஜீநா வாலா, தயராம்பூர் உட்பட இருபதுக்கும் அதிகமான கிராமங்களுக்கு வாரம் ஒரு முறை விஜயம் செய்கின்றனர்.

''இவர்களுடைய முயற்சி வீண் போகவில்லை. இன்று பள்ளிச் சிறுவர்கள் மட்டுமல்லாது பெரியவர்களும் இந்த நடமாடும் ஒட்டக நூலக வண்டி வரும் நாளை ஆவலுடன் எதிர் பார்த்துக் காத்து நிற்கின்றனர். இது முழுக்க முழுக்க இலவச சேவைதான் என்றாலும், பராமரிப்புச் செலவிற்காக மாதம் இரண்டு ரூபாய் மட்டும் சந்தாதாரர்களிடம் வசூலித்துக் கொள்கிறார்கள். இரவு வேளைகளிலும்



இவர்கள் பணி தொடர்கிறது. இதற்காக, இந்த ஒட்டக நூலக வண்டியிலேயே சூரிய பாட்டரியில் இயங்கும் மின் விளக்கு அமைக் கப்பட்டுள்ளது!

எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்கு கற்றுக் கொடுக்கும் தொண்டர்களும் வண்டியுடன் செல்கின்றனர். இவர்கள் படிப்பறிவில்லாதவர்களை ஒன்று கூட்டி வகுப்புகள் நடத்துவதுடன் அன்றைய நாளிதழ்களையும்,



கதைகளையும் உரக்கப்படித்துக் காட்டி அனைவருக்கும் உலக அறிவு புகட்டுகின்றனர். தற்சமயம் 125 சந்தாதாரர்களைக் கொண்டிருக்கும் இந்த நடமாடும் ஒட்டக நூலகத்திற்கு, பொது மக்களிடையே பெரிய வரவேற்பு இருப்பதால் இது போன்று மேலும் பல நூலகங்களை அறிமுகப்படுத்த நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப் பட்டு வருகின்றன!

- அப்துல்

என்ன பலகாரம்? - போட்டி முடிவு

இந்தப் போட்டியிலும் இரண்டாயிரத்து நானூறு பேர்களுக்கு மேல் கலந்து கொண்டு அசத்தியிருக்கிறார்கள்! அதுவும் எல்லோருமே சரியான விடை! குலுக்கல் முறைதான் பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்கக் கைகொடுத்தது.

சரியான விடை :

ரசகுல்லா	அதிரசம்
வடை	முறுக்கு
பூரி	பாதுஷா
அப்பம்	பொங்கல்
அல்வா	

ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :

1. என். வெங்கடேஷ், சென்னை - 4.
2. சா. முகமது அப்துல் காதர், காரைக்கால்.
3. D. கஸ்தூரி, திருமலைராயன்பட்டினம்.
4. I. வெனிஷ் ராஜ் இக்னேஷியஸ், T. கள்ளிகுளம்.
5. க. சரவணன், சிங்கம்புணரி.
6. ந. முகம்மது இத்ரீஸ், சிங்கம்புணரி.
7. இ. சங்கீதா, உடுமலைப்பேட்டை.
8. A. அருள்மேரி, கரிப்பட்டி, சேலம்.
9. அ. எழிலி, வில்லியனூர்.
10. க. கவுஸ் முஸ்தாபா, கோட்டை, சேலம்.
11. ஆர். ஸ்ரீவித்யா, ஈரோடு - 1.
12. பெ. சேவியர் ரூபென், திருநெல்வேலி.
13. எச். சி. இமானுவேல், சூளை, சென்னை - 112.
14. எம். எஸ். வெங்கட்ராமன், மேலையூர்.
15. அ. ஷப்பீர் உசேன், சென்னை - 20.
16. கே. லலிதாம்பிகை, சூலூர்.
17. எம். ஏ. நஸீரா பர்வீன், கடையநல்லூர்.
18. ஜி. கார்த்திக், கல்கத்தா - 40.
19. D. லியோ மைக்கேல், அறந்தாங்கி.
20. வி. ஸ்ரீவித்யா தேவி, பாலக்காடு, கேரளா.

சரியான விடை எழுதிய இரண்டாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் பெயரை வெளியிடுவது என்பது இயலாதது. பரிசு பெற்றவர்களுக்கு, பல்லாயிரக்கணக்கான 'கோகுலம்' வாசகர் சார்பில் பாராட்டுகள். கலந்து கொண்டு சிறப்பித்து அசர வைத்தவர்கள் அனைவருக்கும் நன்றி!




கேட்குங்க டாக்டர்?

டாக்டர் கு. கணேசன்

★ ராஜலட்சுமி நாகராஜன், மேலப்பாதி.


? காய்ச்சல் வந்தால் அதை 'டைபாய்டு' அல்லது 'ஃப்ளு' என்று எப்படி வகை பிரிக்கிறார்கள்? உடல் மாற்றத்தை வைத்தா? ரத்தத்தை வைத்தா?

! காய்ச்சல் என்பது ஒரு நோயின் அறிகுறி. அந்த நோயை உண்டாக்குவது பாக்டீரியா, வைரஸ், ஒட்டுண்ணி, காளான் போன்ற கிருமிகள். ஒவ்வொரு கிருமியும் வெவ்வேறு விதமாய் காய்ச்சலை உண்டு பண்ணும். உதாரணமாக வைரஸ்களால் வரக்கூடிய ஃப்ளு மற்றும் அம்மைக் காய்ச்சல்களில் தொடர்ந்து காய்ச்சல் இருந்து கொண்டே இருக்கும்; பாக்டீரியாவால் வருகிற டைபாய்டு காய்ச்சலில் விட்டு விட்டுக் காய்ச்சல் வரும்; அப்படி வரும் போதெல்லாம் காய்ச்சலின் அளவு அதிகரித்துக் கொண்டே போகும். இதுவே ஒட்டுண்ணியால் வருகிற மலேரியாவாக இருந்தால் ஒருநாள் விட்டு ஒரு நாள் காய்ச்சல் வரும். இப்படி காய்ச்சலின் அறிகுறியை நிர்ணயித்து டைபாய்டா அல்லது, ஃப்ளுவா என வகைப் பிரிக்கிறோம். அதோ சமயம் சந்தேகம் வரும் இடங்களில் ரத்தத்தைப் பரிசோதித்து, கிருமிகளை நேரில் பார்த்து அல்லது அவற்றின் பாதிப்புகளைப் பார்த்து, காய்ச்சல் எவ்வகையைச் சார்ந்தது என முடிவுக்கு வருவோம். இவை தவிர, உடலில் தோன்றும் மாற்றங்களும் நோயை நிர்ணயிக்க உதவும்.



★ பா. சுகந்தி, கும்பகோணம்.

? குழந்தைப் பருவத்தில் கக்குவான் இருமல், இளம்பிள்ளை வாதம், தொண்டை அடைப்பான் போன்ற நோய்களுக்கு தடுப்பு ஊசி போடாமலிருந்தால், வளர்ந்த பிறகு அவற்றைப் போட்டுக் கொள்ளலாமா?



! தேவையில்லை, சுகந்தி. குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருக்கும் என்பதால், இளம்பிள்ளை வாதம், கக்குவான் இருமல், தொண்டை அடைப்பான் போன்ற நோய்களுக்கு தடுப்பு ஊசி

போடுகிறோம். பத்து வயதைத் தாண்டி விட்டால் இயற்கையிலேயே நோய் எதிர்ப்பு சக்தி உண்டாகி விடுகிறது. அதுவே நமக்கு நோய் வராமல் பார்த்துக் கொள்கிறது. எனவே, பத்து வயதுக்கு மேல் மேற்சொன்ன நோய்களுக்கு தடுப்பு ஊசி போட வேண்டிய அவசியமில்லை.

★ வி. தங்கவேல், முத்தூர் – 5.

? வாய்ப்புண் எதனால் ஏற்படுகிறது? அதனைப் போக்கும் வழி முறைகள் யாவை?



! வைட்டமின்-பி-காம்ப்ளெக்ஸ், வைட்டமின் சி, இரும்புச்சத்துக் குறைபாடு, குடல்புண், அஜீரணக் கோளாறுகள், பூஞ்சைக் காளான் தொற்று போன்றவற்றால் வாய்ப்புண் ஏற்படலாம். சிருக்கு கூர்மையான பற்கள், சரியாகப் பொருந்தாத செயற்கைப் பற்கள், பற்பசையால் உண்டாகும் ஒவ்வாமை, எதிர் உயிர் மருந்துகளின் பக்க விளைவுகள் ஆகியவற்றாலும் வாய்ப்புண் வரலாம். காரணமறிந்து மருத்துவம் பெற்றால் முழு நிவாரணம் கிடைக்கும். வாய்ப்புண்ணைப் போக்க கீழ்க்காணும் முறைகள் உதவும். 1. வாயை எப்போதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். 2. சத்துள்ள உணவுகளை உண்ண வேண்டும். குறிப்பாகக் காய்கறிகளையும், பழங்களையும் அதிகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அகத்திக் கீரை, அரைக்கீரை, முருங்கைக் கீரை, பீட்ரூட், காரட், தக்காளி, அவரைக்காய், வெண்டைக்காய், பால், முட்டை, பேரீச்சம் பழம் போன்றவையும் உதவும். 3. செயற்கைப் பல்செட் உபயோகிப்போர் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பல் மருத்துவரிடம் பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

★ சி. மாதேஸ்வரன், ஆனைகல் மேடு.

? நம் உடலில் ரத்தம் நீர்மமாக உள்ளது. உடலை விட்டு வெளி வந்தவுடன் உறைந்து விடுகிறதே, அதற்கு என்ன காரணம் டாக்டர்?

! ரத்தம் வெளி சீதோஷ்ண நிலைக்கு வந்ததும், அதிலுள்ள பதிமூன்று வகையான காரணிகள் ஒவ்வொன்றாக வினை புரிந்து சுமார் 3 முதல் 4 நிமிடங்களில் ரத்த உறைவை உண்டாக்குகின்றன. ரத்தம் உடம்பில் இருக்கும் போது இந்தக் காரணிகள் வினைபுரிவதில்லை;



அதனால் உடம்பில் ரத்தம் நீர்மமாக உள்ளது.

★ வே. பூங்குன்றன், வடமாதிமங்கலம்.

? டாக்டர் சார்! என் காலில் 'சேற்றுப் புண்' உள்ளதால் பயங்கர எரிச்சல். இதைத் தவிர்ப்பது எப்படி?

! காலை சுத்தமாக வைத்துக் கொள். வெதுவெதுப்பான நீரில் அடிக்கடி கழுவி, ஈரம் இல்லாதபடி துடைத்துக் கொள். மருத்துவர் ஆலோசனைப்படி காளான் எதிர்ப்பு மருந்து (Anti Fungal Ointment) அல்லது பவுடரை சேற்றுப் புண்ணில் காலை, மாலை இரு வேளையும் போட்டுக் கொள். வெளியில் செல்லும் போது, அவசியம் காலணிகளை




அணிந்து செல். நீச்சல் குளம், ஆறு, குளம், குட்டைகளில் குளிக்காதே! அங்குதான் சேற்றுப்புண்ணை உண் டாக்கும் காளான் கிருமிகள் நடமாடும். பாதங்களை எப்போதும் ஈரமில்லாமல் பார்த்துக் கொள். உன் சேற்றுப்புண் மிக விரைவிலேயே குணமடையும்.

★ எம். சுரேஷ், எட்டியப்பட்டி.

? நாம் அதிர்ச்சியுறும் போது ஏன் மயக்கமடைகிறோம்?

! அதிர்ச்சி அடையும் போது, அட்ரீனல் சுரப்பிகளின் அளவுக்கு அதிக மான பணியினால் இதற்குரிய நரம்பு மண்டலம் தூண்டப்படுகிறது. இதன் விளைவாக ரத்தம் மூளைக்குச் செல்வ தில் தற்காலிகத் தடை ஏற்படுகிறது. இதனால்தான் மயக்கம் வருகிறது.







ஒட்டகமே வா வா!

பாலைவனம் என்றவுடன் நம் நினைவிற்கு வருவது ஒட்டகம்தானே? ''பாலைவனக் கப்பல்'' என அழைக்கப்படும் இதன் பிறப்பிடம் பாலைவனங்கள் நிறைந்த அரேபியாவாகவோ, ஆஃப்ரிக்காவாகவோதான் இருக்க வேண்டும் என்றுதானே நாம் இதுவரை நினைத்துக் கொண்டிருக்கிறோம்? ஆனால் அது தவறு என்றும், ஒட்டகங்கள் முதன் முதலில் வட அமெரிக்காவில்தான் தோன்றின என்றும் கூறுகிறார் ஃப்ளாரிடா பல் கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் எஸ். டேவில் வெப் என்பவர்.

அவர் அமெரிக்க விஞ்ஞான முன்னேற்றக் கழகத்தில் கூறியதாவது :

பூமியினுள் புதையுண்டு கிடக்கும் படிவங்களின் (Fossil) ஆராய்ச்சியி லிருந்து நான்கு கோடி ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஒட்டகங்கள் அமெரிக்காவில் முக்கியமாக வட அமெரிக்காவில் இருந்தது தெரிய வருகிறது. ஆனால், ஆசியாவின் இதர பகுதிகளில் அவை மூன்று கோடி ஆண்டுகளாகத்தான் இருந்து வரு கின்றன. ஒட்டகங்கள் முதலில் புல் நிறைந்த பிரதேசங்களில்தான் இருந்தன. பின்பு அவை ஆசியாவைச் சென்றடைந்து, அவ்விடங்களில் பாலைவனங்களில் வசிக்க ஆரம்பித்து, அப் பிரதேசத்திற்கேற்பத் தங்கள் வாழ்க்கை பழக்க வழக்கங்களை வெகு விரைவில் மாற்றிக் கொண்டு விட்டன. ஒட்டகத்தின் உடலில் கசியும் ஒருவகைத் திரவம் முன்பு வியர்வையாகி ஆவியாக மாறிக் கொண்டிருந்தது. ஆனால், அவை பாலைவனத்தில் வாழத் தொடங்கிய பின் அவற்றின் உட லில் கசியும் திரவம் வியர்வையாக மாறி வீணாவதில்லை. பாலைவன வறட்சியால் உண்டாகும் நீர் வேட்கையைத் தணிக்க அது பயன்படுகிறது. எனவே வெப்பம் மிகுந்த பாலைவனப் பகுதிகளிலும் தண்ணீர் தேவைப்படாமல் நீண்ட காலம் சமாளிக்கும் தன்மையை ஒட்டகங்கள் பெற்றன.

ஆர். சி. மதிராஜ்,
கச்சிராயபாளையம்.

சந்திரிகாவைச் சந்தியுங்கள்!

சர்க்கஸ் பார்க்க வந்தவர்கள் வைத்தகண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தார்கள். மெல்லிய பேண்டு இசை. பளபளப்பான சர்க்கஸ் உடையோடு அரங்கத்திற்குள் மின்னலாக ஓடி வருகிறாள் ஒரு புன்சிரிப்புச் சிறுமி. ஏழு வயதுதான் இருக்கும். அரங்கை வலம் வந்து நிமிர்கிறாள். சர்க்கஸ் கோமாளி, சைக்கிள் சக்கர அளவுக்கான இரும்பு வளையங்களோடு எதிரே வந்து நிற்கிறார். அவர் ஒரு வளையத்தைத் தூக்கி வீசுகிறார். அதை வாங்கி, வளைந்து வளைந்து ஆடியபடி தலை வழியாக இடுப்புக்குக் கொண்டு வருகிறாள் சிறுமி. அவள் இடுப்பில் அது பம்பரமாகச் சுழல்கிறது. இல்லை இல்லை இடுப்பை வளைத்து ஆடி அதை பம்பரமாகச் சிறுமி ஆட்டி வைக்கிறாள்! கோமாளியிடமிருந்து இரண்டாவது சக்கரம் வீசப்படுகிறது. அதையும் வாங்கி, இடுப்பில் ஆட வைக்கிறாள். இப்பொழுது இரண்டு வளையங்களும் இடுப்பில் சக்கரமாக ஆடுகின்றன! மூன்றாவது வளையம் வருகிறது. அதுவும் சேர்ந்து கொள்கிறது! 4வது, 5வது வளையங்களுக்கும் இதே கதி! சிறுமியின் இடுப்பில் ஐந்து சக்கரங்களும் படாதபாடுபடுகின்றன! இவற்றை ஒவ்வொன்றாகத் தரையில் நழுவ விட்டு, ஆடிக் கொண்டே கட்டை விரலால் நெம்பி இடுப்புக்குக் கொண்டு வந்து ஆடுகிறாள். மறுபடி ஐந்து வளையங்களும் ஒன்றாக இடுப்பில் ஆடுகின்றன! இவற்றை ஒவ்வொன்றாகத் தலைவழியாக எடுத்து வீசுகிறாள் சிறுமி!



● சந்திரிகா



சர்க்கஸ் பார்க்க வந்தவர்களின் கைத்தட்டல் சப்தம் காதைப் பிளக்கிறது. சர்க்கஸ் காட்சி முடிந்ததும் சிறுமியைப் பாராட்ட அரங்கத்திற்குப் பின்னால் போனோம். அங்கே ஏற்கெனவே சிலர் சிறுமியைப் பாராட்டிக் கொண்டிருந்தனர். மிக அதிக அளவில் குழந்தைகள் தான்.

"என்னமோ ஆடினே! உன் உடம்பில் எலும்பு, சதை ஏதாவது இருக்கா? இல்லே ரப்பர்ல பண்ணின உடம்பா?"

* மழை பெய்யாத போதே குடை பிடித்து வரும் கரடியார்.



சிறுமி சிரித்துக் கொண்டே கைகூப்பினாள். கலர் பாக்ஸ், பேனா, ரிப்பன், ஆப்பிள், வாட்டர் பேக் இப்படிப் பல விதமான பொருள்கள் அன்பளிப்பாக அந்தச் சிறுமிக்குத் தரப்பட்டன. ஒரு பிஸ்கட் பாக்கெட், ஒரு மௌத்ஆர்கன், டிபன் செட் கூட அதில் இருந்தன! அந்த நேரத்தில் தங்களது பாராட்டைத் தெரிவிக்க, கைவசம் அவர்களிடம் என்ன இருந்ததோ, அதை அன்போடு கொடுத்தார்கள்!

''உன் பெயர் என்ன?''

''இந்த ரிங் ஆட்டத்துக்கு என்ன பெயர்? இப்படி ஆட எத்தனை வருஷம் பயிற்சி எடுத்தே?''



* சைனீஸ் தட்டு சுற்றும் ஆட்டம்

குழந்தைகளின் கேள்விகளுக்கு அந்தச் சிறுமியால் பதில் கூற முடியவில்லை. அங்கே வந்த சர்க்கஸ் பொறுப்பாளர் 'வீகே', அந்தச் சிறுமிக்கு தமிழ் புரியாது என்பதையும், அவள் நேபாளத்தைச் சேர்ந்தவள் என்றும் கூறிப் புரிய வைத்தார். சிறுமியின் பெயர் சந்திரிகா என்றும், செல்லப் பெயர் 'சந்துரு' என்றும் கூறினார். குழந்தைகளுக்குச் சற்று ஏமாற்றமாகத்தான் இருந்தது. அவளிடம் கைகுலுக்கிக் கொண்டு விடைபெற்றனர். இரண்டொரு புகைப்படக்காரர்

* சீசா ஜம்பிங்





களும், பத்திரிகைக்காரர்களும் படமெடுத்தனர்.

நேபாளம், ஆங்கிலம் அறிந்த ஒருவரை வைத்துக் கொண்டு ரப்பர் சிறுமி சந்திரிகாவிடம் கோகுலம் வாசகர் சார்பில் பேசினோம்.

ரப்பர் சிறுமி என்று அழைக்கப் படும் சந்திரிகா என்ற சந்துருவுக்கு ஏழு வயது கூட நிரம்பவில்லை. நேபாளத்தைச் சேர்ந்தவள். அப்பா தேஜ்பகதூர். அம்மா கமலா சிரேஷ்டா. இவர்களும் கூட சர்க்கஸில்தான் பணிபுரிகிறார்கள். சந்திரிகாவுக்கு இரண்டு அக்காக்கள். இவர்களும் கூட அமர் சர்க்கஸில்தான் கலைஞர்களாக இருக்கிறார்கள். எல்லோருமே சர்க்கஸ் கலைஞர்கள் என்பதால், சந்திரிகாவுக்கும் சர்க்கஸில் ஈடுபாடு ஏற்பட்டதில் வியப்பு ஏதுமில்லை. ஐந்து வயது முடியுமுன்பே சந்திரிகா விரும்பி 'ஹூலா ஹூப்' என்ற இரும்பு வளைய ஆட்டத்தைக் கற்கத் தொடங்கி விட்டாள். கடுமையான பயிற்சி. ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்புதான் அரங்கேறி, காட்சிகளில் கலந்து கொண்டாள்.

சர்க்கஸை அதிகமாக ரசிப்பவர்கள் குழந்தைகள்தான். அவர்களுடைய கவனத்தை 'குட்டிப் பெண்' சந்திரிகா கவர்ந்து கொண்டதில் எவ்விதமான வியப்பும் இல்லை.

''சர்க்கஸில் மற்ற எத்தனையோ நிகழ்ச்சிகள் இருக்க, இந்தக் கஷ்டமான 'ஹூலா ஹூப்' வளைய ஆட்டத்தை ஏன் கற்றுக் கொண்டாய்?'' என்று கேட்டோம்.

''எங்க அமர் சர்க்கஸை நீங்க பார்த்தீர்களா? அந்தரத்தில் ஊஞ்சலாடுவது, கயிற்றின் மேல் நடப்பது, துப்பாக்கி சுடுவது போன்ற சர்க்கஸுக்கே உரிய விளையாட்டுக்கள் இதில் இருக்கின்றன. இவற்றிலிருந்து மாறுபட்ட ஒரு விளையாட்டை நான் கற்று, ஆட விரும்பினேன். அதனால்தான் கஷ்டமாக இருந்தாலும் இரண்டு வருஷம் இடை விடாத பயிற்சி எடுத்து இதையே கற்றுக் கொண்டேன். நல்ல வரவேற்பு. அதிலும் குழந்தைகள் மிக உற்சாகமாக வரவேற்கிறார்கள். காட்சி முடிந்ததும் தேடி வந்து பாராட்டுகிறார்கள். நீங்கள் தான் பார்த்தீர்களே?''

''இதுக்கெல்லாம் காரணம் உன் திறமைதானே?''

''என் திறமை ஒரு காரணமாக இருந்தாலும், இந்த அளவுக்கு எனக்குப் பயிற்சி கொடுத்து இன்னமும் கூட மேலும் மெருகூட்ட வழிகளைக் காட்டி விடும் பயிற்சியாளர் தில்லு ஜோசப் அவர்களும் உற்சாகமூட்டி வரும் பொறுப்பாளர் வீகே சார் அவர்களும் தான் முக்கிய காரணம்.''

''காலையில் எப்போ எழுந்திருப்பே? தினமும் தனிப் பயிற்சி செய்கிறாயா?''

''நான் ஹூலா ஹூப் ஆட்டத்துடன், சைக்கிள் வித்தைகளையும் வேறு சில ஆட்டங்களையும் கூட சர்க்கஸில் செய்து காட்டுகிறேன். இரவுக் காட்சி முடிய நேரமாகி விடும். இருந்தாலும் காலையில் ஆறு மணிக்குள் எழுந்து விடுவேன். காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, பால் சாப்பிடுவேன். பிறகு ஒரு மணி நேரம் 'ரிங்'

பயிற்சி. அப்புறம் இலேசான உணவு. குளியல். எனக்கு இங்குள்ள மிருகங்களிடம் ரொம்ப ஈடுபாடு. எங்க சர்க்கஸில் ஒரு நீர் யானை, இரண்டு கரடிகள், ஒன்பது சிங்கங்கள், மூன்று ஒட்டகங்கள், பதினைந்து நாய்கள், ஐந்து யானைகள் இருக்கின்றன. இவைகளையெல்லாம் ஒரு ரவுண்டு போய்ப் பார்த்து 'ஹலோ' சொல்லிட்டு வருவேன். நீர் யானைகிட்டதான் எல்லோருக்கும் ரொம்பப் பயம். பத்தடி தள்ளித்தான் நிற்பாங்க. குட்டி யானையை எனக்கு ரொம்பப் பிடிக்கும். அதோடதானே போட்டோ எடுத்தீங்க? அதோட இங்கே இருபத்திரண்டு பஞ்சவர்ணக் கிளிகள் இருக்கு. எல்லாம் ஆஸ்திரேலியாவில் இருந்து வந்தவை. நான் போய் நின்னாலே அவை ஆசையா கத்தும். எல்லாத்தையும் பார்த்துட்டு, என்னைப் போன்ற மற்ற சர்க்கஸ் கலைஞர்களையும் பார்த்து 'ஹலோ' சொல்லிட்டு வருவேன். அப்புறம் மேக்கப் போட்டுக்கிட்டு காட்சிக்குப் போகத்தான் சரியா இருக்கும். இடையில் லேசான உணவுதான்.''

கொண்டு போயிருந்த இரண்டொரு கோகுலம் இதழ்களை சந்திரிகாவிடம் தந்தோம். மொழி தெரியவில்லை என்றாலும், ஆர்வத்தோடு புரட்டிப் பார்த்தாள். ''நிறைய படங்கள் இருக்கே!'' என்று வியந்தவள், ''என்ன விலை?'' என்று கேட்டு, மூன்று ரூபாய் என்பதை அறிந்து கொண்டதும் திகைத்துப் போய்ப் பாராட்டினாள். ''கோகுலம் நிர்வாகிகளுக்கும், பல்லாயிரக்கணக்கான அதன் வாசகக் குழந்தைகளுக்கும் எனது அன்பு வணக்கம், பாராட்டுகள்'' என்றாள்.

திருச்சி பகுதிக் குழந்தைகள் அதிர்ஷ்டசாலிகள். ஏன் தெரியுமா? வெகு விரைவில் சென்னை நகரில் இருந்து கிளம்பப் போகும் 'அமர் சர்க்கஸ்' அடுத்து முகாமிடப் போவது திருச்சி நகரில்தான்!

- ரே

அட்டை வண்ணப்படம், மற்ற படங்கள் : கோபிநாத்



வழுக்கி விழுந்திடாமலே
வாழை மரத்தில் ஏறவும்
உழைத்துப் பயின்றால் முடியுமே
உறுதி வேண்டும் மனதிலே!

இரும்புப் பட்டை தன்னையே
இழுத்துத் தீட்டத் தீட்டவே
அரிவாள் கிடைக்கும் எதனையும்
ஆக்கலாமே முயற்சியில்!

குயிலைப் போலப் பாடவும்
கோல மயிலாய் ஆடவும்
பயிற்சி செய்தால் முடியுமே
பழக வேண்டும் தினமுமே!

வழுக்கும் மரத்தின் உச்சியில்
வளைத்துக் கட்டும் உரியையும்
பழக்க மான மனிதனோ
பாய்ந்தே ஏறி நொறுக்குவான்.

தன்னால் எதுவும் முடியுமோ
தகுதி தானே உயருமோ
உன்னால் முடியும் உழைத்திடு
உழைப்பினாலே உயர்வு கொள்!

- செல்ல கணபதி

சார் தபால்!

பரதனை நீங்க பிரிக்க முடியாது!

படிக்கப் படிக்க சுவை!

★ கடல் அழகி வண்ணப் படக்கதை அருமை. படிக்கப் படிக்க சுவையாகச் சென்றது. செல்வத்தின் ஓவியம் கதைக்கு மேலும் மெருகூட்டியதைக் குறிப்பிட்டே ஆக வேண்டும். - அத்தங்கரை பி. கோவிந்தராஜ், கும்பகோணம் எஸ்.கே. மூர்த்தி, திருவொற்றியூர் ப. கோகுலப் பித்தன், மதுக்கூர் மு. சாதிக் அலி, திருத்தங்கல் தீபன் சக்ரவர்த்தி, ஆனைக்கல் மேடு சி. மாதேஸ்வரன், பவித்திர மாணிக்கம் செ. பிரகாஷ், மணியனூர் பி. ராஜம்மாள், மங்கம்மாள், பழனி வேல், முத்துவேல்.

குள்ளர்கள் தேவை!

★ 'பட்டுக் குல்லா, பறந்து போ' கதை சூப்பர்! இது போன்ற 'குள்ளர்கள்' கதையைத் தொடர்ந்து வெளியிடவும். - திருத்தங்கல் எஸ். முரளீதரன், மதுரை வைகை வசந்தன், சேலம் முத்துவேலன்.

டபுள் லாபம்!

★ 'எங்கள் ஊரில் நடந்தது' சம்பவங்கள் அனைத்தும் சிரிக்கும்படி இருந்தாலும், சிந்திக்கவும் செய்தது! - மதுரை வசந்த், அத்தங்கரை பி. கோவிந்தசாமி, மதுக்கூர் மதுகைசாம், மதுரை டி.ஆர். ரமேஷ் குமார், பெரம்பலூர் காம ராஜ், ராமு, ஸ்ரீதேவிநகர் சிவா.

இப்பத்தான் தெரிஞ்சது!

★ தொட்டால் மரவட்டை சுருள்வது தன்னைக் காத்துக் கொள்வதற்கே என்பதையும், அது சுத்த சைவம் என்பதையும் இந்த மாத கோகுலம் படித்த பின்புதான் தெரிந்து கொண்டேன் - கிருஷ்ணாபுரம் ரமேஷ், அத்தங்கரை ராஜா, அகரக் கடம்பனூர் ஆர். சத்தியன், சங்கராபுரம் கே. கவை.

★ நூறு ரூபாய் ரகசியம் அதற்குள் முடிந்து விட்டதே! பயமும் சுவையும் மிக்க நல்ல தொடர் அது! - மு. பாலசுப்ரமணியன், முத்து ராமலிங்கபுரம்.

★ பூவண்ணன் சார்! நீங்கள் பரதனை கோகுலத்திலிருந்து வேண்டுமானால் பிரித்து விடலாம். ஆனால் என் போன்ற ஆயிரக்கணக்கான கோகுலம் வாசகர்களின் உள்ளங்களிலிருந்து பிரிக்கவே முடியாது! - ப. கணேஷ், சென்னை - 19.

★ பரபரப்போடும் விறுவிறுப்போடும் கடைசி அத்தியாயம் இருந்தது சார். பரதன் எங்கள் மனதில் நீங்கா இடம் பெற்று விட்டான்! - எஸ். காமராஜ், காணாப்பூர்.

★ நூறு ரூபாய் ரகசியம் கடைசி வரை விறுவிறுப்புக் குறையாமல் இருந்தது. தன் உயிரையும் பொருட்படுத்தாது கள்ள நோட்டு கும்பலைப் பிடித்துக் கொடுத்த பரதனுக்கு என் சார்பிலும், என் நண்பர்கள் சார்பிலும் மகத்தான பாராட்டுக்கள்! - கு. கருணாநிதி, சோழன் மாளிகை.

★ டாக்டர் பூவண்ணனின் நூறு ரூபாய் ரகசியம் தொடர் மிக அருமை. பரதனைப் போன்றோர் தன் உருவம் குள்ளமாக உள்ளதே என்று வருந்தாமல் துணிச்சலுடன் செயல்பட்டால் எடுத்த காரியம் எதையும் முடிக்கலாம்! - வெள்ளிக்கிடக்கு இரா. முருகானந்தம், இரா. சசிகலா.

ஃபர்ஸ்ட் ரேங்க்!

★ ஜூன் இதழில் வெளியான 'ஃபர்ஸ்ட் ரேங்க்!' - கதை அற்புதம். எவ்வளவு திறமை இருந்தாலும் தலைக் கனம் கூடாது என்பதை வெகு அழகாகப் புரிய வைத் தது. - முத்து ராமலிங்கபுரம் சிறுவர் சங்க உறுப்பினர்கள், ஆலப்பாக்கம் கி. சிவா, ஜோதிநகர் ப. கணேஷ், காணாப்பூர் எஸ். காமராஜ், வி. வெங்கடேஷ், கடலூர் ராஜசேகர், திருப்புறம்பியம் சரவணகுமார்.

சூப்பர்...!

★ இந்த மாதம் வெளியான 'சிரிப்....' ஒவ்வொன்றையும் முழுமையாகப் படிக்கவே முடியவில்லை. படித்து முடிப்பதற்கு முன்பாகவே சிரிப்பு பீறிட்டுக் கொண்டு வந்தது! - திருச்செந்தூர் தில்லை நடராஜா.

சாதனைச் சிறுமி

★ வரலாற்றின் சாதனைப் பக்கங்களில் இடம் பெறுவது எளிதல்ல. சொந்த கருத்துக்களைப் பற்றிக் கவலைப்படாமல் இடையறாது முயல வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டு அந்த நீச்சல் (மீன்) சிறுமியின் கதை. - கருங்காலி வி. கார்த்திகேயன்.


இது நியாயமா?


★ சார், பிருந்தாவனத் துணுக்குப் பகுதியைப் போடாமல் ஏமாற்றி விட்டீர்களே! இது நியாயமா? - ப. ராகவன், திருவொற்றியூர்.

வண்ணக்கடல்!

★ வண்ண வண்ண மேசில்கள் வழங்கி எங்களை மகிழ்ச்சிக் கடலில் திளைக்க வைத்து விட்டீர்களே. - அம்மையார் குப்பம் மா.வெ. கிருஷ்ணன், கடாரங்கொண்டான் பவானி, காவேரிப்பட்டணம் கே. சோமசேகர்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி. ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் ரூ. 360/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் ரூ. 180/-.


ஐ
லைக்
இட்!
yankee doodle
yankee doodle
ice creams
For Details Contact:
SRI VENKATADRI ENTERPRISES
Flat 14, 250, Lloyds Road, Madras 86. Ph: 8278807


ஐ
லைக்
இட்!
yankee doodle
yankee doodle
ice creams
For Details Contact:
SRI VENKATADRI ENTERPRISES
Flat 14, 250, Lloyds Road, Madras-86. Ph: 8278807

REGISTERED NO. TN MS (S) 281
Registered as Newspaper in Srilanka

